




# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com








CHENNAI Volume- 3 Issue:177 11-01-2026 ஞாயிற்றுக்கிழமை Free E- Paper ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி


## இன்றைய பஞ்சாங்கம்

11.01.2026 மார்கழி 27
ஞாயிற்றுக்கிழமை

சூரிய உதயம் 6.33

திதி:
இன்று பிற்பகல் 1.42 வரை அஷ்டமி பின்பு நவமி.

நட்சத்திரம்:
இன்று இரவு 9.33 வரை சித்திரை பின்பு சுவாதி.

யோகம் :
இன்று இரவு 8.50 வரை சுகர்மம் பின்பு திருதி.

கரணம் :
இன்று அதிகாலை 1.08 வரை பாலவம் பின்பு பிற்பகல் 1.42 வரை கௌலவம் பின்பு தைதுலம்.

அமிர்தாதி யோகம் :
இன்று காலை 6.32 வரை யோகம் சரியில்லை பின்பு சித்த யோகம்.

சந்திராஷ்டமம்
இன்று இரவு 9.33 வரை பூரட்டாதி பின்பு உத்திரட்டாதி.

நல்ல நேரம்
காலை 7.30 – 8.30.
மாலை 3.30 – 4.30.
இராகு காலம்
மாலை 4.30 – 6.00.
எமகண்டம்
பிற்பகல் 12.00 – 1.30.

குளிகை
பிற்பகல் 3.00 – 4.30.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# 200 தொகுதிகளுக்கு மேல் வெற்றி; முதல்வர் ஸ்டாலின் நம்பிக்கை





**சென்னை, ஜன.11:** சென்னையில் நடந்த பொங்கல் விழாவில் முதல்வர் ஸ்டாலின் கலந்து கொண்டு உற்சாகமாக சிலம்பம் சுற்றினார். விழாவில் பேசிய அவர், 'வரும் சட்டசபை தேர்தலில், 200 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெறுவோம் என நம்பிக்கை தெரிவித்தார்.

சென்னை கொளத்தூர் சட்டமன்ற அலுவலகத்தில் சமத்துவ பொங்கல் விழா நடந்தது. இந்த விழாவில் முதல்வர் ஸ்டாலின் தனது மனைவி துர்காவுடன் கலந்து கொண்டார். அவர் மக்களுக்கு பொங்கல் பரிசுகளை வழங்கினார்.

விழாவில் பங்கேற்றவர்களுக்கு இனிப்புகளை ஸ்டாலின் வழங்கினார். பசுக்களுக்கும் உணவளித்தார். அங்கு நடந்த கொண்டாட்டத்தில் பங்கேற்ற அவர், உற்சாகமாக சிலம்பம் சுற்றினார். முதல்வர் சிலம்பம் சுற்றியதை கண்டதும், அங்கிருந்த சிலம்பப்பயிற்சி மாணவர்கள், கட்சியினர் கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

### மகிழ்ச்சி

நிகழ்ச்சியில் முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: தமிழர் திருநாளாக இருக்கும் பொங்கல் திருநாளை எழுச்சியோடு கொண்டாடுகிற இந்த சிறப்பான நேரத்தில் உங்களை எல்லாம் சந்தித்து, நம்ம கொள்ளத்தூர் தொகுதியில் இருக்கக்கூடிய கட்சியினருக்கு பொங்கல் வாழ்த்து தெரிவிக்கும் வாய்ப்பு முன் கூட்டியே கிடைத்து இருக்கிறது. நமது தொகுதி என்றால் சிறப்பு இருக்கும், மகிழ்ச்சி இருக்கும், ஆரவாரம் இருக்கும்.

கொளத்தூர் நிகழ்ச்சிக்கு நான் வரும்போது சொல்வது உண்டு. என்ன தான் நான் முதல்வராக, பல்வேறு மாவட்டங்களில் நடக்கும் அரசு நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி, கட்சி நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி, பொது நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி, அந்த நிகழ்ச்சியில் அடையும் மகிழ்ச்சியை விட கொளத்தூரில் நடக்கும் நிகழ்ச்சியில் ஒரு எனர்ஜி எனக்கு வந்துவிடுகிறது.

### 50 சதவீதம்

பொங்கல் விழாவை இன்று நாம் சிறப்பாக கொண்டாடி கொண்டு இருக்கிறோம். திமுக அரசு பொறுப்பேற்ற பிறகு ஆற்றிய சாதனைகளை எல்லாம் உங்களுக்கு எடுத்து சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. நீங்கள் மக்கள் இடத்தில் எடுத்து சொல்ல வேண்டும். ஏற்கனவே நீங்கள் தேர்தல் களத்தில் ஆற்ற வேண்டிய பணிகளில் 50 சதவீதம் முடித்துவிட்டீர்கள், இன்னும் 50 சதவீதம் தான் பாக்கி இருக்கிறது. இன்னைக்கு பல்வேறு கட்சிகளை சேர்ந்தவர்கள், பாஜவில் இருக்க கூடியவர்கள் கூட, என்ன சொல்கிறீர்கள் என்றால் திமுகவினர் போல் யாரும் வேலை செய்ய முடியாது என்கின்றனர்.

### மாபெரும் வெற்றி

:கொளத்தூர் தொகுதி மட்டுமல்ல ஒட்டுமொத்த தொகுதிகளிலும் இருக்கும் திமுகவினர் ஆற்றுகிற பணிகள் எல்லாம் பார்க்கும் போது, ஏற்கனவே நான் 200 தொகுதிகளுக்கு குறையாமல் வெற்றி பெறுவோம் என்று சொல்லி இருந்தேன்.

நமது கூட்டணி நிச்சயமாக வெற்றி பெறும். இப்பொழுது நாம் செய்து இருக்கும் பணிகளை எல்லாம் பார்க்கும் போது, 200 தொகுதிகளையும் தாண்டி வரும் என்ற நம்பிக்கை எனக்கு வந்து இருக்கிறது. அந்த நம்பிக்கையுடன் பொங்கல் விழாவை கொண்டாடுகிறோம். இந்த நேரத்தில் உங்கள் அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துக்களை தெரிவித்து, வரும் தேர்தலில் மாபெரும் வெற்றியை பெறுவதற்கு உறுதி எடுப்போம், சபதம் எடுப்போம். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

# "ஒவ்வொரு சமூகமும் தன்னிறைவு பெற்றால், முழு நாடும் தன்னிறைவு பெறும்!"

## அமித் ஷா



**ஜோத்பூர், ஜன.11:** ஜோத்பூரில் நடைபெற்ற மகேஸ்வரி சமூகத்தினருக்கான உலக மாநாடு மற்றும் கண்காட்சியில் உரையாற்றிய அமித் ஷா, "சமூகக் கூட்டங்களோ அல்லது சமூக நிகழ்வுகளோ ஏற்பாடு செய்யப்படும்போதெல்லாம், சில முற்போக்குவாதிகள் என்று சொல்லிக் கொள்பவர்கள் அவற்றில் கலந்துகொள்பவர்களை விமர்சிக்கிறார்கள். நானும் தனிப்பட்ட முறையில் இதுபோன்ற பலவிமர்சனங்களை எதிர்கொண்டிருக்கிறேன்.

நமது சமூகங்களின் கட்டமைப்பு மற்றும் இதுபோன்ற பெரிய சமூகக் கூட்டங்கள் உண்மையில் இந்தியாவை வலுப்படுத்துகின்றன. அவை ஒருபோதும் நாட்டைப் பிளவுபடுத்துவதில்லை. ஒவ்வொரு சமூகமும் அதன் ஏழ்மையான உறுப்பினர்களின் பாதுகாப்பு மற்றும் நலனுக்குப் பொறுப்பேற்றால், முழு நாடும் தானாகவே வளர்ச்சியடையும். ஒவ்வொருசமூகமும் தன்னிறைவு பெற்றால், முழு இந்தியாவும் தன்னிறைவு பெறும்.

மகேஸ்வரி சமூகத்திலிருந்து வெளிவந்த ரத்தினங்கள் இந்த நாட்டை ஒவ்வொரு துறையிலும் அலங்கரித்து, நகைகளால் அலங்கரிக்கப்பட்ட ஒருவரைப் போலப் பிரகாசிக்கச் செய்கின்றன. நாட்டில் மிக உயர்ந்த பதவிகளை அடைந்த பிறகும், எந்தவொரு சமூகமாவது தனது வேர்களுடன் தொடர்பில் இருக்கிறது என்றால், அது மகேஸ்வரி சமூகம் தான்.

நாடு சுதந்திரம் அடைந்து, சுதந்திரத்துக்குப் பிறகு முன்னேற வேண்டிய நேரம் வந்தபோது, தன்னிறைவு பெற, தொழில் துறைத் துறையில் முழு உலகின் எல்லைகளையும் கடந்து முன்னேற வேண்டியிருந்தபோது, மகேஸ்வரி சமூகம் ஒருபோதும் பின்வாங்கவில்லை. அது உற்பத்தித்துறையாக இருந்தாலும், உற்பத்தி மையங்களாக இருந்தாலும், செல்வம் ஈட்டுவதாக இருந்தாலும் அல்லது தொழில்நுட்பமாக இருந்தாலும், இந்த அனைத்துத் துறைகளிலும் மகேஸ்வரி சமூகம் ஒரு முற்போக்கான சமூகம் என்ற தனது அடையாளத்தை எப்போதும் வெளிப்படுத்தியுள்ளது.

சில ஆண்டுகளுக்கு முன்பு, நமது நாட்டின் சுதந்திரத்தின் 75 ஆண்டுகளைக் கொண்டாடினோம். நாட்டுக்காகத் தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்தவர்கள் நினைவுகூரப்பட்டனர். இதற்குப் பின்னால் நான்கு நோக்கங்கள் இருந்தன. முதல் நோக்கம், 1857 முதல் 1947 வரையிலான சுதந்திரத்திற்கான மாபெரும்போராட்டத்தை நமது இளம் தலைமுறையினருக்கு அறிமுகப்படுத்துவதாகும். இரண்டாவது நோக்கம், கடந்த 75 ஆண்டுகளில் நாம் அடைந்த சாதனைகளைப் பற்றி நமது இளம் தலைமுறைக்குத் தெரிவிப்பதாகும்.

மூன்றாவது, 140 கோடி இந்தியர்களின் மனதில் இந்தியா என்ற கருத்தை விதைப்பதாகும். நான்காவது பணி மிகவும் முக்கியமானது. பிரதமர் மோடி ஒரு சபதம் எடுத்தார். ஆகஸ்ட் 15, 2047 அன்று சுதந்திரத்தின் நூற்றாண்டு விழா கொண்டாடப்படும்போது, நாடு சுதந்திரம் பெற்று 100 ஆண்டுகள் நிறைவடையும்போது, இந்தியா உலகின் ஒவ்வொருதுறையிலும் முன்னணியில் இருக்கும் என்று அவர் உறுதியேற்றுள்ளார்" என்று அமித் ஷா கூறினார்.

# சோம்நாத் கோவிலில் டிரோன் நிகழ்ச்சியை கண்டு களித்தார் பிரதமர் மோடி



**அகமதாபாத், ஜன.11:**

குஜராத் மாநிலத்தில் உள்ள பிரசித்தி பெற்ற சோம்நாத் கோவிலின் 1,000 ஆண்டு கால மீட்சியைக் குறிக்கும் வகையில் சுயமரியாதை திருவிழா நேற்று முன்தினம் தொடங்கியது.

வேத மந்திரங்கள் முழங்க சிறப்பு பூஜைகள்-வழிபாடுகளுடன் சுயமரியாதை திருவிழா 4 நாட்கள் நடைபெறுகிறது.

இந்நிலையில் பிரதமர் மோடி இன்று இரவு சோம்நாத் கோவிலுக்குச் சென்றார். அங்கு திரண்டிருந்த பாஜகவினர் உற்சாகமாக அவரை வரவேற்றனர்.

இரவு 8 மணியளவில் கோவிலில் நடைபெற்ற தெய்வீக ஓம்கார மந்திர உச்சரிப்பில் பங்கேற்றார். அதன்பிறகு அவர் சோமநாதர் கோவிலில் நடைபெறும் டிரோன் நிகழ்ச்சியைக் கண்டு களித்தார்.

இன்று நடைபெற உள்ள சவுரிய யாத்திரை நிகழ்ச்சியிலும் பிரதமர் மோடி பங்கேற்கிறார். வீரத்தையும் தியாகத்தையும் பிரதிபலிக்கும் வகையில் யாத்திரையில் 108 குதிரைகளின் அடையாள ஊர்வலம் இடம்பெறுகிறது. அதன்பின், சோமநாதர் நகரில் நடைபெறும் பொது நிகழ்ச்சி ஒன்றிலும் அவர் கலந்துகொள்கிறார்.

# தமிழக அரசு ஊழியர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டம்! அரசாணை வெளியீடு!



**சென்னை, ஜன.11:** தமிழ்நாடு அரசு ஊழியாகளுக்கு (1.4.2004-க்கு பிறகு பணியில் சோந்தவாகள்) 'தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம்' (டிஏபிஎஸ்) என்ற புதிய திட்டத்துக்கான அசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கான உத்தரவை முதல்வா மு.க.ஸ்டாலின், ஜனவரி முதல் வாரத்தில் வெளியிட்டிருந்த நிலையில், அதற்கான அதிகாரப்பூர்வ அரசாணையை, தமிழக நிதித் துறைச் செயலர் த. உதயசந்திரன் இன்று வெளியிட்டுள்ளார்.

இந்த அரசாணையில், தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டம், ஜன.1 ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வருவதாக அறிவிப்பு இடம்பெற்றுள்ளது.

இந்த அரசாணையின்படி, ஓய்வூதியாகளின் கடைசி மாத ஊதியத்திலிருந்து 50 சதவீதம் ஓய்வூதியம், ரூ.25 லட்சத்துக்கு மிகாமல் பணிக்கொடை வழங்கப்படும் உள்பட பல்வேறு சிறப்பு அம்சங்கள் இடம்பெற்றுள்ளன.

பழைய ஓய்வூதியத் திட்டம், காலிப் பணியிடங்களை நிரப்புதல், சம வேலைக்கு சம ஊதியம் உள்ளிட்ட 10 அம்ச கோரிக்கையை வலியுறுத்தி அரசு ஊழியாகள் மற்றும் ஆசிரியாகளின் கூட்டமைப்பான ஜாக்டோ-ஜியோ, ஃபோட்டா-ஜியோ உள்ளிட்ட அமைப்புகள் போராட்டம் நடத்தி வந்த நிலையில், இவர்களது கோரிக்கையை ஏற்று தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்தை தமிழக முதல்வர் அறிவித்தார்.

இந்த ஜனவரி 1-ஆம் தேதி முதல் ஓய்வுபெறும் அரசு ஊழியர்களுக்கு இந்த ஓய்வூதியத் திட்டம் பொருந்தும் என்றும், ஒன்றாம் தேதிக்கு முன்பு ஓய்வு பெற்றவர்களுக்கான புதிய திட்டமும் கொண்டுவரப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

தற்போது நடைமுறையில் உள்ள ஓய்வூதிய திட்டம் ஜன. 1ஆம் தேதிக்கு முன்பு காலாவதியாகிவிட்டது. ஏற்கனவே முதல்வர் அறிவித்த அறிவிப்பு எப்போது நடைமுறைக்கு வரும் என பலரும் கேள்வி எழுப்பி வந்த நிலையில், இன்று அதற்கான அரசாணை பிறப்பிக்கப்பட்டு நடைமுறைக்கு வந்துவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசு அலுவலாகள் ஓய்வு பெறும் நாளன்று எவ்வளவு ஓய்வூதியம் பெறுவோம் என அறியாமல் ஓய்வு பெறும் நிலை கடந்த 20 ஆண்டுகளாக நீடித்து வந்த நிலையில், ஓய்வூதியம் வழங்குவது குறித்து தகுந்த பரிந்துரைகளை வழங்க அரசு கூடுதல் தலைமைச் செயலா ககன்தீப் சிங் பேடி தலைமையில் குழு அமைத்தாா. இந்த குழுவின் பரிந்துரை மற்றும் அரசின் நிதிநிலை உள்ளிட்ட விவரங்களை ஆராய்ந்த முதல்வர் மு.க. ஸ்டாலின், பழைய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் அரசு அலுவலாகள் மற்றும் ஆசிரியாகளுக்கு கிடைத்து வந்த பல்வேறு பலன்களைத் தொடர்ந்து அளிக்கக்கூடிய புதிய திட்டமாக 'தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத்திட்டத்தை' செயல்படுத்த முதல்வா மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டிருந்தார்.

### இதன் சிறப்பம்சங்கள் என்னென்ன?

தமிழக அரசு அறிவித்துள்ள உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தில் பல முக்கிய அம்சங்கள் இடம்பெற்றுள்ளன.

தமிழக அரசு அலுவலாகள் பெற்ற கடைசி மாத ஊதியத்தில் 50 சதவீதம் உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியமாக வழங்கப்படும்.

இவ்வாறு 50 சதவீதத்துக்கு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியம் வழங்குவதற்கு, பணியாளாகளின் 10 சதவீத பங்களிப்போடு, ஓய்வூதிய நிதியத்துக்குத் தேவைப்படும் கூடுதல் நிதி முழுவதையும் தமிழக அரசே ஏற்கும்.

50 சதவீதம் உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாராகளுக்கு ஆண்டுதோறும் 6 மாதத்துக்கு ஒருமுறை அரசு அலுவலாகளுக்கு வழங்கப்படுவதற்கு இணையான அகவிலைப்படி உயா்வு அளிக்கப்படும்.

ஓய்வூதியதாரா் இறந்துவிட்டால், அவா ஏற்கெனவே பரிந்துரைத்த குடும்ப உறுப்பினாகளுக்கு அவா பெற்று வந்த ஓய்வூதியத்தில் 60 சதவீதம் குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படும்.

# விஜய்க்கு சிபிஐ சம்மன் அனுப்பியுள்ள நிலையில் மத்திய தடய அறிவியல் குழுவினர் கரூரில் ஆய்வு

**கரூர், ஜன.11:** கரூர் வேலுசாமிபுரத்தில் நடைபெற்ற தவெக பிரச்சாரக் கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்த வழக்கை சிபிஐ விசாரித்து வருகிறது.

இந்த வழக்கில் தவெக பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த், தேர்தல் பிரச்சார மேலாண்மை பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜுனா, இணைப் பொதுச் செயலாளர் சிடிஆர். நிர்மல் குமார், கரூர் மேற்கு மாவட்ட செயலாளர் மதியழகன் மற்றும் மாவட்ட ஆட்சியர் தங்கவேல், எஸ்.பி. ஜோஸ் தங்கையா உள்ளிட்ட காவல் அதிகாரிகள் டெல்லியில் உள்ள சிபிஐ தலைமையகத்தில் டிச. 29-ம் தேதி ஆஜராகினர். அவர்களிடம் 3 நாட்கள் விசாரணை நடத்தப்பட்டது.

மேலும், டெல்லியில் உள்ள சிபிஐ தலைமையகத்தில் வரும் 12-ம் தேதி விசாரணைக்கு ஆஜராகுமாறு தவெக தலைவர் விஜய்க்கு சம்மன் அனுப்பப்பட்டுள்ளது.

இந்நிலையில், கரூரில் சம்பவம் நடந்த வேலுசாமிபுரத்தில் மத்திய உள்துறை அமைச்சக விவகாரத் துறை அதிகாரி தலைமையில் மத்திய தடய அறிவியல் ஆய்வகக் குழுவினர் 10-க்கும் மேற்பட்டோர் நேற்று ஆய்வு மேற்கொண்டனர்.

விஜய்யின் பிரச்சார வாகனம் நிறுத்தப்பட்டிருந்த இடம், சாலையின் அகலம் உள்ளிட்டவற்றை அளவீடு செய்தனர்.

அவற்றை வீடியோ பதிவு செய்து, புகைப்படமும் எடுத்துக் கொண்டனர்.







## திருக்குறள் குறள்-497

**அஞ்சாமை யல்லால் துணைவேண்டா எஞ்சாமை
எண்ணி யிடத்தாற் செயின்**



(செய்யும் வழிவகைகமைக்) குறைவில்லாமல் எண்ணித் தக்க இடத்தில் பொருந்திச் செய்தால், அஞ்சாமை அல்லாமல் வேறு துணை வேண்டியதில்லை.

## சிந்திக்க ஒரு நொடி



வாழ்க்கையில்......
கவலைப்படுபவர்கள்
கரையேறுவதில்லை...

கரையேறுபவர்கள்
கவலையே
படுவதில்லை...

**உஷா முத்துராமன்**

### காரைக்கால் 2026 கார்னிவல் திருவிழா போஸ்டர்




காரைக்கால் 2026 கார்னிவல் திருவிழா போஸ்டரை அமைச்சர் திருமுருகன் தலைமையில் கலெக்டர் ரவி பிரகாஷ் வெளியிட்டார்.

### செய்யூரில் கந்தசாமி கோவில் திருவாவடுதுறை ஆதீனம் சாமி தரிசனம்



செய்யூரில் கந்தசாமி கோவில் திருவாவடுதுறை ஆதீனம் சாமி தரிசனம் செய்தார்.

### கர்ப்பிணிகளுக்கு ஊட்டச்சத்து



கரூர் பசுபதீஸ்வரா மகளிர் மேல்நிலைப் பள்ளியில் நேற்று நடந்த நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட முகாமில் கர்ப்பிணிகளுக்கு ஊட்டச்சத்து பெட்டங்களை கலெக்டர் தங்கவேல் வழங்கினார்.

### ஆர்ப்பாட்டம்




திருநெல்வேலியில் சத்துணவு ஊழியர்கள் மற்றும் ஓய்வுபெற்ற சத்துணவு ஊழியர் சங்கத்தினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

### பொங்கல் விழா



திருச்சி வழக்கறிஞர்கள் சங்கம் சார்பில் நீதிமன்ற வளாகத்தில் பொங்கல் விழா நேற்று கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

# கூடாரவல்லி வைபவம் இன்று..!



இது மார்கழி மாதம். மார்கழி மாதத்தின் 27-வது நாள் கூடாரவல்லி வைபவம் நடைபெறும். அதிலும் குறிப்பாக ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவிலில் இந்த கூடாரவல்லி வைபவம் மிக மிக விமர்சையாக நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது. இன்றும் மார்கழி மாதம் 27ஆம் தேதி ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவிலுக்கு சென்றால், இந்த வைபவத்தை நீங்கள் நேரில் தரிசனம் செய்யலாம்.

கூடாரவல்லி என்றால் என்ன தெரியுமா. ஆண்டாள் ரங்கனை திருமணம் செய்வதற்கு மார்கழி மாதம் 2ஆம் தேதி தன்னுடைய விரதத்தை துவங்குகின்றாள். மார்கழி 27ஆம் தேதி ஆண்டாள் அரங்கனை திருமணம் செய்து கொண்டதாக, அதாவது ஆண்டாள் ரங்கனிடம் ஐக்கியமான நாள் இந்த மார்கழி 27ஆம் தேதி. இதைத்தான் கூடாரவல்லி வைபவமாக கொண்டாடுகின்றோம். மார்கழி மாதம் 27 நாள் நோன்பிருந்து ரங்கனை கரம் பிடித்த ஆண்டாளை, பெண்கள் வழிபாடு செய்தால் அவர்களுடைய விருப்பமும் நிறைவேறும் என்பது நம்பிக்கை. குறிப்பாக திருமணம் ஆகாத பெண்கள் இந்த நாளில் ரங்கநாதரையும் ஆண்டாளையும் வழிபாடு செய்யும் போது நீங்கள் வேண்டிய வரங்கள் அப்படியே கிடைக்கும். திருமணமாகாத பெண்களுக்கு நல்ல வரன் அமையும். திருமணம் ஆன பெண்களுக்கு கணவரோடு இல்லற வாழ்க்கை சிறப்பாக அமையும்.



மார்கழி மாதம் பாவை நோன்பு இருந்ததால் ஆண்டாள் விருப்பம் நிறைவேறியது. ஆண்டாள் நாச்சியார் ரங்கனிடம் ஐக்கியமானாள். நீங்கள் இந்த மார்கழி மாதம் கூடாரவல்லி அன்று விரதம் இருந்து ஆண்டாளை வழிபாடு செய்தால், உங்களுடைய விருப்பத்தை அந்த ஆண்டாள் நிறைவேற்றி வைப்பாள் என்பது குறிப்பிடத்தக்கது.

**ஆன்மீக தொகுப்பு:
பா. சீனிவாசன்,
வந்தவாசி.**

# செய்யாறில் திருக்குறள் திருப்பணிகள் திட்ட 14 வது வார பயிற்சி வகுப்பு

**செய்யாறு, ஜன .11:**
திருவண்ணாமலை மாவட்ட தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் செய்யாறு அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நேற்று திருக்குறள் திருப்பணிகள் திட்ட பயிற்சி வகுப்பு நடைபெற்றது. பயிற்சியாளர் கவிஞர் எறும்பூர் கை. செல்வகுமார் தலைமை தாங்கி, வரவேற்றுப் பேசினார்.

பயிற்சியாளர் புலவர் ந.கனக சபை முன்னிலை வகித்தார். மாணவிகள் 26 பேர், மாணவர்கள் 10 பேர், பயிற்சியாளர்கள் இரண்டு பேர், பெரியவர்கள் மூன்று பேர், உள்ளிட்ட 41 பேர் நேற்றைய பயிற்சியில் கலந்து கொண்டார்கள்.



### கபடி போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு கனிமொழி எம்.பி., வாழ்த்து



தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், திராவிட பொங்கலை முன்னிட்டு நடத்தப்பட்ட ஆண்கள் மற்றும் பெண்களுக்கான மாவட்ட, மண்டல அளவிலான மின்னொளி கபடி போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு கனிமொழி எம்.பி., அமைச்சர் கீதாஜீவன், மேயர் ஜெகன் வாழ்த்து தெரிவித்தனர்.

### மருத்துவ காப்பீட்டு அட்டைகளை துணை சபாநாயகர் பிச்சாண்டி பயனாளிக்கு வழங்கினார்



திருவண்ணாமலையில் நேற்று நடந்த மருத்துவ முகாமில் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு அட்டைகளை துணை சபாநாயகர் பிச்சாண்டி பயனாளிக்கு வழங்கினார். கலெக்டர் தர்ப்பகராஜ், மேயர் நிர்மலா உள்ளனர்.

### ஆராய்ச்சி நிலையத்தில் பொங்கல் விழா



திருவண்ணாமலை மாவட்டம் வாழவச்சனூர் அரசு வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பொங்கல் விழா கொண்டாடப்பட்டது.

## பசுபதிபாண்டியன் 14ஆம் ஆண்டு குரு பூஜை



தூத்துக்குடி மாவட்டம் அலங்காரதட்டில் நடைபெற்ற தமிழ்நாடு தேவேந்திர குல வேளாளர் கூட்டமைப்பின் தலைவர் பசுபதிபாண்டியன் 14ஆம்ஆண்டு குரு பூஜையில் அதிமுக முன்னாள் அமைச்சர்கள் கடம்பூர்ராஜூ, சண்முகநாதன், ராஜேந்திரபாலாஜி, ராஜலட்சுமி மற்றும் அதிமுகவினர் மரியாதை செய்தனர்.

### ஸ்ரீ சேஷாத்திரி சுவாமியின் 98-வது ஆராதனை விழா



திருவண்ணாமலையில் ஸ்ரீ சேஷாத்திரி சுவாமியின் 98-வது ஆராதனை விழா நேற்று நடைபெற்றது.

### ஈஸ்வரன் ஆலயத்தில் நயினார்நாகேந்திரன் தரிசனம்



கோவையில் கோட்டை ஈஸ்வரன் ஆலயத்தில் சங்கமேஸ்வரர் மற்றும் அகிலாண்டேஸ்வரியை பாஜக மாநிலத் தலைவர் நயினார்நாகேந்திரன், நிர்வாகிகளுடன் தரிசனம் செய்தார்.

### விற்பனைக்கு பொங்கல் பானைகள்



நெல்லையில் பொங்கலுக்காக விற்பனைக்கு வந்துள்ள பொங்கல் பானைகள், பனை ஓலைகள்.

# செய்யாறு கலைஞர் சிலை அருகே 12-ம் நாள் அன்னதானம்!



**செய்யாறு, ஜன. 11 :**
செய்யாறு கலைஞர் சிலை அருகே 12ம் நாளான நேற்று செய்யாறு கிழக்கு ஒன்றிய செயலாளர் ஞானவேல் ஏற்பாட்டில் அன்னதானம் வழங்கப்பட்டது.

செய்யாறு சட்டமன்ற உறுப்பினர் ஜோதி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்.

இதையடுத்து தலைமை செயற்குகுழு உறுப்பினர் வெங்கடேஷ் பாபு, கிழக்கு ஒன்றிய செயலாளர் ஞானவேல் ஆகியோர் பொதுமக்கள் 500 பேருக்கு அன்னதானம் வழங்கினர். இந்நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்களான ஜே.சி. கே.சீனுவாசன், தினகரன், சி.கே.ரவிக்குமார் மற்றும் தி.மு.க., பொறுப்பாளர்களான மோகனவேல், ஞானசவுந்தரி, புரிசை சிவக்குமார், சீனு, சுந்தரேசன், அருள், சக்திவேல், ரஜினி முருகன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

### கத்தோலிக்கப்பள்ளிகள் ஆசிரியர் மற்றும் அலுவலக பணியாளர் நாள் விழா



நாகர்கோவில் பிஷப் ஹவுஸ் புனித ஜோசப் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற கோட்டாறு மறைமாவட்ட கத்தோலிக்கப்பள்ளிகள் ஆசிரியர் மற்றும் அலுவலக பணியாளர் நாள் விழாவில் அமைச்சர் மனோதங்கராஜ், மேயர் மகேஷ், விஜய் வசந்த்எம்.பி.,தாரகை கத்பர்ட் எம்எல்ஏ பங்கேற்றனர்.

## பெயர் சேர்ப்புக்கு இதுவரை 12.27 லட்சம் பேர் விண்ணப்பம்!

**சென்னை, ஜன.11:**

சென்னை, ஜன. 9 – தமிழ்நாட்டில் வரைவு வாக்காளர் பட்டியல் வெளி யிட்டபின் இதுவரை 12 லட்சத்து 27 ஆயிரத்து 321 பேர், தங்களின் பெயர் சேர்க்க, நீக்க விண்ணப்பங் களை அளித்துள்ளனர். வரைவு வாக்காளர் பட்டிய லில் ஆட்சேபனை குறித்து 21,273 பேர், படிவம் 7 விண் ணப்பத்தை சமர்ப்பித்துள்ள னர். எஸ்.ஐ.ஆர். பணி மூலம் தமிழ்நாட்டில் 97 லட்சம் வாக்காளர்களை நீக்கி வரைவு வாக்காளர் பட்டிய லை தேர்தல் ஆணையம் வெளியிட்டிருப்பது குறிப் பிடத்தக்கது.

## தமிழகத்தில் 2 நாட்களுக்கு கனமழை தொடரும்!

**சென்னை, ஜன. 11:**

தமிழகத்தில் 2 நாள் களுக்கு கனமழை தொட ரும் என்றும் ஒருசில மாவட்டங்களில் மிக கனமழைக்கு வாய்ப்புள்ள தாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. சனிக்கிழமை (ஜன. 10) திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மற்றும் கடலூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புது வை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் கன முதல் மிக கனமழையும், சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, அரியலூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

## திமுக ஆட்சிக்கு ராமதாஸ் பாராட்டு

**திண்டிவனம், ஜன.11:**

பாமக நிறுவனர் மருத்துவர் ச.ராமதாஸ், அவரது மகன் அன்புமணி இடையே கருத்து மோதல் ஏற்பட்டு உள்ள நிலையில், இருவரும் கட்சி தங்கள் கட்டுப்பாட்டில் இருப்பதாக கூறிவருகின்றனர். இதனிடையே, அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியை சந்தித்த அன்புமணி, அதிமுக – பாஜக கூட்டணியில் இணைவதாக தெரிவித்தார். ஆனால், “பாமக நிறுவனர் நான்தான். நான் எடுக்கும் முடிவே செல்லும். அன்புமணி கூட்டணி வைத்தது செல்லாது” என்று ராம தாஸ் அறிவித்தார். இந்நிலையில், பாமகவில் விருப்ப மனு வழங்கும் பணியை திண்டிவனம் தைலாபுரம் தோட்டத்தில் ராமதாஸ் தொடங்கி வைத்தார். அவருடைய மகளும், செயல் தலை வருமான காந்திமதி தேர்தலில் போட்டியிட விருப்ப மனு அளித்தார். அதன்பின்னர், ராமதாஸ் செய்தியாளர்களிடம் கூறும் போது, “பாமகவில் இரு அணிகள் கிடையாது. என் தலைமை யிலான அணிதான் பாமக. வரவிருக்கும் தேர்தலில் நாங்கள் விரும்பிய வெற்றியை பெறுவோம். முதல்வர் மு.க.ஸ்டா லின் தலைமையிலான திமுக ஆட்சி நன்றாகத்தான் இருக்கிறது. பாமக செயல் தலைவர் காந்திமதி சட்டசபை தேர்தலில் போட்டியிடுவார்” என்றார். தொடர்ந்து நிருபர்கள் அவரிடம், “திருமாவளவன் இருக்கும் கூட்டணியில் நீங்கள் இணைய வாய்ப்பு இருக் கிறதா?” என்று கேட்ட கேள்விக்கு, “அரசியலில் எது வேண்டு மானாலும் நடக்கலாம். எதிர்பாராதவிதமாக எல்லாமே நடக்கும். எதுவுமே நடக்காது என்று சொல்ல முடியாது” என்றார்.

## அரசு கல்லூரி ஆசிரியர் கழகம் கோரிக்கை

**சென்னை, ஜன.11:**

உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தை பழைய ஓய்வூதியத் திட்டத்திற்கு இணையாக மாற்றி அரசா ணை வெளியிட வேண்டுமென்று தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகம் கோரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பாக சங்கத்தின் பொதுச் செயலாளர் சோ. சுரேஷ் விடுத்துள்ள அறிக்கையில், “தமிழ்நாடு உறுதியளிக்கப் பட்ட ஓய்வூதியத் திட்டத்தை வரவேற்பதோடு, அத்திட்டத்தை பழைய ஓய்வூதியத் திட்டத்திற்கு இணையான திட்டமாக மாற்றி விரைவில் அறிவிப்பு வெளியிட வேண்டும். இதுவரை பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்திற்கு பெறப்பட்ட ஊழியர்களின் 10 சதவீத நிதியினை, ஊழியர்களின் பொது வைப்பு நிதிக்கு மாற்றி, 6 மாதத்திற்கு ஒருமுறை முன்பணம் பெறும் வசதி வழங்க வேண்டும். ஓய்வு பெறும்போது வட்டி யுடன் முழுத் தொகையையும் வழங்க வேண்டும். ஊழியர் களிடமிருந்து, ஓய்வூதியம் வழங்குவதற்காக ஊதியத்தி லிருந்து 10 சதவீத நிதி பிடித்தம் செய்தல் கூடாது. முழு ஓய்வூ தியம் பெறுவதற்கு குறைந்தபட்ச ஆண்டுகள் நிர்ணயிக்கக் கூடாது. ஓய்வுபெறும்போது ஓய்வூதியத்தில் கம்யூடேஷன் தொகை (தொகுத்துப் பெறும் தொகை) பெறும் வசதி வழங்கப்பட வேண்டும். ஊழியர் அல்லது ஓய்வூதியர் இறந்தால், இறப்பிலிருந்து 7 ஆண்டு அல்லது 65 வயது – இதில் எது முதலில் வருகிறதோ அதனை கணக்கில் கொண்டு, வழக்கம் போல் 100 சதவீத ஓய்வூதியமும், குடும்ப ஓய்வூதியமும் வழங்க வேண்டும்” என கூறப்பட்டுள்ளது.

## 100 புதிய காப்பு வனங்கள் அறிவிக்கை வெளியீடு

**சென்னை, ஜன.11:**




*தமிழ்நாடு அரசு 2021 முதல் 2025 ஆம் ஆண்டு வரை மாநிலம் முழு வதும் “100 புதிய காப்பு வனப்பகுதி களை” அறிவிக்கை செய்துள்ளதை ஆவணப்படுத்தும் விதமாக வனம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் நினைவு சிறப்புப் பதிப்பை வெளியிட்டார்.*

*இந்நடவடிக்கை வனப் பாது காப்பை வலுப்படுத்துதல், சுற்றுச் சூழல் பாதுகாப்பை மேம்படுத்துதல் மற்றும் சட்டப்பூர்வமாகப் பாது காக்கப்பட்ட நிலப்பரப்புகள் மூலம் காலநிலை தாங்குதிறனை உருவாக்குதல் ஆகியவற்றுக்கான தொடர்ச்சியான முயற்சிகளில் ஒரு முக்கிய மைல்கல்லாகும். இந்தியா வின் தேசிய வனக் கொள்கை 1988– இன்படி, நீண்ட கால சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை உறுதி செய்வ தற்காக, நாட்டின் புவியியல் பரப்பள வில் 33 சதவீதத்தை வனங்கள் மற்றும் பசுமை பரப்பின் கீழ் கொண்டு வரு வது நோக்கமாகும். தமிழ்நாடு இந்த தேசிய இலக்கை நோக்கித் தொடர்ச்சியாக முன்னேறி வருவதுடன், தற்போது 24.47 சதவீத வனங்கள் மற்றும் பசுமைப் பரப் பைக் கொண்டு அறிவியல் பூர்வமாக மேலும் விரிவுபடுத்துவதற்கு ஒரு வலுவான சூழலியல் அடித்தளத்தை வழங்குகிறது.*

*100 வனப்பகுதிகளை காப்பு வனங்களாக்க தமிழ்நாடு அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ள அறிவிக்கை, தொலைநோக்குப் பார்வை கொண்டதாகவும், முன்னெப்போதும் மேற்கொள்ளப்படாத முன்னோடி முயற்சியாகவும் திகழ் கிறது.*

*கடந்த நான்கு ஆண்டுகளில் மாநிலத்தில் உள்ள பாதுகாக்கப்பட்ட வனங்களின் பரப்பளவு சுமார் 135 சதுர கிலோ மீட்டர் அளவிற்கு விரிவடைந்துள்ளது.*

*திண்டுக்கல், தருமபுரி, மதுரை, கள்ளக்குறிச்சி, தேனி, சிவகங்கை, நாமக்கல், நீல கிரி, சேலம் மற்றும் தென்காசி ஆகிய 10 மாவட்டங்களில், 13,494.95 ஹெக்டேர் பரப்பளவில் புதிதாக அறி விக்கப்பட்ட இக்காப்பு வனங்கள் பரவியுள்ளன. இவற்றுள், புதிதாக அறிவிக்கப்பட்ட தேனி மாவட்டத்தில் உள்ள ஹைவேவிஸ் வன வட்டார மானது 2,836.33 ஹெக்டேர் பரப்பளவுடன் கூடிய மிகப்பெரிய வன வட்டாரமாகும். புத்தக வெளியீட்டு நிகழ்வின் போது வனத் துறை கூடுதல் தலை மைச் செயலாளர் சுப்ரியா சாகு, முதன்மை தலைமை வனப் பாது காவலர் (வனத்துறைத் தலைவர்) ஸ்ரீநிவாஸ் ஆர்.ரெட்டி, முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரினக் காப்பாளர் ராகேஷ் குமார் டோக்ரா, முதன்மை தலைமை வனப்பாது காவலர் மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்திற்கான சிறப்புச் செயலாளர் அனுராக் எஸ். மிஸ்ரா ஆகியோர் பங்கேற்றனர்.*

## மதுரை மலர் சந்தையில் வரலாறு காணாத அளவில் பூக்கள் கடும் விலை ஏற்றம்

**மதுரை, ஜன.11:**



*மதுரை மாட்டுத்தாவணி மலர் சந்தையில் மல்லிகை உள்ளிட்ட பூக்களின் விலை கடும் உச்சத்தை எட்டியுள்ளதாக பூ வியாபாரிகள் தெரி வித்துள்ளனர். வெள்ளியன்று மதுரை மலர் சந்தையில் மல்லிகை பூ கிலோ 6 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வருவது பொது மக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மல்லிகை தவிர, பிச்சி ரூ.1200, முல்லை ரூ.1300, கனகாம்பரம் ரூ.1500, பன்னீர் ரோஸ் ரூ.200, ரோஸ் ரூ.180, பட்டன் ரோஸ் ரூ.120, அரளி ரூ.300, சம்பங்கி ரூ.150, செவ்வந்தி ரூ.100, செண்டு மல்லி ரூ.50, கோழிக்கொண்டை ரூ.100, மரிக்கொ ழுந்து ரூ.150 என பூக்களின் விலை உயர்ந்த நிலை யில் காணப்படுகிறது. தாமரை ஒன்று ரூ.20–க்கு விற்பனை செய்யப்படுகிறது. மலர் சந்தைக்கு நாள்தோறும் 300 கிலோவுக் கும் குறைவான பூக்களே வரத்து இருப்பதாகவும், பனிப்பொழிவு காரணமாக மல்லிகை விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டு ள்ளதாகவும் வியாபாரி கள் தெரிவித்துள்ளனர். இதன் காரணமாக வரத்து குறைந்து, விலை மேலும் உயர்ந்துள்ளதாக கூறப்படுகிறது. கொரோனா பெருந்தொற்று காலத்திற்கு பிறகு ஏற்பட்ட ஆண்டுகளில்கூட இத்தகைய விலை யேற்றம் இதுவரை காணப்படவில்லை என்றும், இது வரலாறு காணாத அளவிலான உயர்வு என்றும், பொங்கல் பண்டிகையையொட்டி, இதைவிட இரண்டு மடங்கு விலை உயரும் என்றும் வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும் மதுரை மலர் சந்தையில் மல்லிகை பூ வரத்து முற்றிலுமாக குறைந்துள்ளதால் உசிலம் பட்டி, நிலக்கோட்டை உள்ளிட்ட மலர் சந்தைகளில் ரூ.6000–க்கு மேல் விற்பனை செய்யப்படுகிறது என்றும், பிப்ரவரி மாதத்திற்கு பிறகே மல்லிகை உற்பத்தி அதிகரித்து விலை குறைய வாய்ப்பு இருப்பதாகவும் மாட்டுத்தாவணி மொத்த பூ வியா பாரிகள் தெரிவித்தனர்.*

## அரசின் 50 வகையான சான்றுகளை வாட்ஸ்அப் மூலம் பெறலாம்!

**சென்னை, ஜன.11:**

தமிழக அரசின் தகவல் தொழில் நுட்பத் துறை புதிய முயற்சியாக வாட்ஸ்அப் வழியாக பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்களை வழங்கும் திட்டத்தை செயல்படுத்தியுள்ளது. இதற்கு முன்பு வரை இந்த சான்றி தழ்களைப் பெற அரசு அலுவல கங்கள் மற்றும் மருத்துவமனை களை தேடிச் செல்ல வேண்டிய நிலை இருந்தது. பொது மக்களின் நேரத்தை மிச்சப்படுத்தவும், அவர்களுக்கான சேவையை விரைந்து வழங்கிடவும் தமிழக அரசு வாட்ஸ்அப் நிறு வனத்துடன்கைகோர்த்துள்ளது. இதன் படி, தமிழகத்தில் முதன்முறையாக வாட்ஸ் அப் உடன் இணைந்து பிறப்பு, இறப்புச் சான்றிதழ்களைப் பெறுதல் உட்பட 50 சேவைகளை தமிழ்நாடு அரசு தொடங்கியுள்ளது. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம், நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் அமைச்சர் பி.டி. ஆர் முன்னிலையில் வாட்ஸ் அப் நிறு வன அதிகாரிகள் மற்றும் தமிழ்நாடு அரசின் இ-சேவை மைய அதிகாரி கள் இடையே கையெழுத்தானது. தமிழ்நாடு அரசின் வருவாய்த் துறை சார்ந்த சான்றிதழ்களை, 7845252525 என்ற வாட்ஸ்அப் எண்ணிற்கு குறுஞ் செய்தி அனுப்பி பெறலாம் என்று மெட்டா நிறுவனத்தின் இந்திய தலைவர் அருண் ஸ்ரீனிவாஸ் தெரி வித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில், “மக்களுக்கு இனி அரசுசேவைகள் வாட்ஸ்அப்பில் மிக எளிதாக கிடைக்கும். அதோடு கால தாமதமின்றி விரைவிலேயே சான்றி தழ்கள் கிடைப்பதுதான் இதன் முக்கிய நோக்கம். சான்றிதழ் தொ டர்பான ஆவணங்களையும் பதிவேற்றம் செய்யவேண்டும். பொது மக்கள் குறுந்தகவல் அனுப்பிய ஒரு சில நாட்களில் சான்றிதழ்கள் வாட்ஸ்அப் வழியாகவே அனுப்பப் படும்” என்றார்.

## பொது இடங்களில் அனுமதியின்றி மரங்களை வெட்டினால் ரூ.1 லட்சம் அபராதம்: சென்னை மாநகராட்சி அறிவிப்பு

**சென்னை, ஜன.11:**




*பெருநகர சென்னை மாநகராட்சி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ள தாவது: பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் பசுமைப் பரப்பினை அதிகரித்திடும் வகையில் பல்வகை மரக்கன்றுகள் நடப்பட்டும், குறுங்காடுகள் உருவாக்கப்பட்டும், பராமரிக்கப்பட்டு வருகின்றன. பொது இடங்களில் உள்ள மரங்கள் மற்றும் மரக்கிளைகளை அத்துமீறி வெட்டுபவர்களுக்கு அபராதம் விதித்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டும் வருகிறது.*

*பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள மரங்களின் கிளைகளை அகற்றுதல், காய்ந்து போன மரங்களை அகற்றுதல், மாற்று இடங்களில் மரங்களை நடுதல் மற்றும் மரங்களை அகற்றுதல் உள்ளிட்ட சேவைகளுக்கு இதுவரை அரசு மற்றும் தனியார் விண்ணப்பங்கள் வனத்துறை மூலமாக பெறப்பட்டு, இந்த விண்ணப்பங்கள் மாவட்ட பசுமைக் குழுவிற்கு நேரடியாக அனுப்பப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.*

*இந்த சேவையினை பொதுமக்கள் எளிமையாக பயன்படுத்துவதற்கும் காலதாமதத்தை குறைத்து துரித நடவடிக்கை மேற்கொள்ளும் வகையில் பெருநகர சென்னை மாநகராட்சி ஒரு புதிய முன்னெடுப்பை தற்பொழுது மேற்கொண்டுள்ளது.*

*அவ்வாறாக மரங்கள் அகற்றுதல் மற்றும் மரக்கிளைகள் அகற்றுதல் உள்ளிட்ட சேவைகள் வனத்துறை மூலமாக நேரடியாக விண்ணப்பித்த நிலையை மாற்றி 12.1.2026 முதல் அனைத்து விண்ணப்பதாரர்களும், விண்ணப்பங்களை பெருநகர சென்னை மாநகராட்சி இணையதளம் (https://chennaicorporation.gov.in/gcc/) மற்றும் நம்ம சென்னை செயலி மூலமாக மட்டுமே விண்ணப்பிக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

*அரசு மற்றும் தனியார் விண்ணப்பதாரர்கள் இந்த சேவையை பெறுவதற்கு மாநகராட்சி இணையதளத்தில் பசுமைக் குழு போர்ட்டலில் விண்ணப்பிக்கலாம். மேலும் பெறப்பட்ட விண்ணப்பங்களை பெருநகர சென்னை மாநகராட்சி பூங்கா கண்காணிப்பாளர்/மேற்பார்வையாளர், சமூக ஆர்வலர்கள் மற்றும் வனத்துறை அலுவலர்கள் மூலமாக கள ஆய்வு மேற்கொள்ளப்படும். கள ஆய்வின் ஆய்வறிக்கை, பசுமை குழுவிற்கு அனுப்பப்படும்.*

*பசுமைக்குழுவின் நடவடிக்கை விபரங்கள் குறுஞ்செய்தியாக விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். பெருநகர சென்னை மாநகராட்சியின் இணையதளத்தின் வாயிலாகவும் விண்ணப்பதாரர்கள் தெரிந்து கொள்ளலாம். பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உரிய அனுமதியின்றி பொது இடங்களில் மரங்களை வெட்டுபவர்களுக்கு ரூ.1 லட்சமும், மரக்கிளைகளை வெட்டுதல், மரத்தில் ஆணி அடித்து விளம்பரப் பலகைகள் பொருத்துதல், மரங்களைச் சுற்றி விளக்குகள் பொருத்துதல் உள்ளிட்ட வற்றிற்கு ரூ.15 ஆயிரமும் அபராதமாக விதிக்கப்படும்.*

*இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.*

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389



## நலம் தரும் மருத்துவம்

## வயிறு உப்புசம்: வீட்டிலேயே செய்யக்கூடிய தீர்வுகள்!



வயிற்று உப்புசம் என்பது பொதுவாக பலருக்கும் ஏற்படும் ஒரு பிரச்னையாகும். உலகெங்கிலும் கிட்டத்தட்ட 18 சதவீத மக்கள் வயிற்று உப்புசத்தால் அவதிப்படுகிறார்கள் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

வயிறு வீக்கம் அல்லது உப்புசத்தின் அறிகுறிகள்: உணவு உண்ட பின் வயிறு வீங்கியது போல வயிற்றில் ஒரு அழுத்தமான, சங்கடமான உணர்வு இருக்கும். வாயிலிருந்து ஆசன வாய் வரை செல்லும் செரிமான அமைப்பு காற்றால் நிரப்பப்படும்போது இந்த வீக்கம் அல்லது உப்புசம் நிகழ்கிறது. வயிறு வீக்கத்தின்போது வயிற்றுப் பகுதியில் அசௌகரியம் அல்லது வலி தோன்றும். வயிற்றில் இன்னும் இடமில்லை என உணரும் அளவிற்கு உடைகள் இறுக்கமாகும்.

சாப்பிட்ட பிறகு வயிறு உப்புசம் ஏற்பட காரணம் என்ன?

இது பல்வேறு காரணங்களால் ஏற்படுகிறது. உணவு முறை, வாழ்க்கை முறை பழக்க வழக்கங்கள், உணவு ஒவ்வாமை போன்றவை. சில பொதுவான காரணங்களை பார்ப்போம்.

1. உணவை மெல்லும்போது காற்றை விழுங்குதல்,

2. ஒரே அமர்வில் அதிகமாக உணவு உண்பது,

3. நார்ச்சத்து அல்லது சர்க்கரைக்கு மாற்றாக உள்ள உணவுகளை உண்ணுதல்,

4. லாக்டோஸ் சகிப்புத்தன்மை அல்லது உணவு செரிமானம் தொடர்பான பிற பிரச்னைகள்,

5. மலச்சிக்கல் இருப்பது,

6. இரைப்பை உணவுக்குழாயில் ரிஃப்ளக்ஸ் நோய் இருப்பது,

7. சில மருந்துகளை எடுத்துக்கொள்வது,

8. வயிற்றில் கட்டி, கருப்பை புற்றுநோய், செலியாக் நோய்,

9. பசையம் வினைபுரியும்போது ஏற்படும் ஒரு நிலை,

10. கணையப் பற்றாக்குறை, (கணையம் தேவையான நொதியை போதுமான அளவு உருவாக்காதபோது),

11. டம்பிங் சிண்ட்ரோம், உணவு செரிமானப் பாதை வழியாக மிக விரைவாக நகரும்போது உப்புசம் நிகழ்கிறது,

### வயிறு உப்புசத்தை எப்படிக் குறைப்பது?

1. உணவு உண்ணும் முன்பும், உணவு உண்ட பின்பும் ஒரே இடத்தில் அமராமல் அங்கும் இங்கும் எழுந்து நடக்க வேண்டும். இது செரிமானத்திற்கு உதவுகிறது.

2. வயிற்றுப் பகுதியை தானாக மசாஜ் செய்துகொள்வது. படுத்து இருக்கும்போது இதைச் செய்வது ஆரோக்கியமான செரிமானத்திற்கு வழி வகுக்கும்.

3. மூலிகை தேநீர் அருந்தலாம்.

4. நிறைய தண்ணீர் குடிப்பது, மெதுவாக உணவை உண்ணுதல், ஆரோக்கியமான உணவுகளை உண்பது.

5. பாட்டிலில் அடைக்கப்பட்ட செயற்கை பானங்கள், அதிகப்படியான சர்க்கரை மற்றும் உப்பு உள்ள உணவுகளை உண்ணுதலைத் தவிர்த்தல்.

6. பீன்ஸ், முட்டைக்கோஸ், காலிஃப்ளவர் மற்றும் பால் போன்ற வயிறு உப்புசத்தை தூண்டும் உணவுகளைத் தவிர்த்தல்.

7. போதுமான நார்ச்சத்துள்ள உணவுகளை உண்ணுதல்.

8. குடி, புகைப் பழக்கத்தைத் தவிர்த்தல்.

9. ப்ரோபயோடிக்குகள் உள்ள தயிர் போன்ற உணவுகளை உண்பது.

10. குளூட்டன் உள்ள உணவுகளைத் தவிர்த்தல்.

11. மலச்சிக்கல் இருந்தால் சரி செய்ய வேண்டும்.

இந்தக் குறிப்புகளை பயன்படுத்தி செயல்பட்டால் வயிறு உப்புசத்தில் இருந்து விடுதலை கிடைக்கும்.

## ஜன.20 இராமநாதபுரத்தில் விவசாயிகள் குறை தீர் கூட்டம்

**இராமநாதபுரம், ஜன.11:**

இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் அலுவல கத்தில் வருவாய் கோட்டாட்சியர் தலைமையில் இராம நாதபுரம் வருவாய் கோட்ட அளவில் வருகின்ற 20.01.2026 (செவ்வாய்க் கிழமை) அன்று முற்பகல் 11 மணியள வில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடை பெறும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இக்கூட்டத்தில் அனைத்துத்துறை அலுவலர்களும் கலந்து கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும் இக்கூட்டத்தில் விவசாயிகளும், விவசாய சங்கப்பிரதிநிதிகளும் பங்கேற்று விவசாயம் சார்ந்த கோரிக்கைகள், குறைகளைத் தெரிவித்துபயன்பெறலாம் என்று இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் செ. ஹபிபூர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

## கார் மோதிய விபத்தில் 4 பேர் படுகாயம் : ஓட்டுநர் மீது வழக்கு

**திருவில்லிபுத்தூர், ஜன.11:**

விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பு வட்டம் கொண்டையம்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவர் நாராய ணன். இவரும் இவரது நண்பர் மாயராஜ் என்பவரும் இருசக்கர வாகனத்தில் கோட்டையூர் சென்று விட்டு மீண்டும் கொண்டையம்பட்டிக்கு தைலாபுரம் வழியாக வந்துகொண்டிருந்தனர். அப்போது மாரி முத்து என்பவர் அதிவேகமாக காரில் வந்து இரு சக்கர வாகனத்தின் மீது மோதினார். இதில் இருசக்கர வாகனத்தில் சென்ற இருவருக்கும் வலது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது .இன்னொரு இரு சக்கர வாகனத்தில் வந்த மதுரை மாவட்டம் பாபி ரெட்டியூபட்டியை சேர்ந்த பாண்டியராஜன், கூமா பட்டியைச் சேர்ந்த காளிராஜன் இருவர் மீதும் மோதி அவர்களுக்கும் காயம் ஏற்பட்டது .நாராயணனும் மாயராஜ் ஆகியோர் விருதுநகர் அரசு மருத்துவ மனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். பாண்டியராஜன், காளிராஜ் ஆகியோர் வத்திராயிருப்பு அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். நாராய ணன் கொடுத்த புகாரின் பேரில் நத்தம்பட்டி காவல்துறையினர் மாரிமுத்து மீது வழக்குப்பதிந்து விசாரித்து வரு கின்றனர்.

## வீட்டின் பூட்டை உடைத்து நகைகள் திருட்டு

**திருவில்லிபுத்தூர், ஜன.11:**

விருதுநகர் மாவட்டம், கிருஷ்ணன்கோவில் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட குன்னூர் ஆண்டாள்நகர் முதல் தெருவில் வசித்து வருபவர் நல்லம்மை. இவர் திருச்சியில் உள்ள மூத்த மகளுடைய வீட்டிற்கு சென்றுள்ளார் . அப்போது பக்கத்து வீட்டில் வசிப்பவர் அலைபேசி மூலம் வீட்டின் கதவு திறந்து கிடப்பதாக கொடுத்த தகவலின் அடிப்படையில் நல்லம்மை வீட்டிற்கு வந்து பார்த்தார். அப்போது வீட்டுக்கதவின் பூட்டு உடைக்கப் பட்டு பீரோவில் இருந்த பொருட்கள் சிதறி கிடந்தன. 4 கிராம் தோடு, ஒரு ஜோடி 2 கிராம் மோதிரம் இரண்டு, ரொக்கப்பணம் ரூ.4000 திருடப்பட்டதைக் கண்டு அதிர்ச்சியடைந்தார். இதுகுறித்து காவல்துறையினர் வழக்கு பதிந்து விசாரித்து வருகின்றனர்.

# பொங்கல் திருநாள்! அரசுப் பேருந்துகளில் சுமார் 1.21 லட்சம் பேர் பயணம்!



**சென்னை, ஜன.11:**

வரும் 15ஆம் தேதி தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகைக் கொண்டாடப்படவிருக்கும் நிலையில் அரசுப் பேருந்துகள் மூலம் சுமார் 1.21 லட்சம் பேர் சொந்த ஊர்களுக்குச் சென்றுள்ளனர்.

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு வழக்கமாக இயக்கப்படும் அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளுடன் சிறப்புப் பேருந்துகளும் ஜன. 9 -ஆம் தேதி முதல் இயக்கப்பட்டுள்ளது.

நேற்று ஒட்டுமொத்தமாக இயக்கப்பட்ட 2,706 பேருந்துகளில் 1,21,770 பேர் சென்னையிலிருந்து புறப்பட்டு சொந்த ஊர்களுக்குச் சென்றுள்ளனர். இந்த எண்ணிக்கை படிப்படியாக அடுத்து வரும் நாள்களில் அதிகரிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

வழக்கமாக இயக்கப்படும் 2,092 பேருந்துகளுடன் கூடுதலாக 614 சிறப்புப் பேருந்துகள் இயக்கப்பட்டுள்ளன.

இது குறித்து போக்குவரத்துக் கழகம் தெரிவித்திருப்பதாவது, தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறையின் சார்பில், 2026-ஆம் ஆண்டு பொங்கல் திருநாளை முன்னிட்டு பொதுமக்களின் பயண வசதிக்காக சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

அதாவது, ஜன. 09 அன்று நள்ளிரவு நிலவரப்படி, வழக்கமாக இயக்கப்படும் 2,092 பேருந்துகளும் முழுமையாக இயக்கப்பட்டதுடன், கூடுதலாக 614 சிறப்பு பேருந்துகளும் இயக்கப்பட்டுள்ளன. இவ்வாறு மொத்தம் 2,706 பேருந்துகள் இயக்கப்பட்டு, 1,21,770 பயணிகள் பாதுகாப்பாக பயணம்மேற்கொண்டுள்ளனர்.

மேலும், இதுவரை சென்னையிலிருந்து 1,16,977 பயணிகள் முன்பதிவு செய்து பயணம் மேற்கொள்ள முன்பதிவு செய்துள்ளனர்.

பொங்கல் திருநாள் பயண காலத்தில் பொதுமக்களின் தேவையை கருத்தில் கொண்டு, தேவைக்கேற்ப கூடுதல் பேருந்துகள் தொடர்ந்து இயக்கப்படும். எனவே பயணிகள் கடைசி நேர கூட்ட நெரிசலை தவிர்க்கும் பொருட்டு தங்கள் பயணத்தை முன்கூட்டியே திட்டமிட்டு முன்பதிவு செய்து பயணிக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாம்பன் பாலத்தில் சூறைக்காற்று: ரெயில்கள் நிறுத்தம்

**ராமேஸ்வரம், ஜன.11:**

வங்கக்கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக தமிழகத்தில் ஒருசில இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் எனவும், கடலோர பகுதிகளில் பலத்த தரை காற்று அவ்வப்பொழுது மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்து இருந்தது.

இந்த நிலையில், காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம் மற்றும் பாம்பன் பகுதியில் பலத்த காற்று வீசி வருகிறது.

இதனால் அயோத்தியாவில் இருந்து வந்த விரைவு ரெயில், பாதுகாப்பு கருதி மண்டபம் ரெயில் நிலையத்தில் நிறுத்திவைக்கப்பட்டு உள்ளது. காற்றின் வேகம் குறைந்த பின் ரெயில் மீண்டும் இயக்கப்படும் என ரெயில்வே நிர்வாகம் அறிவித்துள்ளது.

# பொங்கல் பண்டிகை : மஞ்சள் குலை, கிழங்குகள் அறுவடை தொடங்கியது

**திருநெல்வேலி, ஜன.11:**

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு கரும்புகள், மஞ்சள் குலை, கிழங்குகள் அறுவடை தொடங்கியது. தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகை ஜனவரி 15ஆம் தேதி கொண்டாடப்படுகிறது. பொங்கலிட்டு வழிபடும்போது மஞ்சள் குலையும், கிழங்கும் முக்கிய இடம்பெறுகிறது. பொங்கல் பண்டிகைக்கு இன்னும் ஒரு வாரமே உள்ள நிலையில், நெல்லை மாவட்டம் மற்றும் மாநகரில் மஞ்சள் குலைகள் அறுவடைக்கு தயா ராக உள்ளன. அனவன் குடியிருப்பு உள்ளிட்ட பகுதிகளில் கரும்புகள் அறுவடை செய்யப்பட்டு வருகிறது.

இடைகால், அம்பை சுற்று வட்டாரப் பகுதிகளில் சிறு கிழங்கு, சேனைக்கிழங்கு, பிடி கிழங்கு உள்ளிட்ட கிழங்கு வகைகள் அறுவடை செய்யும் பணிகளில் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். நெல்லை டவுன் பாறையடி, சாலியர் தெரு பகுதிகளில் வியாழனன்று மஞ்சள் குலை அறுவடைப்பணி தீவிரமாக நடந்து வருகிறது. நல்ல விளைச்சல் இதுகுறித்து நகரப்பகுதி விவசாயிகள் கூறுகையில், எங்கள் பகுதியில் வழக்கமாகவே மஞ்சள் குலைகள், சேனைக்கிழங்கு உள்ளிட்ட கிழங்கு வகைகள் பயிரிடு வது வழக்கம்.

மஞ்சள் குலைகள் 6 மாத பயிராகும். மற்ற பயிர்களை போலவே இதற்கும் கூலியாட்கள் கிடைப்பதில் சிரமம் உள்ளது. ஆனால் நாங்கள் ஏக்கருக்கு ரூ.30 ஆயிரம் வரை செலவு செய்து பரா மரித்த நிலையில் மஞ்சள் குலை தற்போது அறுவடைக்கு தயாராகி விட்டது. திருச்சி, மதுரை உள்ளிட்ட வெளி மாவட்டங்களில் இருந்து வியாபாரிகள் வந்து வாங்கிச் செல்கின்றனர். பெரும் பாலான விவசாயிகள் சாலையோரங்களில் விற்பனை செய்வார்கள்.

ஒரு மஞ்சள் குலை ரூ.30 வரை விற்பனை செய்யப்படுகிறது என்றார்.

# "காங்கிரஸை மட்டும் நம்பாதீர்கள்" - விஜய்க்கு விஜயபிரபாகரன் எச்சரிக்கை



**கடலூர், ஜன.11:**

கடலூர் மாவட்டம் பாசாரில் நடைபெற்ற மாநாட்டில் தே.மு.தி.க. இளைஞர் அணி செயலாளர் விஜயபிரபாகரன் பேசியதாவது:-

தி.மு.க., அ.தி.மு.க. ஆகிய 2 கட்சிகளுக்கும் தே.மு.தி.க.வின் சேவையும், தேவையும் வேண்டும். எங்களுக்கு எத்தனை தொகுதிகள் கொடுக்கிறீர்களோ அதுதான் உங்களை அரியணையில் அமர்த்தும். தே.மு.தி.க. எங்கே சேர்கிறதோ அதுதான் மெகா கூட்டணி, அதுதான் வலிமையான கூட்டணி.

தற்போது ஜனநாயகன் திரைப்படம் திரையிடுவதில் பிரச்சினை இருக்கிறது. விஜய்க்கு தம்பியாக, விஜயகாந்தின் மகனாக ஒரு அறிவுரை கூறுகிறேன். இன்று காங்கிரஸ் கட்சி, உங்களுக்கு ஆதரவு கொடுப்பதுபோல் பேசுகிறார்கள்.

காங்கிரஸ் கட்சியை மட்டும் நம்பி விடாதீர்கள். அது மீனுக்கு தூண்டில் போடுகிறது மாதிரி, அதில் நீங்கள் மாட்டிக்கொள்ளாதீர்கள். நீங்கள் நன்றாக வர வேண்டும்.

ஏனென்றால் நான் போட்டியிட்ட விருதுநகரில், எனக்கு எதிராக காங்கிரஸ் கட்சியினர் என்ன செய்தார்கள் என்று தெரியும்.

நீங்கள் சினிமா துறையுடன் சேருங்கள்.

காங்கிரஸ் கட்சியினர் உங்களுடன் கூட்டணிக்கு வருவதுபோல் வந்து, தி.மு.க.வுடன் கூட்டணி பேரம் பேசி அங்குதான் இருப்பார்கள்.

இவ்வாறு அவர் பேசினார்.






## 4 வாரத்தில் மீட்க உத்தரவு

**சென்னை, ஜன.11:**

தஞ்சை சாஸ்த்ரா நிகர்நிலை பல்கலை., 35 ஆண்டாக அனுபவித்து வரும் 31.37 ஏக்கர் நிலத்தை தங்க ளுக்கே ஒதுக்க கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஆனால் சாஸ்த்ரா கல்வி நிறுவனங்களின் கோரிக்கையை நிராகரித்து தமிழ்நாடு அரசு உத்தரவு பிறப்பித்திருந்தது. இந்நிலையில், சாஸ்த்ரா பல்கலைக்கழகம் ஆக்கிரமித்துள்ள 33 ஏக்கர் அரசு நிலத்தை 4 வாரங்களில் மீட்க உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## தேர்தல் அறிக்கை குழு செங்கோட்டையனுக்கு இடமில்லை!

**சென்னை, ஜன.11:**

2026 ஆம் ஆண்டு சட்டப்பேர வைத் தேர்தலையொட்டி, தமிழக வெற்றிக் கழகம் சார்பில் தேர்தல் அறிக்கை தயாரிப்பதற்கான குழுவை அமைத்து, அக்கட்சியின் தலைவர் விஜய் அறிவிப்பு வெளி யிட்டுள்ளார். கே.ஜி. அருண்ராஜ், ஜே.சி.டி. பிர பாகர் உள்ளிட்ட 12 பேர் கொண்ட குழுவில், தமி ழக வெற்றிக் கழகத்தின் மாநில நிர்வாகக் குழு தலைமை ஒருங்கி ணைப்பாளர் செங்கோட் டையன் இடம்பெற வில்லை என்பது பலருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

## ஜன.12- சிபிஐ விசாரணைக்கு ஆஜராகும் விஜய்

**சென்னை, ஜன.11:**

கடந்த ஆண்டு செப்.27 ஆம் தேதி கரூரில் தமிழக வெற்றிக் கழகம் சார்பில் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். 110 பேர் காயமடைந்தனர். இந்த சோகமான சம்பவம் தொ டர்பாக சிபிஐ தனது விசா ரணையைத் தீவிரப் படுத்தியுள்ளது. இந்நிலையில், தமி ழக வெற்றிக் கழகத்தின் தலைவரும் நடிகருமான விஜய் ஜனவரி 12 ஆம் தேதி தில்லியில் உள்ள சிபிஐ அலுவலகத்தில் ஆஜராகுமாறு சம்மன் அனுப்பப்பட்டுள்ளது. இத னிடையே, கரூரில் உள்ள பொதுப் பணித்துறை விருந்தினர் இல்லத்தைத் தனது தற்காலிக விசா ரணைத் தளமாக சிபிஐ மாற்றியுள்ளது. அங்கு நடைபெற்ற விசாரணையில், நிர்வாகி களின் வாக்குமூலங்கள் முந்தைய சாட்சியங்களு டன் ஒப்பிட்டுச் சரி பார்க்கப்பட்டன. சிபிஐ-யின் சம்மனை ஏற்று விஜய் ஜன.12 ஆம் தேதி சிபிஐ முன் ஆஜராக உள் ளார்.

## அதிகாரிகள் ஆய்வு

**கரூர், ஜன.11:**

கரூரில் கூட்ட நெரிசலால் உயிரிழப்பு சம்பவ வழக்கு தொடர்பாக மத்திய உள்துறை அமைச்சகம் மற்றும் மத்திய தட யவியல் துறை அதிகாரி களைச் சேர்ந்த 5 பேர் கொண்ட குழுவினர், கரூரில் தங்கி விசாரணை நடத்தி வரும் சிபிஐ அதிகாரிகளுடன் வெள்ளிக் கிழமை கரூர் வேலுச்சாமி புரத்தில் நெரிசல் சம்ப வம் நடைபெற்ற இடத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

# பேருந்தே ரயிலாக மாறும் அதிசயம்! மணிக்கு 603 கி.மீ. பறக்கும் Maglev புல்லட் ரயில்!

இந்தியாவில், பொதுபோக்குவரத்திற்கு பேருந்து, ரயில், மெட்ரோ ஆகியவை பயன்பாட்டில் உள்ளது. ஆனால் ஜப்பானில், பேருந்தையே தேவையான இடங்களில் ரயிலாகவும் பயன்படுத்துகின்றனர்.

இந்த பேருந்துகளில் இரட்டை சக்கரங்கள் உள்ளன. சாலைகளில் செல்லும் போது வழக்கமான ரப்பர் சக்கரத்தில் பேருந்து இயங்குகின்றன. தண்டவாளம் உள்ள பகுதிகளில், வாகனத்தின் உள்ளிருந்து எஃகு சக்கரங்கள் இறங்கி அதன் மூலம் ரயில் போல் இயங்குகிறது. வெறும் 15 வினாடிகளில் பேருந்திலிருந்து. ரயிலாக மாறி விடுகிறது! இந்த வாகனத்தில் 21 பேர் வரை பயணிக்க முடியும்.



இந்த வாகனம் சாலையில் மணிக்கு 100 கி.மீ வேகத்திலும், தண்டவாளத்தில் மணிக்கு 60 கி.மீ வேகத்திலும் பயணிக்கிறது. ஜப்பானின் டோகுஷிமா மாகாணத்தில் உள்ள கையோ நகரில் 2021 ஆம் ஆண்டில் இந்த வாகனம் பொதுமக்களுக்கு அறிமுகமானது.

### உலகின் முதல் தானியங்கிப் படகு சவாரி:

உலகில் முதன்முறையாகத் தானியங்கித் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திப் பயணிகள் படகை இயக்கிவுள்ளது ஜப்பான். ஒலிம்பியா டிரிம் செட்டோ நிறுவனம் ஜப்பானில் உள்ள ஒகாயாமா, ஷோடோஷிமா தீவுக்கு இடையே அப்படகை 2025 டிசம்பர் 11 முதல் இயக்கி வருகிறது.

மேலும், தானியங்கித் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த அந்நாட்டின் அரசாங்கத்தின் உத்தரவுக்குக் காத்திருப்பதாகவும் பல நிறுவனங்கள் கூறியுள்ளது. இந்த முயற்சி ஜப்பானில் மோசமடைந்துவரும் ஊழியர் பற்றாக்குறையைச் சமாளிக்க ஓர் தீர்வாக இருக்கும் என்றும் நகரத்தைவிட்டுத் தொலைதூர தீவுகளில் வசிக்கும் மக்களின் போக்குவரத்தை இது உறுதி செய்யும் என்றும் அந்நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் கூறியுள்ளார்.

நிப்பான் அறக்கட்டளை உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட பிற நிறுவனங்களை உள்ளடக்கிய தானியங்கிப் படகுகளை வணிகமயமாக்குவதற்கான திட்டத்தின் ஒரு பகுதி இந்தச் சோதனையோட்டம் எனக் கூறப்படுகிறது. இந்த முயற்சி வெற்றியடையும் பட்சத்தில், கடல் சார்ந்த தளவாடங்களை நிலைப்படுத்தவும் விபத்துகளைக் குறைக்கவும் இந்தத் தானியங்கி முறை உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 'சின்கன்சென்' புல்லட் ரயில்:

புகழ் பெற்ற ஜப்பான் ரயில் போக்குவரத்து துறை ஜப்பானில் அதிவேக புல்லட் ரயில்களை இயக்குகிறது. அவை அந்நாட்டு மொழியில், 'சின்கன்சென்' என்று அழைக்கப்படுகின்றன. நேரம் தவறாமை, வேகம், சுகமான பயண அனுபவம், பாதுகாப்பு ஆகியவற்றுக்கு புகழ் பெற்ற இந்த ரயில்கள், அதிகபட்சமாக மணிக்கு 320 கிலோமீட்டர் வேகத்தில் இயக்கப்படுகின்றன. இந்த ரயில்கள் 1964 முதல் ஜப்பானில் பயன்பாட்டில் இருக்கின்றன.



### உலகின் அதிவேக ரயில்:

ஜப்பானில் ஓடும் எஸ்சி மாக்லெவ் ரயில் தான் உலகிலேயே அதிவேக ரயில். இந்த ரயிலின் வேகம் மணிக்கு 603 கிலோமீட்டர். மேக்லெவ்' (Maglev) என்று அழைக்கப்படும் இந்த ரயில்கள், போக்குவரத்துத் துறையில் ஒரு மிகப்பெரிய புரட்சியையே செய்து வருகின்றன.

Maglev ரயில்களின் தொழில்நுட்பம் மற்ற ரயில்களில் இருந்து வேறுபட்டது. இந்த அதிவேக ரயில் மேக்னடிக் லெவிடேஷன் தொழில்நுட்பத்தில் இயங்குகிறது. காந்த விசையை பயன்படுத்தி தண்டவாளத்தில் தொடாமல் காற்றில் மிதந்தபடி சீறிப்பாயும் மேக்லெவ் ரயில்கள், நவீன போக்குவரத்து உலகின் அதிசயம். மேக்னடிக் லீவியேஷன் (Magnetic Levitation) என்பதன் சுருக்கமே மேக்லெவ் (Maglev) ஆகும்.

இந்த ரயிலில் பயணம் செய்தால், ஒரு சொட்டு அதிர்வு கூட இருக்காது. சத்தம் அறவே இருக்காது. சுற்றுச்சூழலுக்கு மிகவும் நல்லது. மேலும், இந்த ரயிலின் வடிவமைப்பு தண்டவாளத்தை இறுக்கமாகப் பற்றிக்கொண்டு செல்வது போல இருப்பதால், தடம் புரளும் விபத்துகளுக்கு வாய்ப்பே இல்லை.

# தவறின் உயிர்

தாமோதரன், லட்சுமி, மகன் கார்த்திக்—
இந்த மூவரே அந்த வீட்டின் அடையாளம்.
கார்த்திக் சென்னையில் வேலை கிடைத்து கிளம்பினான். ஒரு வருடத்திற்குள் எப்படியோ ஏதேதோ காரணம் காட்டி சொந்த ஊருக்கே மாற்றல் வாங்கி வந்துவிட்டான்.
அம்மாவுக்கு மகிழ்ச்சி.
அப்பாவுக்கு நிம்மதி.
கார்த்திக்குக்கு மட்டும்... ஏதோ ஓர் நிம்மதியில்லா மனது.

சென்னை அவனுக்கு வேலை மட்டும் அல்ல மீனாவையும் அளித்திருந்தது. தீவிரமாக காதல் செய்தார்கள்.
ஆனால் மீனாவின் வீட்டில் அது ஏற்கப்படவில்லை.
“வேலைல இருக்கிறான்... ஆனா ஜாதி?”
“நாளைக்கு விட்டுட்டுப் போய்டுவான்.”
மனதை நோகடிக்கும் கேள்விகள், கத்திகள் போல குத்தின.

“நான் திரும்பி வர்றேன். நிச்சயம் வர்றேன்,” என்று சொல்லி அவன் ஊருக்குப் போன நாள்...
அவள் கண்களில் பயம் மட்டும் இருந்தது. அவன் திரும்பவில்லை.
அவனுக்கும் வீட்டில் சொல்ல பயம். ஒரு வருடம் எப்படியோ கடந்து விட்டது. திருமண பேச்சை மட்டும் தவிர்த்து வந்தான்.



ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை. லட்சுமி காலை உணவு தயாரித்து பரிமாறி விட்டு சற்று இளைப்பாற, கார்த்திக் மதிய உணவை ஸ்விகியில் ஆர்டர் செய்தான். கதவு மணி அடித்தது.
கார்த்திக் கதவைத் திறந்த நொடியில்—
உலகம் அசையாமல் நின்றது.
ஸ்விகி யூனிஃபார்ம்.
முதுகில் பேக்.
மார்போடு சாய்ந்த கை குழந்தை.
மீனா. அவள் முகம் மெலிந்திருந்தது.
ஆனால் கண்கள் உறுதியாய் இருந்தன.
“சார்... ஆடர்,”
அவள் குரல் நடுங்கவில்லை.
அவன் கை நீட்டி பெற்றுக் கொண்டான்.
குழந்தை அழ ஆரம்பித்தது.
அந்த அழுகை...
அவன் மனசுக்குள் ஏதோ ஒன்றை கிழித்தது. மீனா தயங்கினாள்.
“சார்... குழந்தைக்கு பால் குடுக்கணும்.
உள்ளே உட்கார அனுமதி தருவீங்களா?”
கேட்டதும் அம்மா உடனே சொன்னாள்.
“அய்யோ, பிள்ளையோட இருக்கா... வாம்மா.”
மீனா பக்கத்து அறையில் அமர்ந்து, குழந்தைக்கு பால் ஊட்டினாள்.
வெளியே வந்ததும் கார்த்திக் அவள் முகத்தை பார்க்கவில்லை.
குழந்தையின் முகத்தை மட்டும் பார்த்தான். அவன் முகம்,கண்கள், மூக்கு. அவன் உள்ளே ஒரு குரல்—
“இது... என் குழந்தை.”
அவன் குரல் தடுமாற, கேட்டான்.
“மீனா... இது?”
அவள் புன்னகையோடு சொன்னாள்.
“ஆமா கார்த்திக். நீ போனதுக்கப்புறம்... எனக்கு கர்ப்பம் தெரிய வந்தது.”
அவன் மூச்சு நின்றது. “வீட்டில சொன்னேன். காதலை ஏத்துக்கலை. கர்ப்பத்தை மன்னிக்கலை.”
ஒரு நொடி நிறுத்தி, “வீட்டைவிட்டே வெளியேற்றிட்டாங்க,” என்றாள்.
அம்மா அதிர்ச்சியில் உட்கார்ந்தாள்.
அப்பா கண்களை மூடிக்கொண்டார். அவன் திருமணத்தை தள்ளிப் போட்டதன் காரணம் புரிந்தது.

மீனா மெதுவாக சொன்னாள்.
“நான் உன் வாழ்க்கை கெடக்கூடாதுனு உன்ன தேடல,” ஆனா
“இந்த குழந்தை மட்டும்... உன்ன தேடி வந்துடுச்சு.”
கார்த்திக் குழந்தையை மெதுவாக தூக்கினான்.
குழந்தை அவன் மார்பில் அமைதியாக தூங்கியது.
அவன் கண்களில் நீர் வழிந்தது.

இது அவன் உயிர். அப்பா முன்னால் வந்து சொன்னார்.
“தவறு நடந்திருக்கலாம். ஆனா பொறுப்பு... இப்போ ஆரம்பிக்குது.” கார்த்திக் தலை ஆட்டினான். மீனாவைப் பார்த்து சொன்னான்— “நான் தப்பு செய்து விட்டேன். ஆனால் இப்போ உன்னை விட்டு ஓட மாட்டேன்.” மீனா ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் அவள் கண்களில்... பல மாதங்களுக்குப் பிறகு நிம்மதி இருந்தது. அந்த வீட்டில், அந்த மாலையில், ஒரு குழந்தை மட்டும் அல்ல— ஒரு மனிதனும் பொறுப்போடு மறுபடியும் பிறந்தான்.



**-கோமளவல்லி**
மும்பை

# பிரசாதம்



மார்கழி மாதத்தில் மட்டும் மனிதர்களுக்கு சுறுசுறுப்பு வந்துவிடும் தெருவுக்குத் தெரு கோயில்களுக்கு வழிபட வந்துவிடுவார்கள். இறைவனை வணங்குவதற்குக் கூட எல்லைகள் வகுக்கவேண்டியுள்ளது. நாள்தோறும் வழிபடுபவர்கள் ஒரு சிலர். குறிப்பிட்ட நாள்களில் மட்டும் கோயிலுக்கு வருபவர்கள் ஒருசிலர். ஒரு சிலர் எப்பவாவது தோன்றும்போது வந்து வழிபடுவார்கள். எல்லாருக்கும் இறைவன் பொதுவானவன்.

அந்தத் தெருவில் ஆனந்தவிநாயகர் கோயிலில் வழிபாடு முடிந்து பிரசாதம் வழங்கத் தொடங்கியிருந்தார்கள்.

காற்றுக்காக குருக்கள் வெளியே வந்து நின்று தெருவில் போவோர் வருவோரை வேடிக்கைப் பார்த்தபடியும்.. போப்பா.. போய் பிரசாதம் வாங்கிக்க என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

ஒவ்வொருத்தரும் முண்டிக்கொண்டு பிரசாதத்தை வாங்கிக்கொண்டிருந்தார்கள். ஒருசிலர் நாலைந்து தட்டுகள் வாங்கினார்கள்.

ஒரு கையில் இரண்டும் இன்னொரு கையில் இரண்டுமாக வாங்கிக்கொண்டு போனார்கள்.

ஒருத்தர் சொன்னார் இது என்ன பிரசாதமா? காலை டிபனா என்றார்?

இப்படித்தான் பண்றாங்க.. என்ன பண்ணமுடியும்? ஒருத்தரே இத்தனை வாங்கிட்டுப்போனா வர்றவங்களுக்கு என்ன கிடைக்கும் ? என்று.

விடுங்க.. அவங்க தெருக்காரங்க.. கேட்டா பிரச்சினை வந்துடும் என்றார்..

குருக்கள் எதுவும் பேசாமல் சிரித்தபடி வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருந்தார்.



அதற்குள் இரண்டு பேருக்குள் சண்டை வந்துவிட்டது. ஒருவரை விட ஒருவர் அதிக தட்டுகளை வாங்கியதுதான் பிரச்சினை.

எங்க ஊட்டுக்காரருக்கு இன்னிக்கு உடம்பு சரியில்ல.. அதனால அவருக்கும் சேர்த்து பிரசாதம் வாங்க வந்தேன்.. இந்தம்மா சண்டைக்கு வருது.. நான் இன்னிக்குத்தான் கூடுதலா வாங்குனேன்.. இந்தம்மா இதே வேளையா தினமும் நாலஞ்சு வாங்கிட்டுப்போவுது.. இந்த மார்கழி மாசம் முழுக்க இது காலை டிபனே பண்ணாது போலருக்கு என்று கத்தினாள்.

இது எங்க தெரு கோயிலு.. எனக்கு எல்லாம் உரிமையும் உண்டு.. நீ வேற தெரு.. கிடைக்கறத வாங்கிட்டுப் போ.. உனக்கு சாமர்த்தியம் இல்லன்னா விடு.. என்றார்கள்.

நிறைய பேர் நாலைந்து தட்டுகள் கூடுதலாக வாங்கிப்போன பின்பு பிரசாதம் சீக்கிரம் தீர்ந்துவிட்டது.

அப்போது ஒரு வயதானவர் தடியை ஊன்றியபடி வந்து நின்றார்.

என்னப்பா என்றார் குருக்கள்.

ஐயா.. பசிக்குதுங்க.. சாமி பிரசாதம் கொஞ்சம் கொடுங்களேன்..

உடனே குருக்கள் கோயில் உள்ளே ஏம்மா..கௌரி பிரசாதம் ஏதும் இருக்கா? என்றார்.

இல்லிங்க சாமி.. தீந்துபோயிடிச்சி.. ஒருத்தங்க ஒன்னு வாங்குனா இருக்கும்.. நாலஞ்சு வாங்குனா என்ன பண்றது? கேட்டா கோவிச்சுக்கறாங்க.. உனக்கு என்ன வேலை.. கேட்கறதக் கொடுங்கறாங்க..

உள்ளே எனக்கு எடுத்து வச்சிங்களே அது இருக்காங்க பாருங்க என்றார் குருக்கள்.

அதையும் அந்த கடைக்காரம்மா எடுத்துட்டுப்போயிடிச்சு சாமி..

அடக்கடவுளே என்றார்..

குருக்கள் பின் கோயிலின் உள்ளே போய் ஒரு தேங்காய் மூடியும் இரண்டு வாழைப்பழங்களையும் எடுத்து வந்து அந்த முதியவரிடம் கொடுத்தார்.

சாமி பிரசாம் இல்லீங்களா?

குருக்களுக்குக் கோபம் வந்துவிட்டது.. யோவ்..பெரியவரே.. இல்லங்கறதாலதான் இதக் கொடுத்தேன்.. என்றார்.

இல்ல சாமி.. இது பசிக்குப் போதாது சாமி.. கொஞ்சம் கைப்பிடிச்சோறு இருந்தா போதும் சாமி.. என்றார்.

நீ எங்கே இருந்து வர்றே என்று பேச்சை மாற்றினார் குருக்கள்.

நான் இங்கதான் துரோபதை கோயில்ல படுத்திருக்கேன் என்றார்.

சரி.. நாளைக்கு சீக்கிரம் வந்துடு.. பிரசாதம் தரேன் என்றார்.

வயதானவர் கேட்டார்.. நாளைக்கும் வரைக்கும் பசியைப் பொறுத்துக்கவா?

**-ஹரணி**

# உணவு சமைக்கும் போது...



பாகற்காய் பழுத்துவிடாமல் இருக்க பாகற்காயை வில்லைகளாக்கி உப்பைத் தூவி ஒரு பாத்திரத்தில் குலுக்கி வைத்துவிட்டால் இரண்டு மூன்று நாட்கள் ஆனாலும் பாகற்காய் அப்படியே இருக்கும். ஃபிரிட்ஜில் வைத்தால் ஒரு வாரம் வரையில் பிரெஷ்ஷாக இருக்கும்.

கீரை மசியல் செய்யும்போது புளிக்கு பதிலாக பொடியாக அரிந்த மாங்காயைச் சேர்த்தால் மிகவும் சுவையாக இருக்கும்.

ஜவ்வரிசியைச் சாதம்போல் வேகவைத்து பிறகு மோரில் கரைத்து உப்பு போட்டுச் சாப்பிட்டால் வயிற்று வலி குணமாகும். வயிற்றுப்போக்கும் நிற்கும்.

திரட்டுப்பால் செய்யும்போது சிறிய மெல்லிய எவர்சில்வர் தட்டை அதனுள் போட்டால் அடிப் பிடிக்காமலும், பால் பொங்காமலும் இருக்கும்.

பருப்பை குக்கரில் சமைக்கும் போது சிறிது மஞ்சள் தூளையும், ஒரு டீஸ்பூன் நெய்யையும் சேர்த்தால் மணமாகவும், சுவையாகவும் இருக்கும்.

ரசத்தை இறக்குவதற்கு முன் கறிவேப்பிலைப்பொடி தூவி இறக்கினால் மணமாக இருக்கும்.

சமையல் செய்யும்போது சூடான எண்ணெய் பட்டுவிட்டால் உருளைக்கிழங்கைச் சிறிது அரைத்துப் பூசினால் கொப்பளங்கள் ஏற்படாது.

ஜவ்வரிசி பாயசம் செய்வதற்கு முன், ஜவ்வரியை லேசாக வறுத்து பிறகு அதில் வெந்நீரை ஊற்றி அரை மணி நேரம் அப்படியே வைக்கவும். பிறகு பாயசம் செய்தால் சீக்கிரம் வெந்துவிடும்.

காய்கறிகளை வேகவைக்கும்போது அதிக தண்ணீர் வைத்து வேக வைக்க கூடாது. ஏன் என்றால் காய்கறிகளில் உள்ள வைட்டமின் சத்துகள் போய்விடும்.

காய்ந்த மிளகாயை வறுக்கும்போது நெடி வரும். அவை வராமல் இருப்பதற்கு சிறிது உப்பு போட்டு வறுத்தால் நெடி வராது.

பச்சை மிளகாயை காம்புடன் வைக்காமல் காம்பை எடுத்து விட்டு நிழலான இடத்தில் வைத்தால் நீண்ட நாட்கள் இருக்கும்.

முட்டைகோஸில் உள்ள தண்டை வீணாக்காமல் சாம்பாரில் போட்டு சாப்பிட்டால் மிகவும் சுவையாக இருக்கும்.

உருளைக்கிழங்கு வறுவல் செய்யும்போது புளிப்பு இல்லாத தயிர் அரைக்கரண்டி ஊற்றி செய்தால் மிகவும் சுவையாக இருக்கும்.

கறிவேப்பிலை காயாமல் இருப்பதற்கு ஒரு அலுமினியப் பாத்திரத்தில் போட்டு மூடி வைத்தால் காயாமல் இருக்கும்.

காய்கறிகளை அரிந்து பிரிட்ஜில் வைத்தால், காய்கறிகளில் உள்ள சத்து குறைந்து விடும்.

சமையலில் உப்பு அதிகமாகி விட்டால் உருளைகிழங்கை அரிந்து போட்டால் உப்பை எடுத்துவிடும்.

உருளைக்கிழங்கு வேக வைத்த தண்ணீரில் பாத்திரங்களை கழுவினால் பாத்திரங்கள் பளபளப்பாக இருக்கும்.

# முட்டைக்கோஸ் சாலட்



பச்சை இலைக் காய்கறிகளில் முக்கியமான முட்டைக்கோஸ்ஸில் வைட்டமின் ஏ, இ, சோடியம், இரும்பு, கால்சியம், பாஸ்பரஸ் புரதம், தாது உப்புக்கள் ஆகிய சத்துக்கள் உள்ளன. உடல் ஆரோக்கியமாக இருப்பதற்கு உறுதுணையாக இருப்பது முட்டைக்கோஸ்.

பயன்கள் :

முட்டைகோஸை பச்சையாக அரைத்து 60 மில்லி அளவுக்குக் சாறு எடுத்து குடித்து வர தொண்டைப் புண் குணமாகும்.

சர்க்கரை நோயாளிகள் முட்டைக்கோஸ் சாப்பிடுவதால் சர்க்கரையின் அளவு குறையும்.

ஜலதோஷத்தினால் துன்பப்படுபவர்கள் முட்டைக்கோஸை நன்றாக வேகவைத்து அதன் சாற்றை குடித்து வந்தால் சளித்தொல்லையிலிருந்து விடுபடலாம்.

தினமும் முட்டைக்கோஸ் சாப்பிடுவதால் கண் பார்வைக் கோளாறுகள் நீங்கும்.

முட்டைக்கோஸ் சாப்பிடுவதால் கண் நரம்புகளானது சீராக இயங்கும்.

முகப்பருக்கள் இருப்பவர்கள் வாரம் இருமுறை உணவில் சேர்த்து வந்தால் பருக்கள் நீங்கி முகம் பளபளப்பாகும்.

முட்டைக்கோஸை பொடிப்பொடியாக நறுக்கி, அதனுடன் தயிர், வெங்காயம், உப்பு ஆகியவற்றைச் சேர்த்துச் சாப்பிட்டால் இளைத்த உடல் பெருக்கும்.

புற்றுநோய் வராமல் தடுக்கும் ஆற்றல் முட்டைக்கோஸ்ஸிற்கு உண்டு.

தேவையானப் பொருட்கள் :

முட்டைக்கோஸ் - 1
வெங்காயம் - 2
வெள்ளரிக்காய் - 1
பச்சை மிளகாய் - 2
பாசிப்பருப்பு - 1 கப்
தக்காளி -2
எலுமிச்சை சாறு - 1 டீஸ்பூன்
கொத்தமல்லி இலை - சிறிது
இஞ்சி - 1 துண்டு
உப்பு - தேவையான அளவு

செய்முறை :

முட்டைக்கோஸை முதலில் பொடிப்பொடியாக நறுக்கி வேகவைத்துக் கொள்ளவும். பாசிப்பருப்பை வாணலியில் வறுத்து 15 நிமிடம் ஊற வைத்துக்கொள்ளவும். வெங்காயம், பச்சை மிளகாய், வெள்ளரிக்காய் முதலியவற்றைப் பொடிப்பொடியாக நறுக்கிக் கொள்ளவும். இஞ்சியை தோல் சீவி விட்டு, துருவி எடுத்துக்கொள்ளவும். பிறகு ஊற வைத்துள்ள பாசிப்பருப்புடன் வேகவைத்துள்ள முட்டைக்கோஸ் மற்றும் நறுக்கி வைத்துள்ள வெங்காயம், பச்சை மிளகாய், வெள்ளரிக்காய், துருவிய இஞ்சி, கொத்தமல்லி இலை, உப்பு, எலுமிச்சை சாறு ஆகிய அனைத்தையும் ஒன்றாக கலந்து பரிமாறவும். சூப்பரான முட்டைக்கோஸ் சாலட் தயார்.

# முந்திரி பருப்பு கேக்



தினமும் முந்திரி சாப்பிடுவது உடலினை ஆரோக்கியமாக வைத்திருக்க உதவும் முக்கிய உணவுப்பொருளாகும். முந்திரி பருப்பில் மாங்கனீசு, பொட்டாசியம், தாமிரம், இரும்பு, மெக்னீசியம், துத்தநாகம் மற்றும் செலினியம் கனிம தாதுக்கள் அதிக அளவில் நிறைந்துள்ளது. முந்திரியை அப்படியே சாப்பிடுவதை விட குழந்தைகள் விரும்பும் கேக் போன்று செய்து கொடுப்பதால் குழந்தைகள் விரும்பி சாப்பிடுவார்கள்.

தேவையானப் பொருட்கள் :

முந்திரிப் பருப்பு - 1ஃ2 கிலோ
சர்க்கரை - 1ஃ2 கிலோ
ஏலக்காய் பொடி - 2 ஸ்பூன்
நெய் - 100 கிராம்

செய்முறை:

முந்திரி கேக் செய்வதற்கு முதலில் ஒரு வாணலியில் நெய் விட்டு அதில் முந்திரிப் பருப்பைப் போட்டுப் பொன்னிறமாக வறுத்து எடுத்துக் கொண்டு, ஆறிய பிறகு மிக்ஸியில் போட்டுப் பொடியாக அரைத்து எடுத்துக் கொள்ளவும். பிறகு சர்க்கரையில் சிறிது நீர் விட்டுப் பாகுப்போல காய்ச்சவும். சர்க்கரைப்பாகானது கம்பிப்பாகு பதத்திற்கு வந்தவுடன் அதில் முந்திரிப்பருப்புப் பொடி, ஏலக்காய் பொடி ஆகியவற்றை கலந்து, அதனுடன் சிறிது நெய் சேர்த்து ஐந்து நிமிடம் வைத்திருந்தப் பிறகு ஒரு தட்டை எடுத்து அதில் நெய்யைத் தடவி அதில் இந்த கலவையைக் கொட்டி, ஆறியப் பிறகு விருப்பமான வடிவத்தில் சிறு சிறு துண்டுகளாகக் கட் செய்யவும். சுவையான சத்துக்கள் நிறைந்த முந்திரி கேக் ரெடி.

# பச்சைப்பயறு ஸ்டஃப்டு சப்பாத்தி !!



ஆரோக்கியமான உணவை உட்கொண்டால், நாள் முழுவதும் நன்கு சுறுசுறுப்புடன் செயல்பட முடியும். அதிலும் தினமும் சிறுதானியங்களை உணவில் சேர்த்துக் கொள்வது நல்லது. இப்போது சத்து நிறைந்த பச்சைப்பயிறு வைத்து பச்சைப்பயறு ஸ்டஃப்டு சப்பாத்தி செய்வது எப்படி

தேவையானப் பொருட்கள் :

முழு பச்சைப்பயறு - 100 கிராம்
கோதுமை மாவு - 5 கப்
பெரிய வெங்காயம் - 2
கடுகு - 1 டீஸ்பூன்
உளுத்தம்பருப்பு - 2 டீஸ்பூன்
மஞ்சள் தூள் - கால் டீஸ்பூன்
சீரகத்தூள் - அரை டீஸ்பூன்
பூண்டு - 5 பல்
பச்சை மிள்காய் - 2
தேங்காய் துருவல் - கால் கப்
நறுக்கிய கறிவேப்பிலை - சிறிதளவு
உப்பு - தேவையான அளவு
எண்ணெய் - தேவையான அளவு
தண்ணீர் - தேவையான அளவு

செய்முறை :

பச்சைப்பயறு ஸ்டஃப்டு சப்பாத்தி செய்வதற்கு முதலில் ஒரு பாத்திரத்தில் கோதுமை மாவை போட்டு, தேவையான அளவு தண்ணீர், எண்ணெய், உப்பு சேர்த்து நன்கு பிசைந்து வைத்துக்கொள்ளவும்.

பின்பு ஒரு பாத்திரத்தில் பச்சைபயறை போட்டு, தேவையான அளவு தண்ணீர் ஊற்றி, குறைந்தது 5 மணி நேரம் ஊறவைக்கவும்.

பின்பு மற்றொரு பாத்திரத்தில் ஊறிய பச்சைப்பயறைப் போட்டு வேக வைத்து, அதில் உள்ள தண்ணீரை வடித்துவிடவும்.

அடுத்து வெங்காயத்தைப் பொடிப்பொடியாக நறுக்கி வைத்துக்கொள்ளவும். அடுத்து பூண்டை தோலுரித்து தட்டி வைத்துக்கொள்ளவும்.

அடுத்து தேங்காய் துருவல், பச்சை மிளகாய், மஞ்சள், சீரகத்தூள் ஆகியவற்றை மிக்ஸியில் போட்டு ஒரு சுற்று சுற்றி எடுக்கவும். அடுத்து ஒரு வாணலியில் தேவையான அளவு எண்ணெய் ஊற்றி சூடானதும், அதில் கடுகு, உளுத்தம் பருப்பு, கறிவேப்பிலை, நறுக்கிய வெங்காயம், தட்டிய பூண்டு ஆகியவற்றைப் போட்டு தாளித்து, அதனுடன் அரைத்து வைத்துள்ள மசாலாவை சேர்த்து வதக்கவும்.

பின்பு அதனுடன் வேகவைத்த பச்சைப்பயறை சேர்த்து, அதனுடன் தேவையான அளவு உப்பு சேர்த்து கிளறி இறக்கினால் பச்சைப்பயறு ஸ்டஃபிங் ரெடி.

அடுத்து பிசைந்து வைத்துள்ள கோதுமை மாவை சிறுசிறு உருண்டைகளாக உருட்டி, உருண்டைகளுக்கு நடுவில் குழி செய்து அதனுள் பச்சைப்பயறு ஸ்டஃபிங் வைத்து மூடி சப்பாத்திகளாக தேய்த்து, தோசைக்கல்லில் போட்டு இரண்டு புறமும் நன்கு வேக வைத்து எடுத்தால் பச்சைப்பயறு ஸ்டஃப்டு சப்பாத்தி ரெடி.

# ஏன் கோவிலில் தேங்காய் உடைக்கிறார்கள்?

கோவிலில் தேங்காய் உடைபபதற்கு மிகப் பெரிய அர்த்தம் இருக்கும் என யோசித்தேன்.

ஒரு நண்பர் மிக அழகாக விளக்கம் அளித்து இருந்தார். அது தமிழ்நாடு இ பேப்பர் வாசகர்களாகிய உங்களுக்காக.... வழிபாட்டுக்குரிய தேங்காயில் ஒளிந்திருக்கும் தத்துவம்!

தேங்காய் தரும் தென்னை மரமும், வாழைப்பழம் தரும் வாழை மரமும் மக்களுக்கு தம்மிடம் உள்ள அனைத்தையும் தந்து உதவுகிறது. இவற்றின் எந்த பாகமும் வீண் ஆவதில்லை. மனிதனும் அப்படி உலகுக்குப் பயன்பட வேண்டும் என்பதை குறிக்கும் வகையில் தான் கோவிலில் அனைத்து பூஜைகளி லும் தேங்காய் உடைத்த பிறகே நிவேதனம் செய்வார்கள். தேங்காய் உடைப்பதே நம் ஆன்மாவை சுற்றியுள்ள மும்மலங்களை போக்குவதற்காக தான். ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்றும் மும்மலம் என்று சொல்லப்படுகிறது. தேங்காய் மேல் இருக்கும் மட்டை தான் மாயை மலம் எனப்படுகிறது. மட்டை எனும் மாயை மலம் நீங்கினால் அடுத்து நார் எனும் கன்ம மலம் வரும். கன்ம மலம் நீக்கப்பட்டால் தேங்காயைச் சுற்றி இருக்கும் ஓடு தெரியும். இந்த ஓடு ஆணவ மலத்தை குறிக்கும். ஓட்டை உடைத்தால் தேங்காய் இரண்டாக உடைந்து உள்ளே இருக்கும் வெள்ளைப் பருப்பு தெரியும். இந்த வெள்ளைப் பருப்பை பேரின்பம் என்பார்கள்.

ஆக வாழ்வில் மாயை, கன்மம், ஆணவம் என்ற மும்மலங்களையும் விரட்டினால் தான் பேரின்பத்தை பெற முடியும் என்பதை தேங்காய் உடைப்பதன் தாத்பர்யமாக சொல்கிறார்கள். தேங்காய் உடைப்பதில் இன்னொரு தாத்பர்யமும் உள்ளது.





தேங்காய் உள்ளே இருக்கும் இளநீர் உலக ஆசைகளின் அடையாளமாகும். தன்னை சுற்றி இருக்கும் ஓடு ஒரு போதும் உடையாது. அது என்றென்றும் தனக்கு பாதுகாப்பாக இருக்கும் என்று இளநீர் நம்புகிறது. அது போலதான் நாம் இளம் வயதில் நமது உடம்பு அழகானது, உறுதியானது என்று நம்பி பல்வேறு ஆசைகளை வளர்த்துக் கொள்கிறோம்.


ஆனால் மனம் பக்குவம் பெறும் போது நமது உடம்பு சாசுவதமானது அல்ல என்பது புரியும். அதாவது இளநீர் வற்றும் போது, அது தேங்காயின் பக்குவத்துடன் இரண்டற கலந்து விடும். ஓட்டுக்குள் இருக்கும் நீர் வற்றுவதால், ஒரு போதும் தேங்காய் கெட்டுப் போவதில்லை. மாறாக உறுதி பெறும்.

அது போல இளம் வயதில் ஆசைகளுடன் சுற்றித்திரியும் நாம் அனுபவ ஞானம் எனும் பக்குவம் வர, வர உலக ஆசைகளை துறந்து விடுகிறோம். என்ன ஒரு அழகான விளக்கம் இல்லையா?



ப.கோபிபச்சமுத்து
புதுப்பேட்டை, கிருஷ்ணகிரி - 1

# தினம் ஒரு தலைவர்கள் டி.ரங்காச்சாரி வரலாறு




கான்பெராவில் உள்ள ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் உள்ள ஓவியத்தில் காணப்படும் திவான் பகதூர் டி. ரங்காச்சாரியார் (நடுவில்). புகைப்பட உரிமை: சிறப்பு ஏற்பாடு.

மார்ச் 24, 1931 அன்று, புது தில்லியில் உள்ள மத்திய சட்டமன்றத்தில், முந்தைய இரவு லாகூர் சிறையில் சுதந்திரப் போராட்ட வீரர்களான பகத் சிங், சுக்தேவ் தாப்பர் மற்றும் சிவராம் ராஜ்குரு ஆகியோரை தூக்கிலிட்டதற்காக பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு எதிராக சில ஆவேசமான உரைகள் நிகழ்த்தப்பட்டன. தேசியவாதக் கட்சியின் தலைவரான மூத்த வழக்கறிஞர் டி. ரங்காச்சாரியார் தனது உரையில் கூறினார்: “ஆழ்ந்த துக்கம் மற்றும் ஆழ்ந்த கோப உணர்வுகளுடன் நான் ஒரு அறிக்கையை வெளியிட எழுந்திருக்கிறேன். பகத் சிங் மற்றும் இரண்டு பேருக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை நேற்றிரவு நிறைவேற்றிய அரசாங்கத்தின் நடவடிக்கையை நாங்கள் துக்கத்துடனும் வெறுப்புடனும் பார்க்கிறோம். பொதுமக்களின் கருத்தை புறக்கணிப்பதன் மூலம் அரசாங்கம் தங்களுக்கும் நாட்டிற்கும் கடுமையான பிரச்சனையை வரவழைத்து வருகிறது. இப்போது மிகவும் அவசியமான அமைதியான சூழ்நிலை கடுமையாக ஆபத்தில் உள்ளது. இதை நாங்கள் மிகவும் கடுமையாக எதிர்க்கிறோம், நாங்கள் மிகுந்த துக்கத்தில் இருக்கிறோம். இன்றைய நடவடிக்கைகளில் எங்களால் பங்கேற்க முடியாது.” (தி இந்து தேதியிட்ட மார்ச் 24, 1931).

வெட்டர்பர்னின் கீழ் தொழிற்பயிற்சி சட்ட வல்லுநர், சுதந்திர ஆர்வலர், கொள்கை வகுப்பாளர் மற்றும் கொடை வள்ளல் என பன்முக ஆளுமை கொண்ட திவான் பகதூர் ரங்காச்சாரியார், தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் அருகே உள்ள ஓம்பலபாடியில் நவம்பர் 27, 1865 அன்று பிறந்தார். கும்பகோணத்தில் உள்ள நேட்டிவ் உயர்நிலைப் பள்ளி, சிதம்பரத்தில் உள்ள பச்சையப்பா உயர்நிலைப் பள்ளி மற்றும் திருச்சியில் உள்ள எஸ்பிஜி கல்லூரியில் கல்வி பயின்றார். பொன்னம்மாள் என்கிற கனகவள்ளியை மணந்தார். ஒரு குறுகிய கால ஆசிரியருக்குப் பிறகு, ரங்காச்சாரியார் சென்னை சட்டக் கல்லூரியில் சட்டம் பயின்றார் மற்றும் 1890 இல் பட்டம் பெற்றார். அடுத்த ஆண்டு, அவர் சென்னை பார் கவுன்சிலில் சேர்ந்தார் மற்றும் அப்போது அட்வகேட் ஜெனரலாக இருந்த எச். ஜி. வெட்டர்பர்னிடம் பயிற்சி பெற்றார். பின்னர் அவர் 1896 இல் சுயாதீன பயிற்சியை நிறுவினார் மற்றும் சுதந்திர இயக்கத்தின் போது ஜி. சுப்பிரமணிய ஐயர் மற்றும் வி.ஓ. சிதம்பரம் பிள்ளை ஆகியோரின் பாதுகாப்பு உட்பட ஏராளமான குற்றவியல் மற்றும் சிவில் வழக்குகளை நடத்தினார். ரங்காச்சாரியார் தன்னை சட்டப் பயிற்சியுடன் மட்டுப்படுத்தவில்லை. அவர் மெட்ராஸ் மகாஜன சபையின் தீவிர உறுப்பினராக இருந்தார், பின்னர் மெட்ராஸ் மாநகராட்சியின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினராக கிட்டத்தட்ட 14 ஆண்டுகள் பணியாற்றினார். பின்னர் அவர் இந்திய இம்பீரியல் சட்டமன்ற உறுப்பினரானார், மெட்ராஸுக்கு அமர்ந்தார்.

சர்தார் வல்லபாய் படேலின் மூத்த சகோதரர் விட்டல்பாய் படேலின் பிறந்தநாள் நூற்றாண்டு விழாவையொட்டி மக்களவைச் செயலகம் 1973 ஆம் ஆண்டு வெளியிட்ட நினைவுப் பரிசு ஒன்றில், சட்டமன்ற உறுப்பினராக இருந்த ரங்காச்சாரியார் பிப்ரவரி 5, 1924 அன்று பிரிட்டிஷ் அரசாங்கத்தை பிரிட்டிஷ் பேரரசுக்குள் இந்தியாவிற்கு முழுமையான, சுயாட்சி அதிகாரம் கொண்ட அந்தஸ்தையும், மாகாணங்களில் மாகாண சுயாட்சியையும் வழங்க வலியுறுத்தி ஒரு தீர்மானத்தை முன்மொழிந்தார். சட்டமன்றத்தில் ஸ்வராஜ் கட்சியின் தலைவர் மோதிலால் நேரு முன்வைத்த திருத்தத்துடன் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆகஸ்ட் 1925 இல், ரங்காச்சாரியார் மத்திய சட்டமன்றத்தின் தலைவர் பதவிக்கு (சபாநாயகருக்கு சமமானவர்) அதிகாரப்பூர்வ வேட்பாளராகப் போட்டியிட்டு 56 வாக்குகளைப் பெற்றார். அவர் ஸ்வராஜ் கட்சி வேட்பாளர் விட்டல்பாய் படேலிடம் இரண்டு வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தார் என்று நினைவுப் பரிசு குறிப்பிட்டது. மத்திய சட்டமன்றத்தின் ஒரு அமர்வில் அதன் துணைத் தலைவராகவும் பணியாற்றினார்.



20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில், கென்யா பிரச்சினை தொடர்பாக இங்கிலாந்துக்கும், புதிய தலைநகரான கான்பெராவைத் திறப்பதற்காக ஆஸ்திரேலியாவிற்கும் இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதியாக ரங்காச்சாரியார் அதிகாரப்பூர்வ விஜயம் செய்தார். ஆஸ்திரேலியாவின் வளர்ச்சியில் கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, சென்னை சைதாப்பேட்டையில் உள்ள ஆசிரியர் கல்லூரியில் (இப்போது கல்வியில் மேம்பட்ட படிப்பு நிறுவனம்) ’ஆஸ்திரேலியாவில் கல்வி நடவடிக்கைகள்’ என்ற தலைப்பில் ஒரு சொற்பொழிவு ஆற்றியதாக, ஜூலை 27, 1928 அன்று தி இந்து ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

திரைப்பட மற்றும் நாடக ஆளுமையான ஒய். கீ. மகேந்திரா, கான்பெராவில் உள்ள ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் தனது கொள்ளுத்தாத்தா ரங்காச்சாரியாரின் ஓவியத்தைப் பார்த்தபோது பெருமைப்படுவதாகக் கூறினார். சென்னையில் உள்ள பத்மா சேஷாத்ரி பால பவன் சீனியர் செகண்டரி பள்ளிகளின் நிறுவனர், மறைந்த தனது தாயார் ராஜலட்சுமி பார்த்தசாரதி (திருமதி. ஒய்.ஜி.பி என்று அழைக்கப்படுபவர்) தனது தாத்தா ரங்காச்சாரியாரைப் பற்றிய கதைகளைக் கேட்டதை அவர் நினைவு கூர்ந்தார். அவரைப் பொறுத்தவரை, 1940களில் தனது தாயார் இளங்கலைப் பட்டம் பெறுவதில் உறுதியாக நின்று ஆதரவளித்தவர் ரங்காச்சாரியார் தான்.

1920களின் பிற்பகுதியில், அவரது மகன் ஆர். வெங்கடாச்சாரி, அல்லது முத்தண்ணா, ஜகன்னாத பக்த சபாவைத் தொடங்கினார், இது சென்னை எழும்பூர் ஹை ரோட்டில் ரங்காச்சாரியாரின் அப்போதைய இல்லமான வேத விலாஸின் வராண்டாவில் இருந்து இயங்கியது. வெங்கடாச்சாரியின் பேரனான எஸ். வாசுதேவன் கூறுகையில், இசைக்கலைஞர்களும் பாடகர்களும் ஜகன்னாத பக்த சபாவில் திரண்டு வந்து தங்கள் இசை நிகழ்ச்சிகளை நடத்தினர். ரங்காச்சாரியாரின் மருமகளில் ஒருவரான ரங்கம்மாள், மயிலாடுதுறை மகாதான தெருவில் உள்ள தேசிய உயர்நிலைப் பள்ளிக்கு ஒரு நிலத்தை நன்கொடையாக வழங்கியதாக திரு. வாசுதேவன் தெரிவித்தார். பின்னர், நூற்றாண்டு பழமையான பள்ளிக்கு திவான் பகதூர் டி. ரங்காச்சாரியார் தேசிய மேல்நிலைப் பள்ளி என்று பெயர் சூட்டப்பட்டது. ரங்காச்சாரியார் 1932 ஆம் ஆண்டு பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டு, 1933 ஆம் ஆண்டு பொது வாழ்வில் இருந்து ஓய்வு பெற்றார். ஆகஸ்ட் 4, 1945 அன்று, வேப்பேரியில் உள்ள ரிதர்டன் சாலையில் உள்ள தனது இல்லத்தில் 80 வயதில் இறந்தார்.

## விரக்தியில் இருந்த விஜய் ரசிகர்களுக்கு பொங்கல் விருந்து.. ஜனவரி 15 ரீ-ரிலீஸ் ஆகும் 'தெறி'




விஜய் நடிப்பில் வெளியான படம் 'தெறி'. அட்லி இயக்கத்தில் உருவான இப்படத்தில் எமி ஜாக்சன், சமந்தா என இரண்டு கதாநாயகிகள் நடித்திருந்தனர்.

ஜி.வி.பிரகாஷ் இசையமைத்த இப்படத்தை கலைப்புலி எஸ்.தாணு தயாரித்திருந்தார். இதில் விஜய் போலீஸ் அதிகாரியாக நடித்திருந்தார்.

இப்படம் வெளியாகி ரசிகர்களிடையே நல்ல வரவேற்பு பெற்றது. மேலும் வசூலிலும் சாதனை படைத்தது. இப்படம் இந்தியிலும் வருண் தவான் நடிப்பில் பேபி ஜான் என்ற பெயரில் கடந்த வருடம் ரிலீஸ் ஆனது.

இந்நிலையில் விரைவில் தமிழில் தெறி படம் பொங்கலை ஒட்டி ஜனவரி 15 அன்று ரீரிலீஸ் ஆக உள்ளதாக தயாரிப்பாளர் தாணு போஸ்டர் வெளியிட்டு அறிவித்துள்ளார்.

ஹெச் வினோத் இயக்கத்தில் விஜய் நடிப்பில் உருவாகியுள்ள ஜன நாயகன் படதிற்கு சென்சார் சான்றிதழ் மறுக்கப்பட்டதால் அப்படம் குறித்தபடி ஜனவரி 9, நேற்று வெளியாகாதது ரசிகர்களை கவலையில் ஆழ்த்தியது. இந்நிலையில் தெறி படம் பொங்கலை ஒட்டி ரீரிலீஸ் ஆவது விஜய் ரசிகர்களை உற்சாகப்படுத்தி உள்ளது.

இதற்கிடையே சென்னை உயர்நீதிமன்றத்தில் ஜன நாயகனுக்கு சென்சார் சான்றிதழ் வழக்கும் வழக்கு விசாரணை ஜனவரி 21 க்கு நேற்று தள்ளி வைக்கப்பட்டது. தயாரிப்பு நிறுவனமான கேவிஎன் புரொடக்‌ஷன்ஸ் இன்று உச்சநீதிமன்றத்தை நாடியுள்ளது.

சீரியல்களில் நடித்து பிரபலம் ஆன ஷிவானி நாராயணன் பிக் பாஸ் 4ம் சீசனில் கலந்துகொண்டு இருந்தவர். அந்த ஷோவுக்கு பிறகு சீரியல்களில் நடிக்க மாட்டேன் என கூறி படங்களில் மட்டுமே கவனம் செலுத்தி வருகிறார். இருப்பினும் சினிமா வாய்ப்புகளும் குறைந்த அளவிலேயே அவரை தேடி வருகிறது.இந்நிலையில் ஷிவானி ஷார்ட் உடையில் அழகிய போஸ் கொடுத்து புகைப்படங்களை வெளியிட்டு இருக்கிறார். அந்த புகைப்படங்கள் ரசிகர்களை கவர்ந்து வருகிறது.



## ஜன நாயகன் பட விவகாரம் குறித்த கேள்விக்கு சிவகார்த்திகேயன் அளித்த பதில்..!




விஜய் நடிப்பில் உருவாகியுள்ள ஜன நாயகன் படம் நேற்று வெளியாகும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், தணிக்கை குழு சான்றிதழ் வழங்க மறுத்துவிட்டதால் படம் குறிப்பிட்ட நாளில் ரிலீஸ் ஆகவில்லை.

தணிக்கை குழுவுக்கு எதிராக ஜன நாயகன் பட தயாரிப்பு நிறுவனம் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. இந்த வழக்கில் தனி நீதிபதி, சான்றிதழ் வழங்க உத்தரவிட்டார். இதை எதிர்த்து தணிக்கை குழு சார்பில் மேல்முறையீடு செய்யப்பட்டது. அப்போது, உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி தலைமையிலான அமர்வு, தனி நீதிபதி உத்தரவுக்கு தடைவிதித்து, வழக்கை 21-ந்தேதிக்கு ஒத்திவைத்துள்ளது.

இதனால் 21-ந்தேதி வரை படம் ரிலீஸ் ஆகுமா? என்பது சந்தேகம்தான். படக்குழு தற்போது உச்சநீதிமன்றத்தில் முறையீடு செய்துள்ளது.

இதற்கிடையே சிவகார்த்திகேயன் நடிப்பில் உருவான பராசக்தி படம் இன்று ரிலீஸ் ஆனது. இந்த படம் ரசிகர்களிடையே வரவேற்பை பெற்று வருகிறது.

இந்த நிலையில் ஜனநாயகன் விவகாரம் குறித்து சிவகார்த்திகேயனிடம் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு சிவகார்த்திக்கேயன் "ஒரு ரசிகரின் கண்ணோட்டத்திற்கு அப்பாற்பட்டு, இந்தத் திரைப்படம் திரையுலகிற்கும் திரையரங்குகளுக்கும் மிகவும் முக்கியமானது. இது எப்போது வெளியானாலும், அது அனைவருக்கும் ஒரு கொண்டாட்டமாக இருக்கும்" என்றார்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்

## 'திரௌபதி 2' டிரெய்லர்



2016 ஆம் ஆண்டு வெளியான "பழைய வண்ணாரபேட்டை" படத்தை இயக்கி தமிழ் சினிமாவில் இயக்குநராக அறிமுகமானவர் மோகன் ஜி.

இதைத் தொடர்ந்து 2020-ம் ஆண்டு திரௌபதி என்ற திரைப்படத்தை இயக்கினார். இந்தப் படம் சர்ச்சைக்கு உரிய படமாக இருந்தாலும் வெற்றிப் படமாக அமைந்தது.

கடைசியாக செல்வராகவன் நடிப்பில் வெளியான "பகாசூரன்" திரைப்படத்தை மோகன் ஜி இயக்கினார். இந்தப் படம் மக்களிடையே கலவையான விமர்சனத்தை பெற்றது.

இந்நிலையில் மோகன் ஜி அடுத்து இயக்கியுள்ள படம் திரௌபதி 2. இந்தப் படத்திலும் ரிச்சர்ட் ரிஷி கதாநாயகனாக நடித்துள்ளார்.இந்தப் படத்திற்கு ஜிப்ரான் இசையமைத்துள்ளார். வரலாற்று புனைவாக இந்த படம் உருவாகி உள்ளது. படம் பொங்கலுக்கு ரிலீஸ் ஆகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இப்படத்தின் டிரெய்லர் வெளியாகி உள்ளது. இதற்கிடையே, ஜன நாயகன் படத்துக்கு தணிக்கைச் சான்றிதழ் வழங்காத நிலையில், இந்தப் படத்துக்கு எளிதாகக் கொடுக்கப்பட்டது சமூக வலைதளத்தில் பேசுபொருளாகி உள்ளது.

## ரிலீசுக்கு முன்பே ரூ.50 கோடிகளை அள்ளிய டிமான்ட்டி காலனி 3




இயக்குநர் அஜய் ஞானமுத்து இயக்கத்தில் ஹாரர் திரில்லர் படமாக உருவாகி 2015-ம் ஆண்டு வெளியான டிமான்ட்டி காலனி திரைப்படம் மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றது.

இந்த படத்தின் வெற்றியைத் தொடர்ந்து அதன் 2-ம் பாகத்தை படக்குழு வெளியிட்டது. இப்படம் மக்களிடையே மிகப்பெரிய வரவேற்பை பெற்று வெற்றி திரைப்படமாக அமைந்தது. உலகளவில் இப்படம் 80 கோடி ரூபாய் வசூலித்தது குறிப்பிடத்தக்கது.

இரண்டாம் பாகத்தின் வெற்றியை தொடர்ந்து படக்குழு மூன்றாம் பாகத்தை இயக்க திட்டமிட்டது. படத்தின் ப்ரீ ப்ரொடக்‌ஷன் வேலைகள் நடந்து முடிந்த நிலையில் படப்பிடிப்பை ஜூலை மாதம் படக்குழு பூஜை விழாவுடன் தொடங்கியது. இந்த பாகத்தை பேஷன் ஸ்டூடியோஸ் மற்றும் கோல்ட் மைன் பிலிம்ஸ் இணைந்து தயாரிக்கிறது.

இப்படம் வரும் மே மாதம் கோடை விடுமுறைக்கு வெளியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், டிமான்ட்டி காலனி 3 படம் ரிலீசுக்கு முன்பே ரூ.50 கோடி வசூலித்துள்ளது.

படத்தில் ஆடியோ உரிமையை Tseries South நிறுவனம் தொலைக்காட்சி மற்றும் ஓடிடி உரிமையை ஜீ தமிழ் மற்றும் ஜீ5 நிறுவனங்கள் கைப்பற்றியுள்ளது.

## பொங்கல் வெளியீடாக திரைக்கு வரும் கார்த்தியின் 'வா வாத்தியார்'




தணிக்கை சான்றிதழ் கிடைக்காததால் 'ஜன நாயகன்' வெளியீட்டை பட தயாரிப்பு நிறுவனம் ஒத்திவைத்தது. கடைசி நேரத்தில் தணிக்கை சான்றிதழ் கிடைத்தால் இன்று பராசக்தி படம் வெளியானது.

பொங்கல் வெளியீடாக பராசக்தி மட்டும் வெளியான நிலையில், இந்த வாய்ப்பை பயன்படுத்தி கொண்டு மற்ற படங்களும் திடீரென்று பொங்கல் ரேஸில் குதித்துள்ளன.

இந்நிலையில், கடந்த மாதமே வெளியாகும் என அறிவிக்கப்பட்டு பின்னர் ஒத்திவைக்கப்பட்ட நடிகர் கார்த்தியின் 'வா வாத்தியார்' படம் பொங்கல் வெளியீடாக ஜனவரி 14 ஆம் தேதி வெளியாகும் என்று படக்குழு போஸ்டர் வெளியிட்டு அறிவித்துள்ளது.

இதனால் கார்த்தியின் ரசிகர்கள் இந்த பொங்கல் பண்டிகையை விமரிசையாக கொண்டாட தயாராகியுள்ளனர்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்

# சென்னை சத்யம் தியேட்டரில் பராசக்தி படம் பார்க்க வந்த ஸ்ரீலீலா, ஷாலினி அஜித்குமார்!



சுதா கொங்கரா இயக்கத்தில் சிவகார்த்திகேயன் நடித்துள்ள 'பராசக்தி' படம் உலகம் முழுவதும் இன்று வெளியானது. இதனால் திரையரங்குகள் முன்பு ரசிகர்கள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

முன்னதாக 'பராசக்தி' படத்திற்கு தணிக்கை சான்று வழங்க தாமதம் ஆனதால் திட்டமிட்டபடி இப்படம் வெளியாகுமா? என்ற கேள்வி எழுந்த நிலையில், தற்போது உலகம் முழுவதும் 'பராசக்தி' வெளியாகி உள்ளது.

இந்நிலையில், நடிகை ஸ்ரீலீலா , ஷாலினி அஜித்குமார் ஆகியோர் சென்னை சத்யம் தியேட்டரில் பராசக்தி படத்தை பார்க்க வந்தனர். அண்மையில் மலேசியாவில் அஜித்குமாரை நடிகை ஸ்ரீலீலா சந்தித்து பேசினார் என்பது குறிப்பிடத்தக்கது.




ஜெயிலர் படத்தில் ரஜினியின் மருமகளாக நடித்து ரசிகர்கள் மத்தியில் பிரபலமானவர் நடிகை மிர்னா மேனன். மேலும் தற்போது ஜெயிலர் 2 படத்திலும் நடித்து வருகிறார்.

ஜெயிலர் பட நடிகை மிர்னாவின் லேட்டஸ்ட் Stunning கிளாமர் போட்டோஷூட்.. | Mirnaa Menon Latest Glamour Photoshoot

இன்ஸ்டாகிராம் பக்கத்தில் ஆக்டிவாக இருக்கும் நடிகை மிர்னா, தனது லேட்டஸ்ட் Stunning கிளாமர் போட்டோஷூட் புகைப்படங்களை வெளியிட்டுள்ளார்.

இந்த புகைப்படங்கள் தற்போது ரசிகர்கள் மத்தியில் படுவைரலாகி வருகின்றன.

# பொங்கலுக்கு ரிலீஸ் ஆகிறது ஜீவாவின் "தலைவர் தம்பி தலைமையில்" படம்




கடந்த 2024-ம் ஆண்டு ஜீவா நடிப்பில் வெளியாகி மக்களிடம் நல்ல வரவேற்பை பெற்றது 'ப்ளாக்' திரைப்படம். இப்படத்தை பாலசுப்பிரமணி கேஜி இயக்கியிருந்தார். ஜீவாவின் ஜோடியாக பிரியா பவானி சங்கர் நடிக்க சாம்.சி எஸ் இசையமைத்திருந்தார். திரைப்படம் ஒரு டைம் லூப் கதையம்சத்தில் உருவாகி மக்களின் ஆதரவை பெற்றது.

இதனை தொடர்ந்து, ஜீவாவின் 45 ஆவது படமாக 'தலைவர் தம்பி தலைமையில்' உருவாகி உள்ளது. 'Falimy' படத்தை இயக்கி புகழ்பெற்ற இயக்குனர் நிதிஷ் சகாதேவ் இப்படத்தை இயக்கி உள்ளார். ராவண கோட்டம் படத்தை தயாரித்த கண்ணன் ரவி இப்படத்தை தயாரித்துள்ளார்.

தம்பி ராமையா, இளவரசு, பிரார்தனா நாதன், ஜென்சன் திவாகர் உள்ளிட்ட பலரும் நடித்துள்ள இப்படத்திற்கு விஷ்ணு விஜய் இசையமைத்துள்ளார். ஏற்கனவே இப்படத்தின் டீசர் வெளியாகி ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது.

அரசியல் கலந்த நகைச்சுவை படமாக உருவாகி உள்ள 'தலைவர் தம்பி தலைமையில்' படம் வருகிற 30-ந்தேதி உலகமெங்கும் வெளியாக உள்ளதாக படக்குழு ஏற்கனவே அறிவித்திருந்தது. இந்த நிலையில், வருகிற 15-ந்தேதி பொங்கலன்று வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது.

விஜயின் ஜனா நாயகன் படம் தணிக்கை சான்றிதழ் பிரச்சினையாக நேற்று வெளியாகவில்லை. இது தொடர்பான வழக்கை சென்னை உயர்நீதிமன்றம் வருகிற 21-ந்தேதி வரை ஒத்திவைத்துள்ளது. இந்த நிலையில்தான் ஜீவா படம் முன்னதாகவே ரிலீஸ் ஆகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# விருதுகளுக்கான களத்திலும் சாதனை படைக்கும் காந்தாரா சாப்டர் 1




"காந்தாரா சாப்டர் 1" திரைப்படம் திரையரங்கில் வெளியானதிலிருந்து 100 நாட்களை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது. இது அதன் சினிமா பயணத்தில் ஒரு முக்கிய மைல்கல்லாகவும், கலாச்சார தாக்கத்தின் அடையாளமாகவும் திகழ்கிறது. இந்திய மக்கள் மரபுகள், ஆன்மீக நம்பிக்கைகள் மற்றும் பூர்வகுடி கதைகளில் ஆழமாக வேரூன்றிய இந்தத் திரைப்படம், ரசிகர்களிடமும் விமர்சகர்களிடமும் பெரும் பாராட்டுகளைப் பெற்றுள்ளது. இதன் மூலம், இன்றைய இந்திய சினிமாவில் குறிப்பிடத்தக்க படைப்பாக "காந்தாரா சாப்டர் 1 " தன்னை நிலைநிறுத்தியுள்ளது.

ரிஷப் ஷெட்டி எழுத்து இயக்கத்தில், விஜய் கிரகந்தூர் தயாரிப்பில், ஹொம்பாலே ஃபிலிம்ஸ் நிறுவனத்தின் சார்பில் உருவான இப்படம், அதன் ஆழமான கதையமைப்பு, காட்சித் தன்மை மற்றும் பிரம்மாண்டமான காட்சிப்படுத்தலுக்காக பரவலான அங்கீகாரத்தையும் பாராட்டையும் பெற்றுள்ளது.

வெளியீட்டின் 100 நாட்களை கொண்டாடும் இந்நேரத்தில், "காந்தாரா சாப்டர் 1" திரைப்படம் "அகாடமி அவார்ட்ஸ்" விருதுகளுக்கான பரிசீலனைப் பட்டியலில் இடம் பெற்றுள்ளது. இது, பண்பாட்டுச் செழுமையும் உண்மையான உள்ளூர் கதையாக்கமும் கொண்ட இந்திய திரைப்படங்களுக்கு, உலகளாவிய அளவில் கிடைக்கும் அங்கீகாரத்தை பிரதிபலிக்கிறது.

"காந்தாரா சாப்டர் 1" தற்போது இந்திய எல்லையைக் கடந்து, உலகளாவிய அளவில் பெரும் அங்கீகாரத்தைப் பெற்று வருகிறது.



வளர்ந்து வரும் இளம் நடிகைகளில் ஒருவர் ரிதி குமார். லவ்வர், ராதே ஷ்யாம் போன்ற படங்களில் இவர் இதற்கு முன் நடித்திருக்கிறார். இதை தொடர்ந்து இவர் பிரபாஸ் உடன் இணைந்து நடித்திருக்கும் படம் ராஜா சாப். இப்படம் நேற்று வெளிவந்து, கலவையான விமர்சனங்களை பெற்றுள்ளது.

இந்த நிலையில், ராஜா சாப் பட நடிகை ரிதி குமார் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் தன்னுடைய லேட்டஸ்ட் கிளாமர் போட்டோஷூட் புகைப்படங்களை பதிவு செய்துள்ளார். இந்த புகைப்படங்கள் இணையத்தில் தற்போது வைரலாகி வருகின்றன.

# தமிழ்த் தீ பரவட்டும்...



சுதா கொங்கரா இயக்கத்தில் சிவகார்த்திகேயன் நடித்துள்ள 'பராசக்தி' படம் உலகம் முழுவதும் இன்று வெளியானது. இதனால் திரையரங்குகள் முன்பு ரசிகர்கள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், பராசக்தி படத்தை பாராட்டி நடிகரும் மாநிலங்களவை எம். பியுமான கமல்ஹாசன் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில், "அன்புள்ள இளவல் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு, பராசக்தி படத்தைப் பார்க்கத் தொடங்கும் முன் நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை இந்தப் படம் நம் கூட்டணி எதிர்கொள்ளப்போகும் தேர்தலின் மாபெரும் முரசொலியாகப் போகிறது என்று ஆம், இந்தப் படம் வெற்றி பெற்றாக வேண்டும் என்பது என் ஆசை மட்டுமல்ல, என் உண்மையான வாழ்த்தும் கூட இந்தப் படம் திமுக வரலாற்றுக்கு இட்ட வெற்றித் திலகம்

பின்குறிப்பு:

பின்னால் வந்தாலும் முந்திச் சொல்ல வேண்டியது உணர்ச்சி முந்திக்கொண்டதால் பின்தங்கிய குறிப்பு இது. முதல் பாராட்டு இந்த பயோ&பிக்ஷன் கதையையும், இதன் இயக்குனர் திருமதி சுதா கொங்கராவையும், இக்கதையைத் தேர்ந்து இதற்காக உழைத்து வெற்றியும் காணப்போகும் தம்பி சிவகார்த்திகேயனையும் சேரும்.

இந்தச் சினிமாச் சரித்திரத்தில் இணைந்துவிட்ட ரவி மோகன், அதர்வா, ஸ்ரீலீலா உள்ளிட்ட அனைத்து நடிகர்களுக்கும். ஒளிப்பதிவாளர் ரவி கே. சந்திரன், இசையமைப்பாளர் ஜி.வி பிரகாஷ், எடிட்டர் சதீஷ் சூரியா உள்ளிட்ட தொழில்நுட்பக் கலைஞர்களுக்கும் மற்றும் இந்தப் படத்துக்காக உழைத்த அனைவருக்கும் என் உளமார்ந்த பாராட்டுகள்" என்று தெரிவித்துள்ளார்.

# கருப்பான பெண்ணாக நடிக்கவும் கலரான பெண்ணையே தேர்வு செய்கிறார்கள்: பிரானா வருத்தம்

நான் சினிமாவிற்குள் வந்தது சாதிப்பதற்காகத்தான். அதற்கு நாயகியாகத்தான் நடிக்க வேண்டும் என்றோ, அழகான பெண்ணாகத்தான் திரையில் தோன்ற வேண்டும் என்றோ அவசியம் இல்லை. என் நடிப்புத் திறமையை நிரூபிக்க வாய்ப்புள்ள எந்த கதாபாத்திரமும் நான் செய்வேன்.

அதோடு கதாநாயகி என்று வரும்போது, ஒரு காலகட்டம் வரைதான் நடிக்க முடியும். ஆனால் கதாபாத்திரத்தை தேர்வு செய்து நடிக்கும்போது, அதற்கு காலவரையறை என்பது இல்லை. எல்லா கதாபாத்திரத்திலும் என்னால் நடிக்க முடியும் என்பதை நிரூபிக்க நினைக்கிறேன்.



நான் சினிமாவுக்கு வந்த தொடக்கத்தில் மிகவும் ஒல்லியாக இருப்பேன். அதை வைத்து விமர்சனம் செய்வதும், படத்தில் நடிக்கவும் வாய்ப்பு மறுக்கப்பட்டது. இப்போது நான், என் வயதிற்கு ஏற்ற உடல் பருமனில் இருக்கிறேன்.

இப்போதெல்லாம் ஆடிசன் வைத்து நடிகைகளை தேர்வு செய்வது குறைந்து விட்டது. சமூக வலைதளத்தில் பிரபலமாக இருப்பவர்களைப் பார்த்து தேர்வு செய்கிறார்கள். சமூக வலைதளத்தில் பிரபலமாக இருக்கும் அனைவருக்கும் திறமை இல்லை என்று சொல்லமாட்டேன். அதேநேரம் காலம் காலமாக நடிக்க சான்ஸ் தேடுபவர்களுக்கான வாய்ப்பு மறுக்கப்படுகிறது.

தமிழ் படத்தில் நடிக்க தமிழ் தெரியாத பிற மொழி பெண்களை தேர்வு செய்கிறார்கள். கருப்பான பெண் தேவை என்றாலும், கலரான பெண்ணை தேர்வு செய்து, அவருக்கு மேக்கப் போட்டு நடிக்க வைக்கிறார்கள். கருப்பாகவே இருக்கும் பெண்ணை தேர்வு செய்து நடிக்க வைத்தால் என்ன? இவையெல்லாம் மாற வேண்டும்.இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்




### மனிதம் !

கனமழை பெய்கிறதென்று
சாலையோரம் வாகனம்
நிறுத்தி மரத்தடியில்
ஒதுங்கலாம் என்றால் மரம்
ஏதும் காணவில்லை !

ஏதாவது வீட்டுப் பக்கம்
ஒதுங்கலாம் என்றால்...
வாசலில் நாய்கள் ஜாக்கிரதை
அறிவிப்பு பயமுறுத்தியது !

ஏதாவது கடை வாசலில்
ஒதுங்க நினைத்தால்
'வாகனத்தை நிறுத்தாதீர் '
என்ற அறிவிப்பு
தொங்குகிறது !

இறுதியில் தெரிந்தது
டாஸ்மார்க் கடையில்
முற்றம்.... வண்டியோடு
ஒதுங்கினேன் !

"என்ன தல , நீங்க கூட
மழைக்கு இதமா கட்டிங்
போட வந்துட்டீங்க போல !"
என்றான் தெரிந்த ஒருவன்...

மழையில் நனைவதே உத்தமம்
என்று மழையோடு மழையாய்
கலந்தேன் நான் !

**எம்.பி.தினேஷ், கோவை**

### இழப்பு !

பெற்றவர்களின்
இழப்பிற்கு பின்னரே
அவர்களின் மதிப்பு
தெரிகிறது !

மனைவி பிரிந்த பின்பே
பாசத்தின் அருமை
தெரிகிறது !

நுரையீரல் கெட்ட பின்பே
புகையின் வலிமை
புரிகிறது !

கல்லீரல் பழுதடைந்த
பின்பு மதுவின் தீமை
தெரிகிறது !

லட்சங்கள் இழந்த பின் ரம்மி
ஆட்டத்தின் அடிமையை
உணர்த்துகிறது !

உடல் வலிமை இழந்த பின்
இழந்து போன காலத்தின்
ஒவ்வொரு நாளின் அருமை
தெரிகிறது..

சொந்த பந்தங்களின்
பிரிவின் பின் தனிமையின்
கொடுமை உணர்த்துகிறது !



இருக்கும் நாட்களில்
வாழ்வை அனுபவித்து
செல்வோம்...
நல்லதை மட்டும்.. !

**எம்.பி.தினேஷ், கோவை**




### ஜனநாயகம்

மக்களின் குரலே
ஆட்சியின் உயிர்.
மக்களால் மக்களுக்காக
மக்களே நடத்தும்
அரசாங்கம் தான்
ஜனநாயகம்.
ஆகவே ஒவ்வொரு
வாக்கும் செல்வாக்குப்பெறும்.
சட்டமே எல்லோருக்கும் சமம்.
ஏழையையும், செல்வந்தரையும்
ஒன்றாய் நிறுத்தி,
உரிமையை உயர்த்தும்
உயரிய வழியில்.
பேசும் சுதந்திரம்
அதன் மூச்சு.
எதிர்ப்பே அதன் வலிமை.
நீதியும் நேர்மையும்
கைகோர்த்தால்,
ஜனநாயகம் வாழும்
தலைமுறை,
தலைமுறையாய்.



**உ.மு.ந.ராசன்கலாமணி**
**கோயம்புத்தூர்.**



### நம்பிக்கை உண்டு

" பிறப்பும் இறப்பும் ஒரு
முறை தான் அதிலும்
வீழ்வேன் என்று
நினைத்தாயோ ...?

கடைசி மூச்சு இரு
வரை போராடியே தீர்வேன்
தடைகளுக்கு அஞ்ச
மாட்டேன் .... "

தாமதமும் காயமும் சுட்ட
மனமும் தினம் தினம்
தொடர்ந்தாலும் .... "

விடமாட்டேன் ஓயமாட்டேன்
என்றாவது ஒரு நாள்
தலை நிமிர்வேன்
என் வசமாக்குவேன் ....."

தொடர்ந்து துன்பம்
வந்தாலும் நொருங்கிட
மனம் தொய்தாலும் விடாது
துரத்துவேன் ..."

பழியோ சதியோ முறியடித்து
முன் செல்வேன் முடங்கி
விட மாட்டேன்..."

சுனக்கம் தயக்கம் தன்
வசப்படுத்தினாலும்
சோம்பலை விரட்டுவேன்
வாடாமல் வதங்காமல்
புதுமலர்ச்சி காட்டுவேன் .... "

என்னை நான் அறிந்து
கொண்டேன் எட்டும் தூரம்
வெகு தூரம்
இல்லை ..."



ஜொலிக்கும்
எதிர்காலம்
துணிந்து
செல்வேன்
பிறர் துயர்
துடைப்பேன் ....."


**ஆர். சீதாராமன், சீர்காழி**

### எங்கிருந்து வந்தாய்...



எங்கிருந்து வந்தாய் என் உள்ளத்தில் அமர்ந்தாய் ,
மழைத்துளிபோல் குளிர்ச்சியாய் சிரிக்கிறாய்
தென்றலில் கலந்த இசையாய் இருக்கிறாய்
என் அமைதிக்கு மருந்தாக இருக்கிறாய்
வானத்தின் தாரகையாய் மின்னுகிறாய்
இரவில் ஒளியாய் தெரிகிறாய்
என்றுமே எனக்குள் உறைகிறாய்
நேற்று இன்று நாளை என முக்காலமும் என்னை பார்க்கிறாய்
தொலைந்தே போகிறேன் உன்னை பார்க்கையில்
என் ஆத்மாவில் கலக்க எங்கிருந்து வந்தாய்???

**உஷா முத்துராமன்**




### திருக்குறள் வழி வாழ்ந்தால் வாழ்க்கை இனிக்கும்

திருக்குறள் வழி வாழ்ந்தால் வாழ்க்கை இனிக்கும்
திருக்குறள் வழி நடந்தால் வாழ்க்கை சிறக்கும்
தான் என்ற அகந்தையை அகற்றுவது திருக்குறள்
நான் என்ற செருக்கை அழிப்பது திருக்குறள்
உயர்ந்த ஒழுக்கத்தை உணர்த்திடும் திருக்குறள்
ஓயாத உழைப்பைப் போதிக்கும் திருக்குறள்
முயற்சியை முன் நிறுத்திடும் திருக்குறள் அயற்சியை உடன்
அகற்றிடும் திருக்குறள் ஆறாவது அறிவை பயிற்றுவிக்கும்
திருக்குறள் ஆராய்ச்சி அறிவை வளர்த்திடும் திருக்குறள்
மனிதனை மனிதனாக வாழவைக்கும் திருக்குறள் மனிதனின்
மிருகக்குணம் போக்கிடும் திருக்குறள் மனிதனை அறிஞனாக
ஆக்கிடும் திருக்குறள் மனிதனின் அறியாமையை நீக்கிடும்
திருக்குறள் மனிதனை சான்றோனாக செதுக்கிடும் திருக்குறள்
அறிவியல் அறிவை உருவாக்கும் திருக்குறள்
அப்துல்கலாமை உயர்த்தியது திருக்குறள்
உலக இலக்கியத்தின் இமயம் திருக்குறள்
உலகில் ஈடு இணையற்ற நூல் திருக்குறள்
உலக மனிதர்கள் யாவருக்கும் வாழ்க்கையை
உணர்த்தும் ஒப்பற்ற உயர்ந்த திருக்குறள்
இல்லறம் நல்லறமாக விளங்கிட வேண்டும்
அன்பும் அறனும் அவசியம் வேண்டும் உயர்ந்த தவத்தை விட
சிறந்தது ஒழுக்கமாக இல்லறத்தில் வாழ்வது பிறர் பழிக்கும்
தீமைகள் இன்றி பிறர் போற்றும் வாழ்க்கை இல்லறம்
பூ உலகில் செம்மையாக வாழ்பவன் வானுலக
தேவர்களை விட சிறந்தவன் வாழ்வது எப்படி என்பதை அறிய



வளமான திருக்குறளைப் படியுங்கள்
பாடாத பொருள் இல்லை திருக்குறளில்
சொல்லாத கருத்து இல்லை திருக்குறளில்
1330 திருக்குறள் மனப்பாடம் செய்வதைவிட
10 திருக்குறள் வழி நடப்பது நன்று.

**கவிஞர் இரா.இரவி**



ஒரு வாரமாகியும் விடவில்லை
ஒருவேளை என்னை விட
உன்னை அதிகம் பிடித்து
விட்டதோ?
அந்த காய்ச்சலுக்கு!

நீ மழையில் தானடி
நடந்து வந்தாய் எனக்கேனடி
நனைகிறது மனது!

திட்டிக்கொண்டிருப்பதும்,
சண்டை போடுவதும்,
வெறுப்பது போல நடிப்பதும்
ஒரு வகை காதல் தான்!

காக்கா கடி கடித்து தரும்
கடலை மிட்டாய்
எள்ளுருண்டை
எனக்கெதற்கு?
உன் கன்னங்கள் இருக்க!

காலம் நம்மைபிரித்திருக்கலாம்
விதி வசத்தால் நீ யாருக்கோ
சொந்தமாகி போயிருக்கலாம்–
ஆனால் உன் நினைவுகளை
என்னிடமிருந்து பிரிக்கும்
வல்லமைஇப்புவியில்
யாருக்குமில்லை!

குழந்தையாய் மாறவும்
தயங்க மாட்டேன்
உன் முத்தம் மொத்தமாய்
கிடைப்பதென்றால்!

கண்களால் காதல் பாடம்
உன்னால் மட்டுமே சாத்தியம்!


கனவு வாழ்க்கையாவது
தந்து விடு கடவுளே
வாழ்ந்து விட்டு போகிறேன்
என் தேவதையோடு!

இதுவரை என் காதலை
சொல்லாமல்
இருந்திருக்கலாம்–
ஆனால் அவளை
சுவாசிக்காமல்
ஒரு நொடி கூட
இருந்ததில்லை!



உன் வாச சரசங்களில்
தேங்கி நிற்கும் நதியின்
மௌனத்தில் உயிர்
உறையும் சலனம் கூட்டை
தேடுகிறது
ஓர் பறவை வேட்டையாட
புற்றைத் தேடுகிறது
விரசமுற்ற ஓர் அரவம்!!

**லி.நௌஷாத் கான்**



### மனசு

உண்மையில் குழந்தை மனசு
தான் உனக்கும்! நடை பழகும்
குழந்தைபோல் தான்
நிதானமாக நகர்கிறது
உன் காதலும்!

### முடியும்

வேறு எதைப் பற்றியும்
நினைக்காமலும் வேறு
யாரைப் பற்றியும்
நினைக்காமலும் உன்னைச்
சுற்றி மட்டுமே என்
நினைவுகளை எப்பொழுதும்
வட்டமிட்டுச்சுற்றிக்
கொண்டிருக்கும்படிச்செய்ய
உன்னால் மட்டுமே முடியும்!

### நன்றி

நான் தனிமையாக
இருக்கும் போது யாருக்கும்
தெரியாமல் மிக ரகசியமாக
நீ என்னைக்கற்பனையில்
சந்திக்கத் தவறாமல்
வருவதற்காக
உனக்குக்கா த லு ட ன்
நன்றி!

### சவாரி

மௌனத்தின் மீது
அமர்ந்து
சவாரி செய்வது
ரொம்பவே பிடித்திருக்கிறது
இந்தக்கா த லு க் கு!

### வரம்

நீ இன்னமும்
என்னைக்கா த லி க் க வே
ஆரம்பிக்கவில்லை!
ஆனால் – அதற்குள்
நாம் பிரியாத வரம்
வேண்டும் என்று என்
ம ன ம் கேட்கிறது அன்பே!

### வேலை

உன்னைப்பற்றி
எப்பொழுதும் கவிதை எழுத
வைப்பதே வேலையாகப்
போயிற்று அன்பே
இந்தக்கா த லு க் கு!

### உதவி

நீ என்னிடமிருந்து
எதை மறைக்க
நினைக்கிறாயோ அதை
மட்டுமே காட்டுகிறது அன்பே
உன் கண்கள்!

### பறவை

ஓர் அசாத்திய மௌனம்கூட
இறக்கைகளைக்
கட்டிக் கொண்டு
பறக்கக் கற்றுக் கொள்வது
கா த லி ல் மட்டுமே
நடக்கிறது!

### புரிதல்

அடங்க மறுக்கும் என்
உணர்வுகளை அடக்கியாண்டு
மகிழ்விக்க உன் கா த ல்
மிக நன்றாகவே தெரிந்தும்
புரிந்தும் வைத்திருக்கிறது
அன்பே!

### வியப்பு

எப்படிக்கா த ல் செய்வது?!
என்று தெரியாதிருந்த
எனக்கு இப்படியெல்லாம்
கூடக்கா த ல் செய்ய
முடியுமா? என்று
வியக்க வைத்தவள்
அன்பே நீ!



**முத்து ஆனந்த் வேலூர்**

### ஓடாமல் இலக்கடைய முடியாது

கேட்காமல் உரிமைகளோ கிடைத்திடாது
கேள்வியின்றிப் புதுமைகளோ பிறந்திடாது
தீட்டாமல் கத்தியுமே வெட்டிடாது
தீய்க்காமல் பனம்பழமும் இனித்திடாது
ஆட்டாமல் கிளைகனியை உதிர்த்திடாது
ஆயாமல் உண்மைகளோ துலங்கிடாது
ஈட்டாமல் பொருள்வந்து சேர்ந்திடாது
ஈயாமல் மனிதநேயம் வளர்ந்திடாது

உழைக்காமல் யார்வாழ்வும் உயர்ந்திடாது
உரைக்காமல் எக்கருத்தும் வெளிப்படாது
அழைக்காமல் அறுவிருந்தும் சுவைத்திடாது
அணைக்காமல் எவ்வுறவும் நிலைத்திடாது
இழைக்காமல் மரம்அழகாய் ஒளிர்ந்திடாது
இணைக்காமல் எப்பகையும் நீங்கிடாது
குழைக்காமல் களிமண்ணோ இளகிடாது
குரைக்காமல் நாயிருப்போ தெரிந்திடாது


தட்டாமல் எக்கதவும் திறந்திடாது
தாக்காமல் எத்தடையும் தகர்ந்திடாது
குட்டாமல் எத்தவறும் குறைந்திடாது
குனியாமல் தலைக்கனமோ போயிடாது
வெட்டாமல் முருங்கையுமே துளிர்த்திடாது
வெடிக்காமல் பருத்தியுமே கிடைத்திடாது
ஒட்டாமல் ஒற்றுமையோ விளைந்திடாது
ஓடாமல் இலக்கிடைய முடிந்திடாது



**பாவலர் கருமலைத்தமிழாழன்**

# நூல் விமர்சனம்

**இயன்ற வரையில் இனிய தமிழ் !**
**நூல் ஆசிரியர் : திரு. க. முருகேசன் !**
**நூல் விமர்சனம் : கவிஞர் இரா. இரவி !**
**கவின் கணினி அச்சகம், 59, கீழக்கடைத் தெரு,**
**விருதுநகர் 626 001.**
**அலைபேசி : 97909 27404 விலை : ரூ. 60**




*அட்டைப்பட வடிவமைப்பு மிக அருமை. வான்புகழ் வள்ளுவர் தொடங்கி கம்பன், அவ்வை, இளங்கோ முதல் கவியரசு கண்ணதாசன், ஜெயகாந்தன் வரை ஓவியம் அற்புதம். உள் அச்சு யாவும் மிக நேர்த்தி. பாராட்டுக்கள். தமிழறிஞர் க. திருமாறன் உள்ளிட்ட பலரின் அணிந்துரையும், வாழ்த்துரையும் நூலின் அழகிற்கு அழகு சேர்ப்பதாக உள்ளன.*

*ஈழத்து எழுச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் அவர்களின் 'தமிழென் அன்னை' என்ற கவிதையோடு தொடங்கியது சிறப்பு. அவர்தான் 'தமிழா நீ பேசுவது தமிழா?' என்ற கேள்வி கேட்டு தமிழரை சிந்திக்க வைக்கிறார்.*

*நம் மொழி... செம்மொழி என்ற முதல் கட்டுரையில் உலகின் முதல் மொழி தமிழ் என்பதை நன்கு உணர்த்தி உள்ளார். உலகில் விவிலியத்திற்கு அடுத்தபடியாக அதிகம் மொழிபெயர்ப்பு செய்யப்பட்ட நூல் திருக்குறள் என்பதை விளக்கியது சிறப்பு. சங்க இலக்கியங்கள் என்ற சொத்துக்கள் நிறைந்த மொழி தமிழ் என்பதை உணர்த்தி உள்ளார்.*

*தமிழர்களில் பலருக்கு முன்னெழுத்தில் ஆங்கிலத்தில் விடுவதற்கு மனம் வருவதில்லை. தமிழருக்கு இரண்டு மொழிகளில் பெயர் என்று ஒரு புதுக்கவிதை பாடினான். இந்நிலை மாற வேண்டும் என்பதை வலியுறுத்து உள்ளார்.*

*"ஒரு சிலர் பெயரைத் தமிழிலும், முன்னெழுத்தை (initial) ஆங்கிலத்திலும் கையொப்பமிடும் பழக்கத்தை வைத்துள்ளனர். இதுவும் பிழையே ஆகும். முன்னெழுத்து, பெயர் ஆகிய இரண்டினையும் தமிழிலேயே எழுதுங்கள்".*

*இன்னும் சிலர் கையெழுத்தை ஆங்கிலத்திலேயே இடுகின்றனர். பொது நூலகத்தில் வருகைப்பதிவு கையொப்பம் பார்த்தாலே இது விளங்கும். தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா ஆங்கிலக் கையொப்பாம் ஏனடா ? என்ற எனது ஹைக்கூ நினைவிற்கு வந்தது. தமிழர்கள் அனைவரும் தமிழில் தான் கையொப்பம் இடுவோம் என உறுதிமொழி ஏற்க வேண்டும். ஆங்கிலேயர் யாராவது தமிழில் கையொப்பம் இடுவார்களா? சிந்திக்க வேண்டும். தங்களை குழந்தைகள் டாடி, மம்மி என்று அழைப்பதை பெருமையாக, நாகரீகமாகக் கருதிடும் பெற்றோர்களுக்கு உணர்த்தும் வண்ணம் உள்ள கருத்துக்கள் நன்று.*

*"அம்மா-அப்பா என்று அழைப்பதிலுள்ள உயிர்த்துடிப்புள்ள பாசம், மம்மி, டாடி என்று அழைப்பதி வருகிறதா? மம்மி, டாடி என்று அழைத்தால் குழந்தை நன்றாகப் படிக்கிறது என்று பொருளாம்! இது பொருளல்ல! மனத்தில் மூண்டுள்ள இருள், தாய்த் தமிழுக்கு மூட்டப்படும் தீச்சுருள்"*

*இப்படி, சிந்திக்கும் வகையில் தமிழ் மொழியின் சிறப்பு பற்றியும், தமிழை சிதையாமல் காக்க வேண்டிய கடமை பற்றியும் நன்கு எழுதி உள்ளார். நூலாசிரியர் க. முருகேசன் அவர்களின் தமிழ்ப்பற்றுக்கு தலைவணக்கம். பாராட்டுக்கள்.*

*இன்று தமிங்கிலம் பேசுவது தான் நாகரிகம் என்று தவறாகப் புரிந்து கொண்டு தமிங்கிலம் பேசி வருகின்றனர். ஊடகங்களிலும் தமிங்கிலம் பரப்பி வருகின்றனர். இயன்ற வரையில் இனிய தமிழ் பேசுங்கள் என்ற நூலின் தலைப்புக்கு ஏற்ப கருத்தை வலியுறுத்தி உள்ளார். காலத்திற்கேற்றவாறு வந்துள்ள நல்ல நூல் இது. இந்நூல் படித்தால் தமிங்கிலம் பேசிட கூச்சம் வரும். நல்ல தமிழ் நாவில் வரும். நம் தமிழ் சிதையாமல் காக்கப்படும். தேவை நினைப்பும், முயற்சியும் என்கிறார். இருந்தால் நல்ல தமிழ் நன்கு பேசலாம், தமிங்கிலத்திற்கு முடிவுரை எழுதிடலாம்.*

*"எங்கள் வாழ்வும், எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு" என்று புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் பாடினார். தமிழை மங்க விடாமல் காப்பது தமிழர்களின் கடமை என்பதை "பைந்தமிழின் ஆக்கமும், பாவேந்தரின் தாக்கமும்" கட்டுரையில் உணர்த்தி உள்ளார்.*

*சின்னச்சின்ன கட்டுரைகளின் மூலம் தாய்மொழிப்பற்றை, தமிழ்மொழிப்பற்றை நன்கு உணர்த்தி உள்ளார். துருப்பிடிக்க விடலாமா? கட்டுரையில் வழக்கொழிந்து விட்ட தமிழ்ச்சொற்களை பட்டியலிட்டு வழக்கப்படுத்தி விட்ட ஆங்கிலச்சொற்களை உச்சரிக்காமல் இருப்பதற்கு விழிப்புணர்வு விதைத்த விதம் நன்று. இப்பொழுது உணவு விடுதி, திருமண வீடு போன்ற இடங்களில் பலர், 'சோறு போடுங்க' என்று கேட்பதில்லை, 'ரைஸ் போடுங்க' என்கிறார்கள்.*

*ரைஸ் (RICE) என்பது அரிசியை அல்லவா குறிக்கும்? எனவே இலையில் அரிசியை போட்டு விடலாமா? அரிசியை அப்படியே சாப்பிட முடியுமா? பொருள் புரியாமலே சிலர் தமிங்கிலம் பேசிடும் அவலத்தை நன்கு சுட்டி உள்ளார்.*

*நல்ல தமிழ்ச்சொற்களைக் கொண்டு பிறரோடு உரையாடவும், பிறர் பின்பேசிடவும் வேண்டும் என்று நம் உடம்புக்கு அமுதமாக விளங்கும் என்கிறார் ஆசிரியர் க. முருகேசன். நல்லதமிழ் பேசினால் வாழ்நாள் கூடும் என்கிறார்.*

*ஒற்றுப்பிழை குறித்த விழிப்புணர்வும் விதைத்து உள்ளார். 'கடைப்பிடி' என்பதை கடை பிடி என்று எழுதினால் பொருள் மாறி விடும். எனவே கவனமாக எழுதுங்கள் என்கிறார்.*

*ஊடகங்களா? கேடகங்களா? என்ற தலைப்பிட்டு தமிழ்க்கொலை புரியும் ஊடகங்களுக்குக் கண்டனத்தை நன்கு பதிவு செய்துள்ளார். நிகழ்ச்சிகளின் தலைப்புகளே ஆங்கிலத்தில் காட்டும் அவலத்தை கண்டித்து உள்ளார்.*

*தமிழகத்தில் வணிக நிறுவன்ங்களில் தமிழ் இல்லையே என்ற ஏக்கத்தையும் எழுதி உள்ளார். ஆலயத்தில் கருவறையில் தமிழ் இடம்பெறவில்லை என்ற வேதனையை நொந்து எழுதி உள்ளார். தமிழர்கள் தம் குழந்தைகளுக்கு நல்ல தமிழ்ப்பெயர் சூட்டாதது குறித்தும் கவலை தெரிவித்து உள்ளார். உலகப்பொதுமறையில் உள்ள அறிவியல் கருத்துக்களை விளக்கி உள்ளார். சொல்வளம் மிக்கது தமிழ்மொழி ஏன்? கைஏந்த வேண்டும் பிறமொழியில் என்று கடிந்து உள்ளார். ஒலிநயம் பற்றியும் எழுதி உள்ளார்.*

*இரண்டு பேர் அரைகுறை ஆங்கிலத்தில் பேசினால் அவர்கள் தமிழர்கள் என்ற இழிநிலை மாற வேண்டும். தமிழர்கள் தமிழர்களோடு தமிழிலேயே பேசுங்கள். உயர்தனிச் செம்மொழியான தமிழ்மொழிக்கு ஈடு இணையாக உலகில் வேறு எந்த மொழியும் இல்லை. தமிழராகப் பிறந்ததற்காக தமிழர்களே பெருமை கொள்ளுங்கள். தமிழில் பேசுவதை பெருமையாகக் கருதுங்கள் என்பதை உணர்த்திடும் நல்ல நூல்.*

*குறிக்கோள்கள் 10 எழுதி தமிழ்மொழி காக்க வழிகள் எழுதி உள்ளார். நன்று. இறுதியாக பயனுள்ள சொற்பட்டியலும் உள்ளது. நூலாசிரியர் க. முருகேசன் அவர்களின் தமிழ்ப்பற்று பாராட்டுக்குரியது. விழிப்புணர்வு விதைத்தது. மிக நன்று.*

*தமிழ் மொழிப் பற்று மிக்க இந்நூலை விமர்சனயத்திற்காக என்னிடம் வழங்கி தமிழ்த் தேனீ இரா .மோகன் அவர்களுக்கு நன்றி*






காதோரம் கைபேசியில் கதைக்கவும் இல்லை,
கரம் கோர்த்து நடக்கவும் இல்லை,
கடைத்தெருவில் வருகிறேன் என்று சொன்னவன்
கடை வாசலில் வருகிறேன் என்று சொல்லவில்லையே?
சொல்லியிருந்தால், அந்த உறவு நிலைத்து இருக்குமோ
என்னமோ தெரியவில்லை அவளுக்கு...
அவனை நேருக்கு நேர் காண்கையில்,
கண்களால் பொழிந்த காதல் மழையை,
சற்று இதழால் சொல்லவில்லையே?சொல்லியிருந்தால்,அந்த
காதல் நிலைத்திருக்குமோ என்னவோ தெரியவில்லை
அவளுக்கு... அவன் மீது கொண்ட ஆசையை அத்தனையும்
தன் குடும்பத்திற்காக புதைத்து விட்டாலே,
அதைவிட வலி ஒன்றும் தெரியவில்லை பாவம் அவளுக்கு..
இத்தனை அழுகைகளுக்கும் ஆர்ப்பாட்டங்களுக்கும்
இடையிலும் காத்துக்கொண்டும்,
கற்பனை செய்து கொண்டும் இருக்கிறாள் இந்த



கல்நெஞ்சகாரி அத்தனையும் விட்டுவிட்டு
தனக்காக வந்து விட மாட்டானா என்ற ஏக்கம்
அல்ல,அவளை எதிரியை போல் பார்க்காமல்
நீயும் எனக்காக இருந்தவள் தானே,என்ற சிறு
பார்வையே போதும் போதும் என்கிறாள் இந்த
கல்நெஞ்சகாரி.

**வே. சுபலட்சுமி**

## மௌனம் பேசுமா?

இனி எதையும் சொல்லப்
போவதில்லை...
சொல்லியும் என்ன பயன்?
"புரிகிறது" என்கிறாய்...
ஆனால், புரியாதது போலவே
மீண்டும் தொடர்கிறாய்!
என் அன்பில் குறை
ஏதும் உண்டோ? என்
வார்த்தைகள் உன் மௌனம்
கலைக்கவில்லையா?
பின் என்னை மட்டும்
தவிர்ப்பது எதனால்?
சில இடைவெளிகள் அன்பை
அதிகப்படுத்தும்;
ஆனால், சில
இடைவெளிகள்
பிரிவை
நிரந்தரமாக்கும்!
நமக்கிடையேயான
தூரம்...
அதிகமாகிக்கொண்டே
போகிறது! உன் நினைவைத்
தவிர இப்போது என்னிடம்
எதுவுமில்லை!
அந்த நினைவையும் அழிக்கும்
வலிமை எனக்கில்லை;
அதனால் தான் தவிக்கிறேன்!
சுயநலமாய் இருப்பதில் ஒரு
சுகம் என்பார்கள்...
ஆனால் அந்த சுகத்தில்,
எனக்குச் சோகம் தான்
மிஞ்சுகிறது! நம்மிடையே
நிலவும் இந்த அமைதிக்கு
ஒரு முற்றுப்புள்ளி
வைக்கலாமே? நான்
காத்திருக்கிறேன்... உன் ஓர்



அழைப்பிற்காக! என்
அன்பை இசையாகத்
தருகிறேன்...
உன் மௌனம் கலைந்து,
எனக்காக மழையாக
வா!

**ஜனனி அந்தோணி ராஜ்,** திருச்சிராப்பள்ளி.



## "வேலைக்குப் போகும் சகோதரி நான்"

காலையில் கண்ணாடி முன்
நிற்கையில் ஒப்பனை தாண்டி
நான் அணிவது
துணிச்சல் முகமூடி!

பேருந்து நிறுத்தம்
எனக்கு காத்திருக்கும்
இடமல்ல காமக்கண்கள்
பாயும் வேட்டைக்காடு.

தேகம் மேயும்
ஒவ்வொரு பார்வையும்
எலும்பு வரை நசுக்கும்!

அலுவலகம் ஊதியத்தின்
இடம் அல்ல
மௌனத்தின் சிறை!

"சிரிச்சா நல்லா இருக்கும்"
என்னும் வழிசல்
வார்த்தைகளால்
என் மரியாதையில்
எண்ணற்ற கிழிசல்கள்?


மேசையின் மறுபுறம்
அதிகார நாற்காலியில்
உட்கார்ந்திருப்பது
மனிதனல்ல பதவி போர்த்திய
பசிக்கண்.

"அட்ஜஸ்ட் பண்ணிக்கோ"
என்று சொல்லும் சமூகமே
என் உடல் சமரசத்துக்கான
நாணயம் அல்ல
சம்ஹாரத்திற்கான
சங்கொலி!

வீடு திரும்புகையில்
என் கண்களில் விழும்
கண்ணீர் தனிப்பட்ட
துயரமல்ல என்
தலைமுறையின்
வற்றாத கண்ணீர்.

நாளை நான் மீண்டும்
பணிக்குச் செல்வேன்!
வாழ்க்கை வண்டி
கவிழ்ந்து விடக்
கூடாதென்பதற்காக!

ஒரு நாள் என் கண்ணீர்
கொதித்து எரிமலையாய்
வெடிக்கும் அப்போதும்
என்னைப் பார்த்து



என்ன கேட்பீர்கள்?
"நீ ஏன் மௌனமாய்
இருந்தாய்?"
என்றுதானே?

**முகில் தினகரன்**
கோயமுத்தூர்



1.தாயும் மனைவியும்
இரு கண்கள்
தாய் உலகத்தை காட்டியவள்
மனைவி உலகமாய்
இருப்பவள் தாயை நேசி
மனைவியை சுவாசி

2.அன்பு ஒருநாள் அழ
வைக்கும் பாசம் ஒருநாள்
பறந்து போகும் நட்பு ஒருநாள்
நாடகமாக மாறும்
வலிக்காத வாழ்க்கை
வரலாறு ஆவதில்லை
காயப்படாத மூங்கில்
புல்லாங்குழல்
ஆவதில்லை

3.உண்மைகள் சில
நேரங்களில் தொலைந்து
தான் போகுமே தவிர
தோற்றுப் போகாது ஒரு
போதும்

4. கணவன் மனைவி உறவு
முத்துச்சிப்பி போன்றது
சிப்பி இருக்கும் வரை தான்
முத்துக்கு பாதுகாப்பு
முத்து இருக்கும் வரை தான்
சிப்பிக்கு மதிப்பு



5.கவலையை யார்
தந்தால் என்ன புன்னகை
நம்மிடம் தானே
உள்ளது அதனால்
சிரித்துக்கொண்டே
நகர்வோம்

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி



## எட்டாக்கனி....

ஏட்டில் எழுதாத...
விண்ணக அழகே...

பாட்டில் இழைந்தோடும்...
உயிர் குடிக்கும்...இசையே...

தெள்ளமுதும் தெவிட்டும்....
தேன்சிட்டே...

கரடுமுரடும் வழுக்கும்...
வெண்பட்டே....

நெஞ்சில் இனிக்கும்...நேச
சர்க்கரையே...

பஞ்சும் மெலியும்...பாச
அக்கறையே....



நேரில் வந்து
விடு..

மலரோடு
நாராய்...வாழ
விடு....

**தே.. சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி

1. சிக்கலிலும் சரி
சிக்னலிலும் சரி சிறிது நேரம்
பொறுமையாக காத்திருந்தால்
வழி தானாக கிடைத்துவிடும்

2.ஒரு ஏமாற்றம் தனிமையை
தேட வைக்கும் ஒரு துரோகம்
ஒதுங்கிப் போக வைக்கும்
ஒரு அவமானம் புது
பாதையை உருவாக்க
வைக்கும்

3.உலகில் இரண்டு வகை
காகிதங்கள் உள்ளன
ஒன்று பணம் இரண்டாவது
புத்தகம் இரண்டாவது
காகிதத்தை சரியாக
பயன்படுத்தினால் முதல்
காகிதம் எளிதாக கிடைக்கும்

4. தேவையற்ற சில
நினைவுகளை சுமப்பதால்
நமக்கு நாமே சுமையை
கொடுத்துக் கொள்கிறோம்

5. ஜோதிடத்தையும்
ஜாதகத்தையும் நம்பி அதில்
வாழ்க்கையை தேடாதீர்கள்
வாழ்க்கை என்பது கடும்
உழைப்பின் பின்னால்
இருக்கிறது

6. வாழ்க்கை விதிப்படிதான்
நடக்குமே தவிர நாம்
விரும்பியபடி ஒருபோதும்
நடந்தது இல்லை

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

## எல்லார்க்கும் தேசம்!

எண்சீர் மண்டிலம்.

எல்லாரும் எல்லாமும்
பெறவே வேண்டும்
எல்லாரும் இனிதாக
வாழ வேண்டும்
பொல்லாத சமுதாயம்
உடைமை தன்னைப்
பொதுவாக்கி மகிழ்ந்திட்டால்
நிலைமை மாறும்!
இல்லாத மாந்தரெலாம்
இனிமை கண்டே
ஏற்றத்தை அடைந்திடுவர்
அன்றோ இன்று
நல்லாவே உரிமைகளும்
நன்றாய்க் கிட்டும்
நனிசிறந்த வாழ்வைத்தான்
எல்லாம் காண்பர்!

கடமைதனைச் செய்தபின்னே
உரிமை கேட்டால்
கட்டாயம் கிடைத்திடுமே
பாரில் என்றும்
மதிதன்னைச் சீராக
வைக்க வேண்டும்!
இடுக்கண்ணை நீக்கிட்டால்
இனிமை காணும்
ஈடில்லாச் செல்வநிலை
வந்தே சேரும் தடைகளையே



மீறித்தான்
உழைத்து
வந்தால்
தழைத்தோங்கி
எல்லாரும்
உயர லாமே!

**முனைவர் இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.



## புதிய வீணை..!

அன்பில் மலர்வது இன்பமே..
அறிந்து கொள்வாய்
என்மனமே.! இன்ப
வீணையின்.. நாதமே..
இதயங்களில் என்றும்
கேட்குமே..!

இந்த வாழ்க்கையின்..
கதவுகள் திறக்கும்!
அந்தப் பாதையில்..
தீபங்கள் இருக்கும்!
எந்த சோதனைகள்
வந்த போதும்..
புதிய வீணையின்..
இராகங்கள் கேட்கும்!

நீ.. கேட்ப்பது யாவுமே..
கிடைக்கும்..! உன்
தடைகளெல்லாம்
மனம் உடைக்கும்!
நீ.. வாழ்வது பிறருக்கு..
என்றால்.. உன் இராகத்தில்
புதுயுகம் பிறக்கும்..!



இது வெறும்
கவிதைகள்
அல்ல.. என்
கற்பனை
என்று நான்
சொல்ல..
அது உந்தன்
வாழ்க்கையில் வெல்ல..!
நான் மீட்டினேன் வீணையை
மெல்ல..!

**வே.கல்யாண்குமார்.**

## மன்னிக்கலாமா அதை?

மற்றவர் தம்மை
மன்னிக்கும் உள்ளம்
கொற்றவர் போலக்
காக்கும் உள்ளம்
குற்றமே செய்யினும்
முற்றிலும் மன்னித்துப்
பெற்றவள் அன்பைப்
பெருமையுடன் காட்டும்
உற்றதோர் உள்ளமே
உயர்ந்த உள்ளம்!

உண்மை புரிந்து
தன்னை மாற்றிய
தன்மை தெரிந்தபின்
மறக்கலாம் அதனை
மன்னிக்கலாம் அவரை!
மறப்பதும் அதனுடன்



மன்னிப்பதும்
இரண்டும்
மண்ணுலகில்
மகத்துவமே!

**வைரமணி**
சென்னை

## நேர்ச்சை.!

பதினெட்டு ஆடுகள்
வளர்த்த பவுனம்மாள் கிழவி..
ஆடுகளுக்கு வண்ண
நெட்டி மாலைகளோடு....
ஆட்டுப்பொங்கல்
கொண்டாடவென்று..
ஒன்றை கசைக்கெடாவை
கரீம் பாய்க்கு
விற்றுவிட்டாள்...
பணத்தோடு பட்டணம்
சென்றவள் பழக்கதோசத்தில்
பதினெட்டு மாலைகள்
வாங்கி வந்து... பதினேழை
ஆடுகளுக்கு அணிவித்து..
.மாட்டுப்பொங்கலன்று...
கசாப் போட்டு கரீம்பாய்



தந்துவிட்ட...
ஆட்டுத்
தலைக்கும்
நெட்டி
மலர்வளையம்
சூடி
நிறைவாய்
கொண்டாடினாள்
ஆட்டுப்பொங்கல்.!–

**க.குமாரகுரு,**
மயிலாடுதுறை

## "நிஜத்தில் என்று வருவாய்?"

"நாளைப் பொழுது
நமதெ"ன்று சுவரெங்கும்
போஸ்டர்கள்?
வாசித்தபடியே அலறுது
இன்றைய பசி!

"நியாயம் வருமெ"ன்று
மேடையெங்கும் முழக்கம்!
நியாயம் பேசுபவர்
குரல்வளையில் அழுத்தம்?

'வேலை வருமெ"ன்ற
கனவோடு இளைஞன்!
படிப்பு முடிந்ததும்
வந்து நின்றது
கல்விக்கடன் நோட்டீஸ்!

பெண்ணுக்குப் பாதுகாப்பு
வாக்குறுதி மொழிகளில்,
பாலியல் வழக்குகள்
எண்ணிக்கையில் முதலிடம்!

விவசாயி என்பவனே
நாட்டின் முதுகெலும்பெனத்
தெறிக்கும் பேச்சு!
அதே முதுகெலும்பில்
கடன் சுமை வைக்க
நின்று போகும் மூச்சு!

மருத்துவம் உரிமை
சட்டம் சொல்கிறது!
மருந்துச் சீட்டு மட்டும்
காசு கேட்கிறது!

எல்லாமிங்கு பொன்னாக
மின்னுது, பேச்சிலும்
விளம்பரத்திலும்?

நிஜம் மட்டும் திசையறியா
இருட்டில் வாடுது!

அதனால்தான்
நான் கேட்கிறேன்
சமத்துவமே...நீ



என்று
வருவாய்?
போஸ்டரிலிருந்து
நிஜத்துக்கு!

**முகில் தினகரன்**
கோயமுத்தூர்

## உயர்வும் தாழ்வும்

உன்னையே அறிந்து
கொள்ள தியானமோ மூச்சுப்
பயிற்சியோ தேவையில்லை.

உங்கள் செயல்பாடுகளில்
தீவிரமும் ஈடுபாட்டில் போதிய
அக்கறையும் செலுத்துவீர்

தகுதியும் திறமையும்
தோன்றுவதைக்
கண்கூடாகப் பார்த்துக்
கொள்ளலாம்
ஏற்றத் தாழ்வு புலப்படும்

தராதரம் உயர்ந்திட
பாடுபடுவீர்



உச்சம்
நோக்கி
பயணிப்பதை
எவராலும்
தடுக்க
முடியாது

**பி. பழனி,**
சென்னை.

ஆவியாய் போன நீரு
மழையாய் வந்ததென்ன

அருவியில் ஓடிய நீரு
விளை நிலத்தில்
பாஞ்சதென்ன

பயிர் விளஞ்சதாலே
பல உயிர்கள் வாழ்ந்ததென்ன

ஆவியாய் போன நீரு
மழையாய் வந்ததென்ன

நீரை குடித்து வாழும் மரம்
பல உயிரை காப்பதென்ன

நீரால் கிடைத்த
அனைத்தையும் உண்டு
மனிதன் பலபேர் ரத்தத்தை
குடிப்பதென்ன

அறிவியலால் ஆயுதம்
செஞ்சி மக்களை
அச்சுறுத்துவதென்ன

இயர்க்கையான சாவுக்கு
முன்னே இப்படி செத்து
மடிவதென்ன....!!

**பொன்.கருணா,**நவி மும்பை

## இன்னும் கொஞ்சம்...!

இன்னும் கொஞ்சம்
அன்போடு
இருந்திருக்கலாம் இவள்

இன்னும் கொஞ்சம்
இயல்போடு
இருந்திருக்கலாம் இந்த
உறவுகள்.

இன்னும் கொஞ்சம்
இசைவாய் இருந்திருக்கலாம்
இந்த நண்பர்கள்

இன்னும் கொஞ்சம்
இலவம்பஞ்சாக
இருந்திருக்கலாம் இந்த
மனசு.



இதுபோல்
இன்னும்
இன்னும்
கொஞ்சங்களில்
இந்த வாழ்வு.

**எஸ். சந்திரசேகரன்**
**அமுதா** செஞ்சிக்கோட்டை



## பொங்கலைப்பாடுவோம்!

அறுசீர் மண்டிலம்.

பொங்கலோ
பொங்கலென்று
பாடுவோம் புதியதாய்ச்
சிந்தனையில் கூடுவோம்!
கங்குலை நீக்கிடவே
நாடுவோம் காலமும்
கண்ணியமாய் வாழுவோம்!
எங்குளத் தமிழரெலாம்
வாழ்ந்திட ஏற்றமாய்
உழைத்திடவே சூழுவோம்!
மங்காத பொங்கலையே
காணுவோம் மாண்புறு
இனிமைதனைப்
பேணுவோம்!

மஞ்சளும்
பச்சரிசிச்சேர்ப்பமே
மண்புகழ்க் கன்னலுமே
ஈர்க்குமே! நெஞ்சிலே
அன்புமுட்டும் தேக்குவோம்
நேர்ந்தநல் பண்பினையே
ஆக்குவோம்! வஞ்சமில்
உறவுக்கும் பாலமாய்
வண்ணமாய் நட்புக்கும்
கோலமாய் செஞ்சொலாம்
தமிழ்மொழியில் பாடுவோம்
சேர்ந்துநாம் பொங்கலிலே
கூடுவோம்!

**முனைவர் இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.



## கம்மல் ஜிமிக்கி:

பெயர் கூறிய நொடி
முதல்– கண் கூட இமைக்க
மறுக்கிறது !!

பேராபத்தும் சரி
பெருமன்பும் சரி– இவளின்
நடனத்தில் மயங்கி
கிறங்கி போகிறது!!!–
அரிதாரங்கள்

பூசாமல்– ஒப்பனைகள்
இல்லாது பேரழகியாக
வலம் வர

இவளின் துணை
போதுமே!!– கட்டியவனை

சொக்க வைக்கும்
மாந்திரீகம் தெரிந்த
இவள் தான் – அவனின்
தாபத்தில் உள்ள
கோபத்தையும்

கோபத்தில் உள்ள
குழந்தையையும்
காண்கிறாள்!!!

**பானுஸ்ரீ**
பாண்டிச்சேரி

## ஆணவத்தைச் சாய்த்திடுவோம்

தீக்குள்ளே உடல்தன்னை மூழ்கச்செய்யும்
தீர்ப்புக்கே உடன்பட்டுச் சாவதற்கா
ஏக்கத்தை மனம்வைத்து மணம்முடித்தாய்
ஏனிந்த அவலங்கள்! தங்கமேனி
பாக்குமரக் கழுத்தினிலே மாலை போடப்
பணத்தாளின் கட்டுகளைத்தட்சணையாய்
வாக்களித்த காரணத்தால் அன்றோ வஞ்சி
வடிக்கின்றாய் செந்நீரைக் கணிணீ ராக !

புன்னகையின் அழகுதனைப் பார்க்கவில்லை
பூரிக்கும் பண்புதனைக் காணவில்லை
பொன்னகையும் பொருள்நகையும் பார்த்துத்தாலி
பூட்டுதற்கு வருகின்ற பேடி யர்க்குத்
தன்தலையைத் தாழ்த்துகின்ற நெஞ்சின் கோழைத்
தனத்தாலே விலைதன்னைப் பேசுகின்றார்
வன்நெஞ்சர் பெண்களினை அடிமையென்றே
வன்முறையில் தன்முறையைச் சாதிக்கின்றார் !

நாற்குணத்தின் நளினத்தைப் படைகளாக்கு
நாணிக்கண் புதைக்கின்ற போக்கை மாற்று
வேற்படையில் தீக்கனலைப் பாய்ச்சு பெண்ணே
வெகுண்டெழுந்தே உன்னினத்தை ஒன்றாய்க்கூட்டு !
சேற்றுமன ஆடவரை எதிர்ப்பாய் நன்று



சேர்க்கின்ற வாழ்விற்கோ அன்பே நாற்று
சாற்றிடுவாய் செயல்படுவாய்
ஆணவத்தைச்
சாய்த்திடுவாய் வென்றெடுப்பாய்
சமத்துவத்தை

**பாவலர் கருமலைத்தமிழாழன்**


Breaking NEWS Card.com
www.breakingnewscard.com
We Create Professional
Breaking News Cards
Daily 4 Cards Plus
get News Portal FREE
Call: 7789951009
₹999 ONLY


ADVERTISE WITH US!
CONTACT US
9337501889


அனைத்து பிரிவினருக்கும்
என் துணை
திருமண தகவல் மையம்
உங்கள் மணமகனை / மணப்பெண்ணைப் பதிவு செய்யவும்.
www.enthunai.com
support@enthunai.com
7871617005
7789941009


WE'RE
HIRING
TELECALLERS
SALARY STARTING FROM
RS.20000/- ONWARDS
+91 7871617005


கங்கோதரி எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.
GANGOTHARI ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அணுகவும்.
97103 48377, 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.


Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 %OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale... Residential / Commercial...
*Plots
*Flats
*House
*Villa
*Bungalows
*Farm Land
*Ware Houses
*Factory Sites
*Sheds
JOINT VENTURES INVITED
REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call:7871617005


அருள்தரும் தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..
www.arultharumdeivam.com


Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Ananda Bhaskar
Rs 8000 - Rs 15000 per month
9337501889
7789941009


SEVEN STARS
LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
Our Services are ...
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com








உடன்குடியில்
ஸ்ரீவேல்முருகன்
டெக்ஸ்டைல்ஸ்
ஜவுளி, நகைக்கடையில்
வேலைக்கு ஆண்கள்,
பெண்கள் தேவை.
தகுதிக்கேற்ப சம்பளம்.
Ph: 81442 27771




ஆட்கள் தேவை
1.Supervisor
with any post graduate
degree Age 45 above to 55
2.Security 2 Persons
3.Garderner
செடிகளை பராமரிக்க வேண்டும்
தேவதாஸ் மருத்துவமனை வளாகம்
நித்திரவிளை,
கன்னியாகுமரி மாவட்டம்
Cell : 6382807831








தூத்துக்குடி, திருநெல்வேலி சிப்காட் பகுதியில்
உள்ள பிரபல பன்னாட்டு நிறுவனத்தில்
பணிபுரிய ஆட்கள் தேவை. (ஆண்கள் மட்டும்)
ASST. செக்யூரிட்டி ஆபிஸர்
சம்பளம் : 27500 (Ex.Serviceman)
செக்யூரிட்டி சூப்பர் வைசர்
சம்பளம் : 24506 (Ex.Serviceman)
செக்யூரிட்டி கார்டு
சம்பளம் : 20701 (Civil)
8 மணி நேர வேலை
System work தெரிந்தவர்களுக்கும்,
முன் அனுபவம் உள்ளவர்களுக்கும்
முன்னுரிமை அளிக்கப்படும்
படிப்பு : 10th Pass அதற்குமேல்
வார விடுமுறை உண்டு
வருடாந்திர ஊதிய உயர்வு
ESI / PF / போனஸ் உண்டு
வயது : 25 முதல் 50 வயது வரை
தங்கும் வசதி செய்து தரப்படும்
குறைந்த விலையில் உணவு வசதி
செய்து தரப்படும்
98949 99422
99941 34169
81109 77577








# பல்சுவை களஞ்சியம்




## சாக்லெட் கடைக்குள்





இந்தியரும் அமெரிக்கரும் ஒரு சாக்லெட் கடைக்குள் நுழைந்தனர். அனைவரும் பிஸியாக இருந்தநேரம் அமெரிக்கர் 3 சாக்லெட்பார்களை யாருக்கும்தெரியாமல் எடுத்து தனது பாக்கெட்டுக்குள் போட்டுக் கொண்டார். சிறிது நேரம் கழித்து இருவரும் கடைக்கு வெளியே வந்தனர். அமெரிக்கர் தான் யாருக்கும் தெரியாமல் எடுத்த 3 சாக்லெட் பார்களையும் தனது பாக்கெட்டிலிருந்து வெளியே எடுத்து இந்தியரிடம் காட்டி, 'நாங்கெல்லாம் யாரு! அப்பவே நாங்க அப்படி..! பார்த்தியா யாருக்கும் தெரியாம 3 சாக்லெட் பார்களை எடுத்து கொண்டு வந்துட்டேன் பார்த்தியா?.. என்று பெருமை அடித்ததோடு மட்டுமில்லாமல் உன்னால இதைவிட பெரிசா ஏதாவது செய்ய முடியுமா? என்று சவால் வேறு விட்டார் இந்தியரிடம். விடுவாரா இந்தியர். '. உள்ள வா. உனக்கு உண்மை... திருட்டுன்னா என்னன்னு காட்டுறேன்னு சொல்லி அமெரிக்கரை சாக்லெட் கடையின் உள்ளே அழைத்துச் சென்றார். விற்பனை கவுன்டரில் இருந்த பையனிடம் சென்ற இந்தியர், அவனிடம் கேட்டார், வித்தை காட்டுறேன் பார்க்கிறியா?.. பையனும் சரியென்று தலையாட்ட கவுண்டரில் இருந்து 1 சாக்லெட் பார் எடுத்து, அதனை தின்று முடித்தார். அடுத்து இன்னொரு சாக்லெட் பார் எடுத்து அதனையும் தின்று தீர்த்தார். பிறகு 3வதாகஒரு சாக்லெட் பார் எடுத்து அதனையும் தின்று முடித்துவிட்டு கவுன்டரில் இருந்த பையனை ஏறிட்டுப்பார்த்தார். கவுன்டரில் இருந்த பையன் கேட்டான், ' எல்லாம் சரி. இதில் வித்தை எங்கே இருக்கிறது?.' இந்தியர் அமைதியாக பதில் அளித்தார்,' என் ஃப்ரெண்டோட பாக்கெட்ல செக் பண்ணிப்பாரு. நான் சாப்பிட்ட 3 சாக்லெட் பாரும் இருக்கும்.



## இளமை என்பது..

ரொம்ப மெனக்கெட்டு
முன் வழுக்கையையும்
நரை முடிகளையும்
செப்பணிட்டு இளமையில்
கூட "இன்" பண்ணாத
நான் பூட்ஸ் கால்களுடன்
தான் எல்லாம் இடத்திற்கும்
சென்று வருவேன்..
சற்று தைரியம் வர
வைத்துக் கொள்ள. ..

இளம்பெண்கள் சற்று
திரும்பி பார்க்கையில் ஏதோ
இனம் புரியாத நிறைவு
வருவதாய் உணர்வேன்.
எல்லாம் அந்த ஒரு
நாளில் உடைந்து போனது

உடல் நலம் குன்றி
மருத்துவமனையில்
கலைந்து கிடந்த போது
,செவிலியர் என் கை பற்றி
"அப்பா உடல் நலம்
சரியாகிவிடும் தைரியமாக
இருங்கள் "என சொன்ன
போது...

வயதிற்கான மரியாதையில்
தான் உண்மையில்
இளமை என்பது இல்லாத
ஒன்று என்ற நிறைவு
வந்திருந்தது ..

-ஜனனி அந்தோணி ராஜ்
திருச்சிராப்பள்ளி

# மீம்ஸ்







## விடுகதை



| | |
|---|---|
| பொட்டுப்போல் இலை இருக்கும், பொரிபோல் பூப் பூக்கும், தின்னக்காய் காய்க்கும், தின்னாப் பழம் பழுக்கும் அது என்ன? | முருங்கைமரம் |
| என்னைப் பார்க்க முடியும், ஆனால் எனக்கு எடை கிடையாது. என்னை ஒரு பாத்திரத்தில் போட்டால் அதன் அளவை குறைத்திடுவேன். நான் யார்? | துவாரம் |
| தொட்டு விட்டால் மூடிக் கொள்ளும் பச்சை மாளிகை ஜன்னல்கள் அது என்ன? | தொட்டா சுருங்கிச் செடி |
| அந்திவரும் நேரம், அவளும் வரும் நேரும் அது என்ன? | நிலா |
| பூமியிலே பிறக்கும், புகையாய்ப் போகும். அது என்ன? | பெட்ரோல் |



# ஜோக்ஸ்

எம்.டி. எதுக்கு அடுத்த வாரம் லீவு வேணும் உனக்கு?

ஊழியர்: எனக்கு கல்யாணம் சார்!

எம்.டி.: உனக்கு எந்த முட்டாப்பய பொண்ணு கொடுக்கறான்


ஊழியர்: என்ன சார் மறந்துட்டீங்களா? உங்கப் பொண்ணைத்தான் கல்யாணம் செஞ்சுக்கப்போறேன்!

======================================

கிளாஸ்ல ஃபர்ஸ்ட் உங்க மகன் தான்ங்க!
அப்படியா, ரொம்ப சந்தோஷம் சார்!
நீங்க வேற... பெல் அடிச்சதும் அவன் தான் வகுப்பிலேருந்து முதல்ல வெளியேறுவான்.

======================================

இரண்டு பள்ளி சிறுவர்கள் பேசிக்கொண்டது;
நம்ம டீச்சருக்கு வர வர ஞாபக மறதி அதிகமாயிடுச்சுன்னு நினைக்கிறேன்.
எப்படிச் சொல்ற?
பின்ன என்ன, அவங்களே போர்டில சிலப்பதிகாரம்னு எழுதிட்டு, நம்மகிட்ட சிலப்பதிகாரத்தை எழுதியது யார்னு கேட்கிறாங்க.



==========================================

ஆசிரியரும் மாணவனும் பேசிக்கொண்டது;
நம்ம பள்ளியில் மொத்தம் 5 மாடிகள் இருக்கு. ஒவ்வொரு மாடிக்கும் 15 படிக்கட்டுகள் இருக்கு. ஐந்தாவது மாடிக்கு போகணும்னா எத்தனை படிக்கட்டுக்கள் ஏறணும் ?
எல்லா படிக்கடையும் தான் ஏறணும் சார்!

==========================================

"எம்பிளாய்மெண்ட் ஆபிசிலே நீ பதியறதுக்கு, உன்னோட அப்பா, தாத்தாவையும் கூட்டிட்டு வந்திருக்கியே! ஏன்?"

"அப்பாவுக்குப் புதுப்பிக்கணும்... எங்க தாத்தாவுக்கு முதல் இண்டர்வியூ வந்திருக்கு!"



# ஜோதிடம் அறிவோம்






எண்பது ஆண்டுகளுக்கு முன்னர், பாலம்பாளையத்தைச் சேர்ந்த பாலகனின் கனவில் தோன்றிய பாலமுருகன், தான் குடிகொண்டுள்ள பாலகிரி மலைக்கு வருமாறு அவனிடம் கூறியுள்ளார்.

காலையில் எழுந்தவுடன் இந்த நிகழ்வை அவன் தன் பெற்றோரிடம் கூற, அவர்கள் ஊர் மக்களுடன் பாலகிரி மலையில் பல மணி நேரம் தேடி, ஓரிடத்தில் அமர்ந்துள்ளனர். சற்று நேரத்திலேயே மலையின் உச்சியில் மயில் ஒன்று நின்றிருந்தது. அவர்கள் அங்குச் சென்று பார்த்த

போது, சுயம்பு வடிவிலான முருகன் சிலை ஒன்று காணப்பட்டது. உடனே அங்கே பச்சைப் பந்தல் போட்டு ஊர் மக்கள் அந்த முருகன் சிலையை வழிபடத் துவங்கினர். நாளடைவில் கருவறை அமைத்தனர்.

இங்கு வந்து வேண்டிய பக்தர்கள் வாழ்வில் ஏற்றம் பெற, கோயில் மேலும் விரிவடைந்தது. முருகனுக்குப் புதியதாக அழகிய சிலை வடித்து, பிரதிஷ்டை செய்து வழிபடத் தொடங்கினர்.

35 ஆண்டுகளுக்கு முன்னர் படிக்கட்டுப் பாதை அமைக்கப்பட்டது. நான்கு சக்கர வாகனங்கள் செல்ல மண் பாதையும் உள்ளது. மலைக்குச் செல்லும் வழியில் அழகிய தோரண வாயில் உள்ளது. அடிவாரத்தில் விநாயகப்பெருமான் வீற்றிருக்க, படிக்கட்டுகள் வழியாக மலையேறும்போது முருகனும், எதிரே

ஔவையாரும் நின்றுள்ள நிலையில் தரிசனம் தருகின்றனர்.

கிழக்கு நோக்கிய கோயிலின் முன்பு பலிபீடம், கொடிமரம் அமைந்துள்ளன. மகாமண்டபத்தில் பலிபீடமும், அலகில் நாகத்துடன் மயிலும் இருக்க, விநாயகர் தனது இரு பக்கமும் நாகருடன் காட்சிதர, எதிரே மூஷிக வாகனம் உள்ளது. நவநாயகர்கள் சந்நிதி தனியாக உள்ளது.

கருவறையில் பாலகனாகவும், அழகனாகவும் முருகன் காட்சியளிக்கிறார். வேலவன் மீது வேல் சாத்தப்பட்டுள்ளது. இவருக்கு முன்னால் சுயம்பு வடிவ முருகனின் தரிசனமும் கிடைக்கிறது. கோஷ்டத்தில் தட்சிணாமூர்த்தி, பிரம்மன், துர்கை ஆகியோரை தரிசிக்கலாம். வெளிச் சுற்றில் பைரவர் தெற்கு நோக்கி தனிச் சந்நிதியில் அருள்கிறார்.

திருமணத் தடை உள்ளவர்கள் பங்குனி உத்திர நாளில் திருக்கல்யாண உற்சவத்தில் பங்கேற்றால் பலன் உண்டு. ஆறு வளர்பிறை சஷ்டி வழிபாட்டில் வணங்கினால் சங்கடங்கள் அனைத்தும் தீரும், எதிர்ப்புகள் நீங்கும், வழக்கு விஷயங்களில் வெற்றி கிடைக்கும், வேதனையெல்லாம் நீங்கும் என்பது பக்தர்களின் நம்பிக்கை.

தினமும் ஒரு கால பூஜை நடைபெறுகிறது. செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் சிறப்பு வழிபாடும், பைரவருக்கு தேய்பிறை அஷ்டமி நாளில் மாலை 6 மணியளவில் சிறப்பு பூஜையும் நடைபெறுகின்றன. விசேஷ நாள்களில் கோயிலில் பக்தர்கள் கூட்டம் அதிகமாகவே இருக்கும். ஐப்பசி மாதம் கந்த சஷ்டி நாளில் காலை சிறப்பு அபிஷேக, அலங்கார பூஜைகள் விமரிசையாக நடைபெறும்.

ஈரோடு மாவட்டத்துக்கு உள்பட்ட அந்தியூரிலிருந்து பருவாச்சி வழியாகச் சென்று 10 கி.மீ. தொலைவிலுள்ள பாலம்பாளையம் அடையலாம்.

## சனியின் குணங்கள்

சனி ஒரு மனிதனை கஷ்டத்தில் பழக்கப்படுத்தும். அப்படிப் பழகியவர்களுக்கு, அது தரும் உத்வேகமும் வைராக்கியமும், துணிச்சலும் உழைப்பும் மிகப்பெரிய உயரத்திற்கு அவர்களைக் கொண்டு செல்லும். ஆனால், நிதானமான முன்னேற்றம்தான் கிடைக்கும். சோதனைக்குப்பின் தான் சாதனையைச் செய்ய அனுமதிக்கும்.

சனியைக் குறித்து நாம் அச்சப்படத் தேவையில்லை. மிகச் சரியாக நம்முடைய வாழ்க்கையில் செயல்களைச் செய்தால், சனி நமக்குப் பரிசு தரத் தயங்காது.

நாம் நன்கு உழைப்பவர்களாக இருந்தால், அந்த உழைப்பின் ஊதியத்தை சனி தருவதற்குத் தயங்காது.

ஆனால், சனியின் மாயைகளில் அகப்படக் கூடாது. அது சில நேரங்களில் தவறான வழியைக் கூடக் காட்டும். பேராசையைத் தூண்டும். அகப்பட்டால் பெருங்குழிக்குள் தள்ளி விடும்.

சனியின் குணங்கள் ஆர்ப்பாட்டம், ஆடம்பரம் அல்ல. அடக்கமும் எளிமையும் உள்ளவர்களை, எதையும் பொறுமையோடு அணுகுபவர்களை சனி மிகப்பெரிய உயரத்திற்கு கொண்டு செல்லும்.

நம்முடைய நடத்தையை திருத்திக் கொள்ள வேண்டும். சோம்பேறித்தனமா, நிதானமா என்பதைப் பகுத்தறிந்து, சோம்பேறித்தனத்தைத் தவிர்த்து நிதானத்தைக் கைக்கொண்டால் சனியால் கிடைக்கும் வெற்றி நிச்சயம்.

இனி சில ஜாதகங்களில் சனி எப்படி பலன் தந்தது என்பதைப் பார்க்கலாம்.

நம்முடைய உறவினர் ஜாதகம் இது. சென்னையில் மிகப்பெரிய ஐ.டி. கம்பெனியில் பணிபுரிகிறார். மிகப்பெரிய சம்பளம். கார் அந்தஸ்து என வாழ்கிறார்.

நடப்பது சனி திசை. கும்ப லக்னம். லக்னத்திற்கு ஐந்தாம் இடத்தில் (மிதுனம்) லக்னாதிபதி சனி இருக்கிறார் . சனிக்கு வீடு கொடுத்த புதன் லக்னத்திற்கு 11-ஆம் இடத்தில் தனுசு ராசியில் இருக்கிறார். புதன் சனி பார்வை இருக்கிறது.

1. லக்கினாதிபதி சனி பூர்வ புண்ணியமான ஒன்பதால் இடத்தில் அமர்ந்திருப்பது முதல் நன்மை. லக்னாதிபதி பலம் பெறுகிறார். சனிக்கு மிதுனம் நட்பு வீடு. வீட்டுக்குரிய புதனும் தனுசிலிருந்து பார்க்கிறார்.

2. ஜீவனகாரகனான சனி லக்கினாதிபதியாகி, ஐந்தாம் வீட்டில் அமர்ந்து ஒன்று ஐந்து ஒன்பது என்ற திரிகோண இணைப்பை ஏற்படுத்துகின்றார். அவருடைய பார்வை இரண்டாம் இடத்தில் பதிகிறது. எனவே, பூர்வ புண்ணிய பலத்தினால், பொருளாதாரம், வேலை, சிந்தனை (ஐந்தாமிடம் சிந்தனை, அதிர்ஷ்டம்) என எல்லாவற்றிலும் முன்னேற்றமாக இருக்கின்றார்.

ஒரு நன்மை என்றாலும், மருந்து சாப்பிடும் பொழுது பக்க விளைவு இருப்பதுபோல சில விளைவுகளை எதிர்கொண்டுதான் ஆக வேண்டும்.



## கோரக்கர் நீராடிய 'அத்திரி கங்கை'



கோரக்கரின் பூர்வ ஜென்மத்தில், அத்திரி என்ற முனிவருக்கு 8 சீடர்கள் இருந்தனர். அவர்களில் கோரக்கரும் ஒருவர். கோரக்கரின் குருபக்திக்காக அத்திரி மகரிஷி தாம் தவம் செய்ய அத்தி மரத்தடியில் தண்டத்தால் தட்டி, தம் கமண்டலத்தில் உள்ள நீரை தெளித்து அங்கேயே கங்கையை உற்பத்தி செய்து அதில் கோரக்கரை நீராட செய்தார்.

அத்திரி கங்கை

இன்றும், அது அத்திரி கங்கை என்றே அழைக்கப்படுகிறது. திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் அருகில் உள்ள ஆழ்வார்குறிச்சிக்கு மேற்கே சுமார் 5 கி.மீட்டர் தொலைவில் ஆதிசிவசைலம் எனப்படும் அத்திரி மலைக்கோவில் உள்ளது.

இங்குள்ள ஆதி சிவசைல நாதரை அத்திரி முனிவர் வழிபட்டதால் 'அத்திரி பரமேஸ்வரர்' என்றும் கோரக்கரால் வழிபடப்பட்டதால் 'கோரக்க நாதர்' என்றும் பெயர்கள் கொண்டுள்ளார். இங்குள்ள ஆறுபட்டை வடிவ லிங்க ரூபமாக உள்ள அம்பிகையின் நாமமும் அத்திரி பரமேஸ்வரி என்பதே ஆகும்.

## வாழும் காலத்தில் சௌகரியமாக வாழ

கங்கை, யமுனை, பண்டைய சரஸ்வதி சங்கமத்தில் ஸ்நானம் செய்பவர் எப்பொழுதும் அழியாதவராக இருக்க வேண்டும் என்று இந்திர பகவானிடம் பிரார்த்தனையும் உள்ளது. இந்தச் சங்கமத்தில் குளித்தால், கடந்த கால, நிகழ்கால, அறியப்படாத பாவங்கள் அனைத்தும் கழுவப்படும் என்றும் மத்ஸ்ய புராணம் கூறுகிறது. இது வேறு எந்த புனித நீராட்டத்தையும் விட லட்சம் மடங்கு சக்தி வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. திரிவேணி மிகவும் தெய்விகமானது. அந்த தெய்விகத் தருணத்துக்காக, தேவர்கள் கூட காத்திருக்கிறார்கள். எனவே இது "முக்தி ஜனனி' என்று அழைக்கப்படுகிறது. மேலும் இது எண்ணற்ற யக்ஞங்களைவிட அதிக புண்ணியத்தை ஏற்படுத்துவதால், இந்த இடம் "பிரயாக்' என்று அழைக்கப்படுகிறது.

சமீபத்தில் காஞ்சி காமகோடி பீடத்தின் சங்கராசாரியருடன் இணைந்து பிரயாக் கும்பமேளாவுக்கு நான் சென்றது ஒரு புதிய அனுபவம். கங்கா ஸ்துதி, கங்கா தசஹர ஸ்தோத்திரம், காசி பஞ்சகம், கங்காவதாரணம் (ராமாயணம் & பாகவதம் போன்றது), திரிவேணி மஹாத்மியம், பிரயாகா க்ஷேத்ர மஹாத்ம்யம் மற்றும் யமுனாஷ்டகம் போன்றவற்றை சங்கராசாரியர்



ஒரு பக்தரை போன்று பாடியது பரவசம் அளித்தது. இதற்கு முன் இவற்றின் அர்த்தத்தையும் முக்கியத்துவத்தையும் விளக்கினார். இந்த ஞான குரு உலக நலம், பாரதத்தின் நீடித்த செழுமைக்காக ஒரு சங்கல்பத்தை மேற்கொண்டு பின்னர் புனித நீராடல் செய்தார். கடவுளுக்கும் வேத பண்டிதர்களுக்கும் விசேஷமான காணிக்கைகளைத் தொடர்ந்து, மாகங்கா பூஜையின் சடங்கு முறை பார்ப்பதற்கு ஒரு தெய்விக நிகழ்வாக இருந்தது. திரும்பிச் செல்லும்போது, புனிதமான, அழியாத அத்தி மரமான "அக்ஷயவடம்' தரிசனத்தை ஒருவர் தவறவிட முடியாது. காஞ்சி மடத்தின் மற்றொரு சுவாரஸ்யமான பரிமாணம், "சங்கர விமான மண்டபம்' ஆகும். இது தென்னிந்திய பாணியில் காஞ்சி மடத்தால் கட்டப்பட்ட நான்கு மாடி கோயில். இது கண்காணிப்பு, கூட்ட மேலாண்மைக்காக திரிவேணி சங்கமத்தின் கண்காணிப்பு மையமாகவும் செயல்படுகிறது. தொடக்கத்திலிருந்து இறுதி வரை இறக்குமதி செய்யப்பட்ட வாழ்க்கை முறைகளை அல்லாமல், அதன் சொந்த பலங்களை நம்பும் ஒரு கலாசார ரீதியான, வளமான சமூகத்தின் நங்கூரங்களைப் பிரதிபலிக்கிறது. பிரயாகையின் விமான நிலையம், ரயில் நிலையம், சாலைகள், குறுக்கு சந்துகள் தெய்விகத் தன்மையுடன் பிரகாசித்தன. வாழ்க்கையின் அனைத்துத் தரப்பு மக்களும் தன்னியல்பாக திரண்டு வந்தது, பிரயாக் கும்பமேளாவை, உலக அளவில் பாரதத்தின் நாகரிகக் கண்காட்சியாக மாற்றியது.

## வாகை சூடும் கடக ராசிக்காரர்கள்!




கடக ராசியில் புனர்பூசம் (4), பூசம், ஆயில்யம் நட்சத்திரங்கள் என்று 9 பாதங்கள் உள்ளன. இது நீர் தத்துவம் கொண்ட சர ராசி. வயது முதிர்வுக் காலத்தில், இவர்கள் தங்கள் பாசத்தில் குடும்பத்தில் உள்ள அனைவரையும் கட்டி தன்னுடைய சிறகுக்குள் வைத்திருக்கும் ஒரு பாசமிக்கவர். ஒரு குறிப்பிட்ட வயது வரை இவர்களின் சுகம் என்பது தாயின் கருவறை மற்றும் அன்னையின் மடி.

சூரியனை சிவன் என்றும் சந்திரனை பார்வதி என்றும் ஜோதிடத்தில் கூறப்படுகிறது. அதனால் தான் காலபுருஷ தத்துவப்படி சந்திரனுக்கு அருகில் சூரியன் அமர்ந்துள்ளார். இவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரே வீடு. சூரியன் மேஷத்தில் உச்சமாகிறார் சந்திரன் அவரருகிலே ரிஷபத்தில் உச்சமாகிறார். சந்திரன் என்பவர் பெண் காரக உறவு என்றால் தாய், மாமியார் மற்றும் வீட்டில் உள்ள தலைவி.

கடகத்தின் சின்னம் நண்டு: நண்டின் தன்மை அது தன் எல்லா குட்டிகளையும் அரவணைப்பது போல இந்த கடக ராசிக்காரர்கள் அதிக பாசக்காரர்கள் மற்றும் அன்பால் அரவணைப்பவர்கள். நான்காம் பாவமான பாசமிக்க தாயின் ஸ்தானம் ஆகும். "நண்டானுக்கு இடம் கொடேல்' என்றொரு பழமொழிக்கு ஏற்ப இந்த லக்கினக்காரர்கள் மெல்ல தன்னை நுழைத்துக் கொண்டு, முழுவதுமாக ஆக்கிரமிக்கும் கெட்டிக்காரர்கள். 'நண்டு கொழுத்தால் வளையில் தங்காது' என்ற பழமொழி கடத்திற்குப் பொருந்தும். இந்த ராசிக்காரர்கள் வளர வளர இடம் பெயர்ந்து கொண்டே இருப்பார்கள். அதாவது தங்கள் திறமைக்கு ஏற்ப வெவ்வேறு வேலையில் மாறிக்கொண்டே இருப்பார்கள். ஆண்டுக்கொருமுறை நண்டுகள் தங்களுடைய மேலோடுகளை அகற்றி புதுப்பித்துக் கொள்கின்றன. இவர்கள் தன் திறமைகளை கற்று பல்வேறு வழிகளில் தங்களுடைய அறிவை புதுப்பித்துக் கொள்வார்கள்.

கடக ராசியினர் வணங்கும் தெய்வம்

மருத்துவர் திருத்தேவன்குடி கற்கடேஸ்வர், அருமருந்து நாயகி, அபூர்வ நாயகி மற்றும் தன்வந்திரியை வழிபட்டால் வாதம், மன நோய், மற்றும் எல்லா வித நோய்களும் தீரும். கடக ராசியினர் பௌர்ணமி அல்லது திங்கள் கிழமைகளில் பழம்பெரும் சிவன் கோயிலில் உள்ள குளங்களில் குளித்து அம்பாளுக்குப் பூஜை செய்வது நன்று.

இது தவிர சந்திரன் வழிபட்ட ஸ்தலங்கள், திருவரகுணமங்கை நத்தம், திருமணச்சேரி, பட்டீஸ்வர துர்க்கை, திங்களூர், திருவிடந்தை, திருவேள்விக்குடி மற்றும் கல்யாண கோலம் கொண்ட அனைத்து பழம்பெரும் சைவ வைணவ கோயில்களை தரிசிக்கலாம். நேரம் கிடைக்கும் போதெல்லாம் அபிராமி அந்தாதி ஸ்லோகத்தை உச்சரிப்பது நன்று.

## நோய்கள் நீக்கும் சிவன்!

தக்கன் என்னும் கொடியவன் தனது 27 மகள்களை அழகிய சோமன் எனப்படும் சந்திரனுக்குத் திருமணம் செய்துவைத்தார். அப்போது தக்கன் தனது மகள்களை சந்திரனிடம் ஒப்படைத்து, "27 மகள்களிடமும் சமமாக அன்பைச் செலுத்தி வாழவேண்டும்" என்று நிபந்தனை விதித்தார். ஆனால் சோமனோ, மிகுந்த அழகியான ரோகிணியிடம் மட்டும் அதிகப்படியான காதல் கொண்டு வாழ்ந்து வந்தார். இதனால் ஏனைய 26 பேரும் தக்கனிடம் முறையிட்டனர்.

இதைக் கேட்ட தக்கன் பெரும் சீற்றம் கொண்டு, சோமனுக்கு நாளும் ஒரு கலை குறைந்துவர சாபம் அளித்தார். அதுவே தேய்பிறையானது. சாபம் பலித்தது. எச்சமாக ஒரே ஒரு கலை மிஞ்சியிருந்த வேளையில், திருவாரூர் வந்து புற்றிடம் கொண்ட பெருமானை வழிபட்டார். தேவதீர்த்தத்தில் நீராடி, ஐந்தெழுத்து மந்திரத்தை நாளெல்லாம் நெஞ்சுருக ஓதியவாறு மடப்புரத்தில் சிவலிங்கம் ஸ்தாபித்து முறையாக வழிபட்டார்.



சிவனும் விடை மீது அமர்ந்து காட்சி அளித்து அருளினார்.

சோமனும் தனக்கு நேர்ந்த சாபத்தை மனங்கசிந்து கண்ணீர் சிந்திக் கூறிப் பணிந்து நின்றார். வேண்டியோருக்கு வேண்டியதை அளிக்கும் சிவனும், ""தக்கன் சாபத்தால் நீ தேய்ந்தாலும் பின்னர் நாளொரு கலையாக வளர்வாய்!" என்று அருளினார். அதுவே வளர்பிறையானது. சோமனின் குறையைத் தீர்த்து அருள்புரிந்ததால், இத்தல இறைவன் சோமநாதப் பெருமான் என்று அழைக்கப் பெறுகிறார்.

வரம் பெற்ற சோமன், ""பக்தர்கள் வந்து வழிபட்டு குறைகளைக் களையும் வகையில் நீங்கள் அருள்புரிய வேண்டும்" என்றார்.

சோமன் ஸ்தாபித்த சிவலிங்கமே "சோமநாதர்' .

சைவ சமயத்தின் தலைமைப் பீடமாகவும், விராட புருஷஸ்தலமாகவும், பிறந்தாலே முக்தி தருவதும், உலகத்தில் முதலில் தோன்றிய மூர்த்திதலமாகவும், நால்வரால் பாடல் பெற்றதாகவும் விளங்குவது தியாகேசர் உறையும் திருவாரூர் ஆகும்.

அருணகிரிநாதரால் திருப்புகழ் பாட பெற்ற தலமாகவும் மடப்புரம் தலம் உள்ளது. மேற்கு நோக்கி அமையப் பெற்ற அற்புத சிவன் கோயில்.

ஞானத்தையும் யோகங்களையும் அளிக்க வல்ல அன்னையாக ஸ்ரீஞானசித்தி யோகாம்பிகை அருள்கிறார்.

"சோமநாதரை வேண்டுவோரின் துன்பங்கள் நீங்கும். மருந்துகள் முதலியவற்றால் தீராத நோய்களில் விடுபட்டு நலம் பெறுவர். கல்வி, செல்வம், புகழ், சித்தி, முக்தி உள்ளிட்ட பேறுகளை எளிதில் எய்துவர்' என்பது ஐதீகம். திங்கள்கிழமை வழிபட்டால் பக்தர்கள் கூடுதல் பலன்களைப் பெறலாம்.

இங்குள்ள சந்திர புஷ்கரணி தீர்த்தத்தில் நீராடுவோருக்கு தோல் நோய் உள்பட அனைத்து விதமான நோய்களும் விலகுகின்றன என்பதை பக்தர்கள் உணர்கின்றனர்.



## மகாளய பட்சம் என்றால் என்ன என்று தெரியுமா?



மகாளய அமாவாசை நாளில் மகாவிஷ்ணுவின் ஆசீர்வாதம் பித்ருக்களை தேடி வரும். அந்த ஆசீர்வாதத்தை பித்ருக்களும் நம்மிடம் நேரடியாக எடுத்து வரக்கூடும்.

எனவே மகாளயபட்ச நாட்களில் பித்ருக்களை வழிபாடு செய்து, விஷ்ணுவின் அருளை பெறத் தவறாதீர்கள்.

மாதம் தோறும் அமாவாசை வந்தாலும் தை அமாவாசை, ஆடி அமாவாசை, மகாளய அமாவாசை ஆகிய மூன்று அமாவாசைகளும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. இந்த மூன்றிலும் அதிக புண்ணியத்தை தருவது மகாளய அமாவாசை ஆகும்.

அதாவது 15 நாட்கள் பித்ருக்களை வழிபட வேண்டியதை மகாளய அமாவாசை குறிக்கிறது. பவுர்ணமி தினத்துக்கு மறுநாள் பிரதமை திதியில் இருந்து மகாளய அமாவாசை வரை உள்ள 15 நாட்களும் பித்ருக்கள் பூலோகத்தில் இருக்கும் காலமாக கணக்கிடப்பட்டுள்ளது. அதன்படி இந்த ஆண்டு கடந்த 8- ந்தேதி மகாளயம் தொடங்கியது. வருகிற 21-ந்தேதி வரையிலான 14 நாட்கள் பித்ருக்கள் நம்மை நெருங்கி இருக்கும் மகாளயபட்ச தினங்களாகும்.

திதி என்னவென்று தெரியாதவர்கள், மகாளய அமாவாசை தினத்தன்று தர்ப்பணத்தை மிகவும் சிரத்தையாக செய்தல் வேண்டும். தர்ப்பணத்தை மிக, மிக ஆடம்பரமாக செய்ய வேண்டும் என்பதில்லை. எளிமையாக செய்தாலே போதும், பித்ருக்கள் மனம் மகிழ்ந்து நம்மை ஆசீர்வதிப்பார்கள்.

இந்த 15 நாட்களில் வரும் ஒவ்வொரு திதியும், ஒவ்வொரு வகை பித்ருக்களுக்கு உகந்த தினமாக கருதப்படுகிறது. அந்த திதி சிறப்பு நாட்களை பெரியவர்களிடம் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

## பொதுக்கூட்டத்தில் நயினார் நாகேந்திரனிடம் தீபம்



திருப்பூரில் பாஜக தேர்தல் பொதுக்கூட்டத்தில் மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரனிடம் தீபம் வழங்கப்பட்டது.

## சனாதன சமத்துவப் பொங்கல் விழா



கோவை மாநகர பாஜக சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சனாதன சமத்துவப் பொங்கல் விழாவில் மாநிலத்தலைவர் நயினார்நாகேந்திரன் கலந்து கொண்டார்.

## பாஜக தேசிய செயல் தலைவர் நித்தின் நபினுக்கு வரவேற்பு



கோவை வந்த பாஜக தேசிய செயல் தலைவர் நித்தின் நபினை பாஜக தலைவர் நயினார்நாகேந்திரன் வரவேற்றார்.

## பொது விநியோகக் கடையின் புதிய கட்டடம்



திருவைகுண்டம் அருகே கால்வாய் ஊராட்சியில் ரூ.13.16 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பொது விநியோகக் கடையின் புதிய கட்டடத்தை கனிமொழி எம்.பி., திறந்து வைத்து, பொங்கல் பரிசுத் தொகுப்புகளை பொதுமக்களுக்கு வழங்கினார். கலெக்டர் இளம்பகவத், எம்எல்ஏக்கள் சண்முகய்யா, அமிர்தராஜ், தூத்துக்குடி மேயர் ஜெகன் உடன் உள்ளனர்.

## மாணவ - மாணவிகளுடன் முதல்வர் ஸ்டாலின், சமத்துவ பொங்கல்



சென்னை கொளத்தூர் சட்டமன்ற அலுவலகம் அருகில் நேற்று நடந்த பொங்கல் விழா நிகழ்வில், அனிதா அச்சீவர்ஸ் அகாடாமியில் பயின்ற, பயிலும் 814 மாணவ - மாணவிகளுடன் முதல்வர் ஸ்டாலின், சமத்துவ பொங்கல் வைத்து, புத்தாடைகள், பொங்கல் பரிசுகள் வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.

## முதல்வர் ஸ்டாலினுடன் ஷெல்பி எடுத்த மாணவிகள்



முதல்வர் ஸ்டாலினுடன் ஆர்வமாக ஷெல்பி எடுத்த மாணவிகள்.

## தன்னார்வலர்களுக்கான பயிற்சி வகுப்பு கலந்தாய்வு



குமரிமாவட்டத்தில் உங்கள் கனவை சொல்லுங்கள் திட்டத்தின் கீழ் பணியாற்றவுள்ள தன்னார்வலர்களுக்கான பயிற்சி வகுப்பில் கலெக்டர் அழகுமீனா கலந்தாய்வு நடத்தினார்.

## வைகோவுக்கு கி.வீரமணி வாழ்த்து



மதிமுக பொதுச் செயலாளர் வைகோ திருச்சியில் இருந்து மதுரைக்கு மேற்கொண்டுள்ள சமத்துவ நடைபயணம் நேற்று 9வது நாளாக நடந்தது. வைகோவை திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி சந்தித்து வாழ்த்தினார்.

## கவிதைக்கான விருது பெற்ற கவிஞர்களுக்கு வாழ்த்து




சென்னை புத்தக காட்சியில் கவிதைக்கான விருது பெற்ற கவிஞர் சுகுமாரன், சிறுகதைக்கான விருது பெற்ற ஆதவன் தீட்சண்யா, நாவலுக்கான விருது பெற்ற முருகன், உரைநடைக்கான விருது பெற்ற பேராசிரியர் பாரதிபுத்திரன் (சா. பாலுசாமி), நாடகத்திற்கான விருது பெற்ற கருணா பிரசாத், மொழிபெயர்ப்பிற்கான விருது பெற்ற கீதா ஆகியோருக்கு தமிழச்சி தங்கபாண்டியன் வாழ்த்து தெரிவித்தார்.

## விளையாட்டு போட்டியில் வென்ற வழக்கறிஞர்களுக்கு பரிசு



கோவில்பட்டியில் நடந்த விளையாட்டு போட்டியில் வென்ற வழக்கறிஞர்களுக்கு தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக மாணவரணி துணை அமைப்பாளர் ஆகாஷ் பாண்டியன் பரிசுகளை வழங்கினார்.

## மூத்த குடிமக்களை அமைச்சர் அன்பரசன் நேரில் சந்தித்து புத்தாண்டு – பொங்கல் வாழ்த்துக்களை தெரிவித்தார்



முகலிவாக்கத்தில் உள்ள அனைத்து நலச்சங்க நிர்வாகிகளையும், மூத்த குடிமக்களையும் அமைச்சர் அன்பரசன் நேரில் சந்தித்து அவர்களின் குறைகளை கேட்டறிந்து புத்தாண்டு - பொங்கல் வாழ்த்துக்களை தெரிவித்தார்.

## நலத்திட்ட உதவிகளை துணை முதல்வர் உதயநிதி வழங்கினார்



சேப்பாக்கம் பகுதி, 62-வது வட்டம், சிந்தாதிரிப்பேட்டை பாலகிருஷ்ணன் தெருவில் நலத்திட்ட உதவிகளை நேற்று துணை முதல்வர் உதயநிதி வழங்கினார்.

## மாணவர்களுக்கு மடிக்கணி அமைச்சர் வழங்கினார்



திருச்சி அண்ணா பல்கலைக்கழக மாணவர்களுக்கு மடிக்கணிகளை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வழங்கினார்.

## விலையில்லா வீட்டுமனை பட்டா



ஈரோடு மாவட்டம், சென்னிமலையில் நடந்த விழாவில் பயனாளிகளுக்கு இணையவழி விலையில்லா வீட்டுமனை பட்டாக்களை அமைச்சர் சாமிநாதன் வழங்கினார். டிஆர்ஓ சாந்தகுமார் , பேரூராட்சித் தலைவர் ஸ்ரீதேவி உடன் உள்ளனர்.

## பொங்கல் பரிசு தொகுப்புகளை மகிழ்ச்சியுடன் பெற்ற பெண்கள்



குமரி மாவட்டத்தில் பொங்கல் பரிசு தொகுப்புகளை மகிழ்ச்சியுடன் பெற்ற பெண்கள்.

## மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியை கனிமொழி எம்.பி., திறந்து வைத்தார்



திருவைகுண்டம் ஊராட்சி ஒன்றியம் - சிவகளை ஊராட்சியில் ரூ.25 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 1 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியை கனிமொழி எம்.பி., நேற்று மக்கள் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.




## திமுகவினருக்கு பொங்கல் நலத்திட்ட உதவி



மயிலாப்பூர் கிழக்கு பகுதி திமுக செயலாளர் முரளி ஏற்பாட்டில், திமுகவினருக்கு பொங்கல் நலத்திட்ட உதவிகளை, தமிழச்சி தங்கபாண்டியன் எம்பி, சென்னை தென்மேற்கு மாவட்டச் செயலாளர் வேலுஎம்எல்ஏ வழங்கினர்.

## உங்க கனவ சொல்லுங்க திட்ட துவக்க விழா



செங்கல்பட்டு கலெக்டர் அலுவலகத்தில் "உங்க கனவ சொல்லுங்க" திட்ட துவக்க விழாவில் அமைச்சர் தா.மோ. அன்பரசன் பங்கேற்று மக்களின் கருத்துக்களை கேட்டறிந்தார்.

# வேலைவாய்ப்பு கார்னர்

## என்சிஇஆர்டி (NCERT) - யில் 141 காலிப் பணியிடங்கள்





மத்திய அரசின் கீழ் இயங்கி வரும் தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சிலில் (என்சிஇஆர்டி) ஆசிரியர் அல்லாத பணிக்கு காலியாக உள்ள பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன. கல்வித்தகுதி: 10-ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மேலும் ஏதேனும் ஒரு துறையில் பட்டயம்(Diploma)/இளநிலை பட்டம்(Degree) பெற்றிருக்க வேண்டும். பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

குறிப்பு: மேலும் பாடவாரியான காலிப் பணியிடங்கள் பற்றிய முழு விபரம் அறிய இணைய தளத்தை பார்வையிடலாம். தகுதி மற்றும் அனுபவம் ஆகியவையும் பணியிடங்களுக்கு ஏற்றவாறு மாறியுள்ளன. வயது வரம்பு : குறைந்தபட்சம் 18 வயது, அதிகபட்சமாக 27 என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. மேலும் உச்ச வயது வரம்பில் எஸ்சி/எஸ்டி/ஓபிசி பிரிவினர்களுக்கு ஒன்றிய அரசு விதிமுறைகளின் படி தளர்ச்சி உண்டு. தேர்வு முறை : பணியிடங்களை நிரப்புவதற்கு தகுதியானவர்கள் எழுத்துத் தேர்வு மற்றும் திறன் தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்படுவர். தேர்வு நடைபெறும் இடம், தேர்வுத்தேதி ஆகியவை மின்னஞ்சல் மூலம் விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

விண்ணப்பக் கட்டணம்: இதர பிரிவினர் ரூ.1,000 செலுத்தி ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்க லாம். எஸ்.சி / எஸ்.டி / முன்னாள் இராணுவத்தின ருக்கு விண்ணப்பக் கட்டணம் கிடையாது.

இந்தப் பணியிட நிரப்புதல் குறித்த காலியிடங்க ளின் எண்ணிக்கை, தேர்விற்கான விண்ணப்பம், விரிவான பாடத்திட்டம், மதிப்பெண் விபரம் உள்ளிட்ட கூடுதல் விபரங்கள் அறிவிக்கையில் முழுமை யாகத் தரப்பட்டுள்ளன. முழுமையான அறிவிக்கை யைப் பெற www.ncert.nic.in என்ற இணைய தளத்தைப் பார்வையிடலாம். விண்ணப்பங்களை நிரப்பு வதற்கான கடைசித்தேதி ஜனவரி 16, 2026 ஆகும்.

# சுற்றுலா: திருச்சியை சுற்றியுள்ள 4 அழகிய சுற்றுலாத்தலங்கள்!



திருச்சி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதியில் அமைந்துள்ள இயற்கை எழில் கொஞ்சும் சுற்றுலா தலங்கள்.

திருச்சி மக்களின் மிக முக்கிய ஏக்கமே திருச்சியில் சொல்லிக் கொள்ளும் அளவிற்கு சுற்றுலா தலங்கள் இல்லை என்பது தான். அதிலும் குறிப்பாக மாநகரப் பகுதிகளில் பொழுதுபோக்கிற்கு எந்தவித பெரிய சுற்றுலா தளமும் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதே நேரம் ஸ்ரீரங்கம், சமயபுரம், வெக்காளியம்மன் கோயில்கள், ரத்தர்ஷா தர்கா, புனித லூர்து அன்னை ஆலயம் போன்ற வழிபாட்டுத்தலங்களே திருச்சி என்றவுடன் நினைவுக்கு வரும் இடங்களாக உள்ளது. திருச்சி மாவட்டத்திலும் திருச்சியை சுற்றி உள்ள பகுதிகளிலும் சூழ்ந்துள்ள மலைகள் திருச்சியினுடைய முக்கிய சுற்றுலா மையங்களாக உள்ளன.

பச்சை மலை, சிறு மலை, கொல்லிமலை, புளியஞ்சோலை நீர்வீழ்ச்சி ஆகியவை பெரிய விளம்பரங்கள் இல்லாத திருச்சிக்கு அழகு சேர்க்க முக்கிய இயற்கையின் அங்கமாக உள்ளது.

2. கொல்லிமலை:

நாமக்கல் மாவட்டத்தில் அமைந்துள்ள கொல்லிமலை அதன் ஆபத்தான ஹேர்பின் பெண்டுகளால் 'மௌண்டெயின் ஆஃப்டெத்'என அழைக்கப்படுகிறது. திருச்சியில் இருந்து 100 கிமீ தொலைவில் அமைந்துள்ள கொல்லிமலையில் பல அழகிய நீர்வீழ்ச்சிகள், பள்ளத்தாக்குகள், வியூபாயின்ட்கள் ஆகிய முக்கிய இடங்களை கொண்டுள்ளது. கொல்லி மலைக்கு அதிக அளவிலான சுற்றுலா பயணிகள் வராததால் கொல்லிமலையின் இயற்கை அழகு இன்னும் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

3. பச்சைமலை:

கிழக்கு தொடர்ச்சி மலைகளில் அமைந்துள்ள பச்சைமலை, திருச்சியிலிருந்து 100 கிமீ தொலைவில் அமைந்துள்ளது. அடர்ந்த சிறு சிறு மலைகள், அடர்த்தி நிறைந்த மரங்கள், விலங்குகள், பறவைகள் மற்றும் பட்டாம்பூச்சிகளின் கூட்டம் என்று கடல் மட்டத்திலிருந்து 2,400 அடி உயரத்தில் அமைந்துள்ள பச்சை மலையில் எப்பொழுதுமே ஒரு மிதமான வானிலை நிலவுகிறது. இதனால் பச்சை மலையில் ட்ரெக்கிங் வருபவர்களுடைய எண்ணிக்கை அதிகம்.



4. சிறுமலை:

திருச்சியிலிருந்து 136 கிமீ தொலைவில் திண்டுக்கல் மாவட்டத்தில் அமைந்துள்ளது சிறுமலை. இது பலராலும் அறியப்படாத இடமாகும்.

இயற்கை எழில் சூழ்ந்த சிறுமலையில் பல சிறிய நகரங்கள் அமைந்துள்ளன. மேலும் இந்த மலைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளினுடைய எண்ணிக்கை அதிகப்படுத்த தமிழ்நாடு சுற்றுலாத் துறை மூலமாக பல பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

5. புளியஞ்சோலை:

திருச்சி மாவட்டம் துறையூரில் அமைந்துள்ள புளியஞ்சோலை அமைதியான மலைப் பகுதியாகும். கொல்லிமலை அடிவாரத்தில் புளியஞ்சோலையில் காணப்படும் நீரூற்றுகள் முக்கிய சுற்றுலா தலமாகும். மேலும் புளியஞ்சோலையில் மலைகளுக்கு நடுவே ஓடு ஆறுகள் மூலிகை ஆறு என்று சொல்லப்படுகிறது.

# ஜனவரி (2026) வார ராசிபலன்

## 11.1.2026 முதல் 17.1.2026 வரை

### மேஷம்

இந்த வாரம் தனாதிபதி சுக்கிரன் சஞ்சாரத்தால் செல்வம் சேரும். அதே வேளையில் ராசியை சனி பார்ப்பதால் அடுத்தவர் விஷயங்களில் தலையிடும் போது கவனம் தேவை. உல்லாச பயணங்கள் செல்ல நேரலாம் எதிலும் அளவுக்கு மீறாமல் இருப்பது நல்லது. ஆடம்பர பொருட்கள் சேரும். தொழில் வியாபாரத்தில் இருந்த மெத்தன போக்கு நீங்கி வேகம் பிடிக்கும். தொழில் விஷயமாக வெளியூர் செல்ல நேரலாம். எதிர்பார்த்த ஆர்டர் கிடைக்க இருந்து வந்த தாமதம் நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் புதிய பொறுப்புகள் கிடைக்க பெறுவீர்கள். குடும்பத்தில் திருப்தியான நிலை காணப்படும். கணவன், மனைவிக்கு இடையே இருந்த மன வருத்தம் நீங்கி நெருக்கம் ஏற்படும். பெண்களுக்கு எதிர்பார்த்த செல்வ சேர்க்கை உண்டாகும். கலைத்துறையினருக்கு எல்லோரையும் எளிதில் வசீகரிக்கும் திறமை அதிகரிக்கும். அரசியல்துறையினருக்கு உங்களது செயல்களுக்கு முட்டுக் கட்டை போட்டவர்கள் விலகி விடுவார்கள். மாணவர்களுக்கு கல்வியை பற்றிய மனக்கவலை உண்டாகும்.

### ரிஷபம்

இந்த வாரம் ராசிநாதன் சுக்கிரன் மறைந்திருந்தாலும் சுய சாரம் பெற்றிருப்பதால் ஆடை, ஆபரணம் வாங்குவதால் செலவு உண்டாகும். தொழில்ஸ்தானம் யோகமாக இருப்பதால் தொழில் வியாபாரம் தொடர்பான சுபச் செலவுகள் அதிகரிக்கும். எதிலும் ஒரு முறைக்கு மறுமுறை யோசித்து முடிவெடுப்பது நல்லது.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் நிதானத்தை கடை பிடிப்பது நல்லது. பணி நிமித்தமாக வெளியூர் பயணம் செல்ல வேண்டி இருக்கும். குடும்பத்தில் இருப்பவர்கள் உங்கள் யோசனையை கேட்டு நடந்து கொள்வது மனதிற்கு திருப்தியை தரும். கணவன், மனைவிக்கு இடையே இருக்கும் அன்பு நீடிக்கும். பூர்வீக சொத்துக்கள் கைக்கு வந்து சேரும்.

பெண்களுக்கு உங்களது ஆலோசனையை கேட்டு அதன்படி சிலர் நடந்து காரிய வெற்றி அடைவார்கள். கலைத் துறையினருக்கு இருந்த போட்டிகள் அகலும். அரசியல் துறையினருக்கு நீங்கள் செய்யும் காரியங்களுக்கு இருந்த தடை நீங்கும்.

### மிதுனம்

இந்த வாரம் தைரிய வீரிய ஸ்தானாதிபதி சூரியன் ராசியைப் பார்ப்பதால் தைரியம் அதிகரிக்கும். எதிலும் லாபத்தை பார்க்க முடியும். எல்லா நன்மையும் உண்டாகி உடல் ஆரோக்கியம் பெறும். வாக்கு வன்மையால் எந்த காரியத்தையும் சுலபமாக செய்து முடிப்பீர்கள். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட கூடுதல் லாபம் கிடைக்க பெறுவீர்கள். புதிய ஆர்டர்கள் கிடைக்கும்.

கணவன், மனைவிக்கு இடையே நெருக்கம் அதிகரிக்கும். குழந்தைகள் எதிர்கால நலனில் அக்கறை காட்டுவீர்கள். நண்பர்கள் உறவினர்கள் மூலம் தேவையான உதவி கிடைக்கும். வழக்குகளில் சாதகமான நிலை காணப்படும். எதிர்ப்புகள் விலகும். தாமதமாகி வந்த சுப காரியங்கள் சிறப்பாக நடக்கும். பெண்களுக்கு சாமர்த்தியமான பேச்சின் மூலம் காரிய வெற்றி காண்பீர்கள். கலைத்துறையினருக்கு நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த ஒரு வேலையை செய்து முடிப்பீர்கள். அரசியல் துறையினருக்கு ஆலோசனையில் ஈடுபடுவீர்கள். மாணவர்களுக்கு எதிலும் முன்னேற்றம் உண்டாகும்.

### கடகம்

இந்த வாரம் ராசிநாதன் சந்திரன் சஞ்சாரம் அனுகூலமாக இருப்பதால் எதையும் சிறப்பாக செய்து முடிப்பீர்கள். பண வரத்து அதிகரிக்கும். அடுத்தவர்களிடம் பொறுப்புக்களை ஒப்படைக்காமல் நேரடியாக செய்வது நன்மை தரும். தொழில் வியாபாரம் தொடர்பாக அதிகம் உழைக்க வேண்டி இருக்கும். அதற்கேற்ற பலனும் கிடைக்க பெறுவீர்கள். நிலுவையில் உள்ள பாக்கிகள் வசூலாகும்.

உத்தியோகத்தில் இருப்பவர்களின் நிர்வாக திறமை பளிச்சிடும். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் அனுசரித்து செல்வது நல்லது. அக்கம்பக்கத்தினரிடம் சில்லறை சண்டைகள் ஏற்படலாம். பெண்களுக்கு பண வரத்து எதிர்பார்த்தபடி இருக்கும். கலைத்துறையினருக்கு ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும்.

இழுபறியாக இருந்த காரியம் சாதகமாக முடியும். அரசியல் துறையினருக்கு எதிலும் கூடுதல் கவனத்துடன் செயல்படுவது நல்லது. சுலபமாக முடிந்துவிடும் என்று நினைக்கும் காரியம் கூட சற்று தாமதமாகலாம். மாணவர்களுக்கு முயற்சிகள் சாதகமான பலன் தரும்.

### சிம்மம்

இந்த வாரம் ஐந்தாமிடம் மிக வலுவாக இருப்பதால் எடுக்கும் முயற்களுக்கு வெற்றி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் பெறும். மற்றவர்களுடன் இருந்த விரோதம் மறைந்து நட்பு ஏற்படும். வீண் செலவு குறையும். நல்லதா ? கெட்டதா ? என்று யோசிக்க தோன்றாத மனநிலை உண்டாகும். தொழில் வியாபாரத்தில் இருந்த மந்த நிலை மாறி வேகம் பிடிக்கும்.

வியாபாரம் தொடர்பான முயற்சிகளில் சாதகமான பலன் உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு புத்தி சாதூர்யம் அதிகரிக்கும். குடும்பத்தில் இருந்த சிக்கல்கள் தீரும். திருமண முயற்சிகள் கைகூடும். கணவன், மனைவிக்கு இடையே இருந்த மன வருத்தம் நீங்கும். உறவினர்களுடன் இருந்த மன வருத்தம் நீங்கும். பெண்களுக்கு மற்றவர்களுடன் இருந்த மன வருத்தம் நீங்கி நட்பு உண்டாகும். கலைத்துறையினருக்கு வெளியூர் பயணம் அதன் மூலம் அலைச்சல் உண்டாகலாம். அரசியல் துறையினருக்கு வீடு, வாகனம் தொடர்பான செலவுகள் ஏற்படலாம். மாணவர்களுக்கு திறமை வெளிப்படும்.

### கன்னி

இந்த வாரம் கேந்திரங்கள் மிக பலமாக இருப்பதால் பெரியோர்களின் ஆதரவு கிடைக்கும். எதிர்பார்த்த பண வரவு கிடைக்கும். மற்றவர்களுக்கு உதவி செய்வதன் மூலம் சமூகத்தில் அந்தஸ்தும், மரியாதையும் கிடைக்க பெறுவீர்கள். தூர தேச பிரயாணங்களுக்கான சூழ்நிலை ஏற்படும். சுப நிகழ்ச்சிகளுக்கள் தங்கு தடையின்றி நடைபெறும். வழக்குகள் உங்களுக்கு சாதகமான நிலையில் இருக்கும்.

தொழில் விரிவுபடுத்துவது பற்றிய ஆலோசனை மேற்கொள்வீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களின் செயல் திறமை அதிகரிக்கும். குடும்பத்தில் பிள்ளைகளால் நன்மை உண்டாகும். அவர்களால் சந்தோஷம் கிடைக்கும். கணவன், மனைவி ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு திறம்பட செயல்படுவீர்கள்.

பெண்கள் உங்களது செயல்களுக்கு மற்றவர்களது ஆதரவு கிடைக்கும். கலைத்துறையினருக்கு எதிலும் கூடுதல் கவனத்துடன் செயல்படுவது நல்லது. அரசியல்துறையினருக்கு மனதில் தைரியம் உண்டாகும். மாணவர்களுக்கு எதிர்பாராத அனுபவங்களை பெறுவீர்கள்..

### துலாம்

இந்த வாரம் தைரிய வீரிய ஸ்தானமும் பாக்கிய ஸ்தானமும் மிக வலுவாக இருப்பதால் எதிலும் தன்னம்பிக்கையுடன் ஈடுபடுவீர்கள். புதிய தொடர்புகள் மூலம் மகிழ்ச்சி உண்டாகும்.

முக்கிய நபர்களின் அறிமுகமும் நட்பும் கிடைக்க பெறுவீர்கள். எதிர்பார்த்தபடி எல்லாம் நடந்தாலும் மற்றவர்கள் தவறாக புரிந்து கொள்ள நேரலாம். தொழில் வியாபாரத்தில் வேகம் அதிகரிக்கும். எதிர்பார்த்தபடி பொருட்களை அனுப்புவதில் இருந்த தாமதம் நீங்கும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் திடீர் பயணத்தை சந்திக்க நேரலாம். எதிர்பார்த்த இடமாற்றம் ஏற்படும். குடும்பத்தில் ஒற்றுமை அதிகரிக்கும். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் விட்டு கொடுத்து செல்வது நன்மை தரும். நண்பர்கள் மற்றும் உறவினர்கள் ஆதரவாக இருப்பார்கள்.

பெண்களுக்கு மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் உண்டாகும். கலைத்துறையினருக்கு வீண் ஆசைகள் மனதில் தோன்றும். அரசியல்துறையினருக்கு காரியங்களில் திடீர் தடை ஏற்படலாம். மாணவர்களுக்கு கல்வி தொடர்பான விஷயங்களில் திடீர் தடை, தாமதம் ஏற்படலாம்..

### விருச்சிகம்

இந்த வாரம் ராசிநாதன் செவ்வாயின் சஞ்சாரத்தால் அனுகூலமான பலன்கள் பெறுவீர்கள். மறைமுக எதிர்ப்புகள் குறையும். எடுத்த காரியத்தில் ஏற்பட்ட தடை, தாமதம் நீங்கும். உடல் ஆரோக்கியம் பெறும். வழக்குகள், தகராறுகளில் சாதகமான பலன் கிடைக்கும். எந்த ஒரு விஷயத்திலும் மிகவும் அக்கறை காட்டுவீர்கள்.

தொழில் வியாபாரம் தொடர்பான போட்டிகள் நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களும் உற்சாகமாக காணப்படுவார்கள்.

குடும்பத்தில் இருந்த சண்டை சச்சரவுகள் நீங்கும். கணவன், மனைவிக்கு இடையில் இருந்த மனக் கசப்பு மாறும். தாய் வழி உறவினர்களிடம் இருந்து வந்த மனக் கசப்புகள் நீங்கும்.

பெண்கள் எந்த ஒரு செயலையும் மிகவும் அக்கறையுடன் செய்து முடிப்பீர்கள். கலைத்துறையினருக்கு பணிகளில் கவலைகள் இருந்தாலும் நிறைவாக முடியும்.

அரசியல் துறையினருக்கு மனோதிடம் உண்டாகும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பதில் வேகம் காட்டுவீர்கள். எதிலும் உற்சாகத்துடன் ஈடுபடுவீர்கள்.

### தனுசு

இந்த வாரம் ராசி பலம் பெற்றிருப்பதால் தடைகளை தகர்ப்பீர்கள். புதிய நபர்களின் அறிமுகமும் அவர்களால் நன்மையும் ஏற்படும். சுபச் செலவுகள் இருக்கும். பண வரத்து திருப்தி தரும். உங்களது செயல்களுக்கு யாராவது ஒருவர் உறுதுணையாக இருப்பார்கள். பேச்சு திறமை கை கொடுக்கும். தொழில் வியாபாரம் மிதமாக இருக்கும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் கடினமான பணிகளை செய்ய வேண்டி இருக்கும். குடும்பத்தில் இருப்பவர்கள் உங்களை ஏதாவது குறை கூறுவார்கள். அனுசரித்து செல்வது நன்மை தரும். கணவன் மனைவிக்கு இடையே தேவையில்லாத விஷயத்தால் மன வருத்தம் ஏற்படலாம் பெண்களது செயல்களுக்கு பக்கபலமாக யாராவது இருப்பார்கள்.

கலைத்துறையினருக்கு நட்பு வகையில் நிதானத்தை கடைபிடிப்பது நல்லது. அரசியல்துறையினருக்கு எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் வெற்றி பெற கடினமாக உழைக்க வேண்டி இருக்கும். எல்லோரிடமும் அனுசரித்து செல்வது நல்லது .

### மகரம்

இந்த வாரம் அயன சயன போக ஸ்தானம் வலுவாக இருப்பதால் சுப காரியங்கள் திட்டமிட்டபடி நடக்கும். நெருக்கமானவர்களுடன் பேசி மகிழ்வீர்கள். வாகனங்களை பயன்படுத்தும் போது கவனம் தேவை. நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்க பெறுவீர்கள்.

மனதில் திடீர் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் ஆக்கபூர்வமான செயல்களை மேற்கொண்டு வியாபாரத்தில் முன்னேற்றம் காண்பார்கள்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேல் அதிகாரிகள் கூறிய பணிகளை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். குடும்பத்தில் நிம்மதி காணப்படும். கணவன் மனைவிக்கு இடையே சகஜ நிலை நீடிக்கும். பெண்களுக்கு மனதில் திடீர் கவலை ஏற்பட்டு நீங்கும்.

கலைத்துறையினர் நன்மை தீமை பற்றிய கவலை இல்லாமல் எதையும் செய்ய முற்படுவீர்கள். அரசியல் துறையினருக்கு எதிலும் வெற்றி கிடைக்கும். செயல்களில் வேகம் உண்டாகும்.

மாணவர்கள் கல்வியில் முன்னேற திட்டமிட்டு செயல்படுவீர்கள். எதிலும் முன்னெச்சரிக்கையுடன் இருப்பது நன்மை தரும்.

### கும்பம்

இந்த வாரம் பஞ்சம பூர்வ புண்ணிய ஸ்தானம் வலுவாக இருக்கிறது. எல்லா காரியங்களும் சுமூகமாக நடந்து முடியும். மனத் துணிவு உண்டாகும். எதையும் வேகமாக செய்து முடிப்பீர்கள். செலவு அதிகரிக்கும்.

தடை தாமதம் விலகும். மற்றவர்கள் விஷயத்தில் கவனம் செலுத்துவதை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் இருப்பவர்களுக்கு எதையும் சாதிக்கும் திறமை உண்டாகும். எதிர்பார்த்த முன்னேற்றம் காணப்படும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலை சந்திக்க வேண்டி இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியான நிலை காணப்படும். சொத்துப் பிரச்சினை தீர்வு பெறும். பெண்கள் எந்த காரியத்தை செய்து முடிப்பதிலும் வேகத்தை காண்பீர்கள்.

கலைத்துறையினருக்கு அடுத்தவரிடம் உங்களது செயல்திட்டங்களை பற்றி கூறுவதை தவிர்ப்பது நல்லது. அரசியல்துறையினருக்கு மேலிடம் கூறுவதை கேட்டு தடுமாற்றம் அடையலாம்.

மாணவர்களுக்கு எதிர்கால கல்வி பற்றிய எண்ணம் மேலோங்கும். அது தொடர்பான பணிகளில் ஈடுபடுவீர்கள்.

### மீனம்

இந்த வாரம் கேந்திரங்கள் பலம் பெறுவதால் சிறப்பான பலன்களைப் பெற முடியும். ஜெனன கால சந்திரனுக்கு மற்ற கிரகங்கள் அனைத்தும் அனுகூலமாக இருக்கிறார்கள். அறிவுத்திறன் அதிகரிக்கும். சாதூரியமான பேச்சின் மூலம் காரிய வெற்றி கிடைக்க பெறுவீர்கள். பண வரத்து அதிகரிக்கும். அடுத்தவர் பிரச்சனைகளில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது.


தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் நிதானத்தை கடைபிடிப்பது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களுக்காக உழைக்க வேண்டி இருக்கும். கணவன், மனைவிக்கு இடையே ஒற்றுமை ஏற்படும். பெண்களுக்கு கலைகளில் ஆர்வம் அதிகரிக்கும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும்.

திறமையுடன் செயல்பட்டு பாராட்டு பெறுவீர்கள். கலைத்துறையினருக்கு நீண்ட நாட்களாக இருந்த பழைய பகைகள் மாறும். அரசியல்துறையினர் எதிர்காலம் பற்றி முக்கிய முடிவுகளை எடுக்க நினைப்பீர்கள். மாணவர்களுக்கு சாதுரியமான பேச்சால் நன்மை கிடைக்க பெறுவீர்கள்.

# இதுவரை 1.1 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் ரொக்கப் பரிசு விநியோகம்

**சென்னை, ஜன.11:**

தமிழ்நாடு அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில், தமிழர் திருநாளாம் தைப் பொங்கல் 2026 திருநாளை மக்கள் அனைவரும் சிறப்பாக கொண்டாடும் வகையில், தமிழ்நாடு அரசு 2,22,91,710 எண்ணிக்கையிலான அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கும் பொங்கல் பரிசுத் தொகுப்பாக ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழு நீளக் கரும்பு வழங்கப்படும் எனவும், பொங்கல் திருநாளை மேலும் சிறப்பாக



கொண்டாட அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கும் ரொக்கப் பரிசாக ரூ.3,000/- வழங்கப்படும்" எனவும் முதல்வர் அறிவித்தார். முதல்வர் மு.க. ஸ்டாலின் 8.1.2026 சென்னை, பட்ரோடு நியாய விலைக் கடையில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத்தொகுப்பினையும், வேட்டி, சேலைகளையும் வழங்கி, தொடங்கி வைத்தார். மேலும், துணை முதல்வர் சென்னை, சிந்தாதரிப்பேட்டை TUCS நியாயவிலைகடையிலும், அந்தந்த மாவட்டத்தில் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மூலமாக இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது.

தமிழ்நாடு முழுவதும் அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினர் ஆகியோர்களுக்கு 2026 பொங்கல் பரிசுத் தொகுப்பிற்கான டோக்கன்கள் குடும்ப அட்டைதாரர்களுக்கு 04.01.2026 முதல் 07.01.2026 வரை தொடர்புடைய நியாயவிலைக்கடைப் பணியாளர்களால் வழங்கப்பட்டது.

இதில், முதல் நாள் 200 குடும்ப அட்டைத்தாரர்களும், இரண்டாம் நாள் 300 முதல் 400 வரையிலான குடும்ப அட்டைதாரர்கள் பொங்கல் பரிசுத் தொகுப்பு பெறுவதற்கு ஏதுவாக தொடர்புடைய நியாயவிலைக்கடைப் பணியாளர்களால் டோக்கன்கள் விநியோகம் செய்யப்பட்டது. 10.1.2026 அன்று காலை 10 மணி வரை 24,924 நியாயவிலை கடைகளில் உள்ள 1,11,61,979 குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் ரொக்கத் தொகை ரூ.3348.59 கோடி விநியோகம் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

# க்ரைம் கார்னர்

## சூதாடிய 3 பேர் கைது

**திருநெல்வேலி, ஜன.11:**

திருநெல்வேலி மாநகரம் பாளையங்கோட்டை, வண்ணாரப்பேட்டை அருகில் போலீஸ் இன்ஸ்பெக்டர் முத்துகணேஷ் மற்றும் காவல் துறையினர் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அனுமதியின்றி இயங்கிய ஒரு தனியார் மன்றத்தில் சூதாட்டத்தில் ஈடுபட்ட பாளையங்கோட்டை குலவணிகர்புரத்தை சேர்ந்த பாண்டி மகன் செல்வம் (வயது 50), கீழநத்தத்தை சேர்ந்த சங்கரன் மகன் சிவசுப்பிரமணியன்(50), கொக்கிரகுளத்தை சேர்ந்த கணபதி மகன் மாரிமுத்து(33) ஆகியோரிடம் இருந்து பணம் ரூ.4,160 மற்றும் சூதாட்டத்திற்கு பயன்படுத்திய அட்டைகள் ஆகியவற்றை பறிமுதல் செய்த போலீசார் அவர்கள் 3 பேரையும் கைது செய்தனர்.

## வங்கிகளுக்கு பணம் நிரப்பும் நிறுவனத்தில் ரூ.1.32 கோடி நம்பிக்கை மோசடி

**திருநெல்வேலி, ஜன.11:**

திருநெல்வேலி மாநகரம், தச்சநல்லூர் நல்மேய்ப்பர்நகரில் வங்கிகளுக்கு பணம் நிரப்பும் நிறுவனத்தின் அலுவலகம் உள்ளது. அந்த அலுவலகத்தில் ரூ.1 கோடியே 32 லட்சத்து 48 ஆயிரம் நம்பிக்கை மோசடி செய்து கையாடல் செய்ததாக அந்த நிறுவனத்தின் மண்டல மேலாளர் செல்வகுமார் மீது, மண்டல செயல்பாட்டு மேலாளர் ஹரிஹரன் என்பவர் போலீசில் புகார் அளித்தார். அந்த புகாரின் பேரில் வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை செய்யப்பட்டு வருகிறது.

## வாலிபருக்கு அரிவாள் வெட்டு

**திருநெல்வேலி, ஜன.11:**

திருநெல்வேலி மாநகரம் பெருமாள்புரம், நம்பிக்கைநகர், மாரியம்மன் கோவில் அருகில் நின்று கொண்டிருந்த பெருமாள்புரம் எம்.எல். பிள்ளைநகரை சேர்ந்த கருப்பசாமி மகன் மாயாண்டி (வயது 25) என்பவருக்கும் நம்பிக்கைநகரை சேர்ந்த பாண்டி மகன் பிரதீப்பாண்டியன்(22) என்பவருக்கும் இடையே முன்பகை இருந்து வந்தது. அதன் காரணமாக பிரதீப்பாண்டியன், மாயாண்டியை வழிமறித்து, அச்சுறுத்தி அரிவாளால் தாக்கிவிட்டு தப்பிவிட்டார். இதனால் காயமடைந்த மாயாண்டி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். மேலும் அவர் அளித்த புகாரின்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து பிரதீப்பாண்டியனை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினர்.

## நெல்லையில் கஞ்சா, பைக் பறிமுதல்: 2 பேர் கைது

**திருநெல்வேலி, ஜன.11:**

சீவலப்பேரி சாலை மணிக்கூண்டு அருகில் போலீசார் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அப்பகுதியில் சந்தேகத்தின் பேரில் இருசக்கர வாகனத்தில் வந்த 2 பேரை போலீசார் சோதனை செய்தனர். அதில் அவர்கள் திருநெல்வேலி மாவட்டம் வீரவநல்லூரை சேர்ந்த பிரபாகரன் மகன் தர்மராஜ் (வயது 23) மற்றும் சஞ்சய்காந்தி மகன் பாலமுருகன்(21) என்பதும், அவர்களிடமிருந்து சுமார் 10 கிராம் கஞ்சா மற்றும் ஒரு இருசக்கர வாகனம் ஆகியவற்றை பறிமுதல் செய்து, அவர்களை கைது செய்தனர்.

# இருளில் மூழ்கிய கோடிக்கோட்டை சுங்கச்சாவடி! கட்டணமின்றி சென்ற வாகனங்கள்!

**சிவகங்கை, ஜன.11:**

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை அருகே திருச்சி - இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலையில் செயல்பட்டு வரும் கோடிக்கோட்டை சுங்கச்சாவடி மின்தடையால் இருளில் மூழ்கியதால் வாகனங்கள் கட்டணமின்றி கடந்து சென்றன.



தேவகோட்டை அருகேயுள்ள கோடிக்கோட்டை சுங்கச்சாவடி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதியில் சனிக்கிழமை அதிகாலை 3 மணி அளவில் திடீரென்று மின் தடை ஏற்பட்டது. நீண்ட நேரம் ஆகியும் மின் இணைப்பு வரவில்லை.

மேலும், இந்த சுங்கச்சாவடியில் உள்ள ஜெனரேட்டரும் எரிபொருள் இல்லாததால் இயங்கவில்லை. இதன் காரணமாக சுங்கச்சாவடி பகுதி முழுவதும் இருளில் மூழ்கியது.

குறிப்பாக சுங்க வசூல் செய்யும் பகுதி மற்றும் அலுவலகம் முழுவதும் இருளில் மூழ்கியதால் சுங்கச்சாவடி இயங்கமுடியாமல் போனது. இதனால் வெளியூர்களில் இருந்து வந்த வாகனங்களும் அதிலிருந்த பயணிகளும் குழப்பமடைந்தனர். அப்பகுதி முழுவதும் இருட்டாக இருந்ததால் விபத்து ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டது. இதுகுறித்து சுங்கச்சாவடி நிர்வாகத்திடம் கேட்டபோது எரிபொருள் இல்லாததால் சுங்கச்சாவடி மூடப்பட்டது எனவும், அனைத்து வாகனங்களும் கட்டணமின்றி சென்றதாகவும் தெரிவித்தார்.

# தை பிறந்தால் வழி பிறக்கும்: ஓ பன்னீர் செல்வம் பேட்டி

**சென்னை, ஜன.11:**

முன்னாள் முதல் அமைச்சர் ஓ பன்னீர் செல்வத்தை அதிமுகவில் சேர்க்க முடியாது என்று எடப்பாடி பழனிசாமி திட்டவட்டமாக கூறிவிட்டார். இதனால், ஓ பன்னீர் செல்வத்தின் அடுத்த கட்ட நடவடிக்கை என்னவாக இருக்கும் என்று அரசியல் வட்டாரத்தில் உன்னிப்பாக கண்காணிக்கப்பட்டு வருகிறது. ஓ பன்னீர் செல்வம் தனிக்கட்சி தொடங்கலாம் என்றும் சொல்லப்படுகிறது.



தமிழக வெற்றிக்கழகம் கட்சியுடன் கூட்டணி அமைத்து போட்டியிடுகிறா? அல்லது தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைவாரா? என்ற பேச்சுகள் அரசியல் வட்டாரத்தில் வலுத்துள்ளது. இந்த நிலையில், இன்று செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த ஓ பன்னீர் செல்வத்திடம் தேர்தல் நிலைப்பாடு தொடர்பாக செய்தியாளர்கள் கேட்டனர். இதற்கு பதிலளித்த ஓ பன்னீர் செல்வம், தை பிறந்தால் வழி பிறக்கும்" என்றார். தவெக உடன் கூட்டணி வைப்பீர்களா? என்று கேட்டதற்கு பதிலளிக்காமல் சென்றுவிட்டார்.

# திருச்செந்தூர் கோவில் முன்பு கடல் அரிப்பு: கவனமுடன் நீராட பக்தர்களுக்கு அறிவுறுத்தல்

**திருச்செந்தூர், ஜன.11:**

முருகனின் அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு நாள்தோறும் ஏராளமான பக்தர்கள் வருகை தருவார்கள். கோவிலுக்கு வருகை தரும் பக்தர்கள், கோவில் முன்புள்ள கடலில் புனித நீராடிய பிறகே முருகனை தரிசனம் செய்வதை வழக்கமாக கொண்டுள்ளனர்.



இதற்கிடையில் கடந்த ஒரு மாத காலமாக திருச்செந்தூர் முருகன் கோவில் முன்புள்ள கடற்கரையில் கடல் அரிப்பு அதிகரித்து காணப்படுகிறது. இதனால் சுமார் 6 அடி உயரத்திற்கும் 100 அடி தூரத்துக்கும் மண் அரிப்பு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக பக்தர்கள் கடலுக்குள் இறங்கி நீராட முடியாத நிலை உள்ளது. தற்போது கடல் அரிப்பு அதிகரித்துள்ளது. இதனால் கடலுக்குள் இருக்கும் பாறைகள் அதிக அளவு வெளியே தெரிகிறது. அதன் அருகே நீராடுபவர்களுக்கு காயம் ஏற்படும் அபாயமும் உள்ளது. எனவே கோவில் நிர்வாகம் சார்பில் கடற்கரை பாதுகாப்பு பணியாளர்கள் மூலம் அந்த இடத்தை தாண்டி நீராட அறிவுறுத்தப்பட்டு வருகிறது. மேலும் பக்தர்களின் பாதுகாப்பு நலன் கருதி கடற்கரையில் கடல் அரிப்பு ஏற்படுள்ள இடத்தில் தடுப்பு கம்புகள் அமைக்கப்பட்டுள்ளது.

# மத நம்பிக்கை, சட்டப்படி ஏற்பாடுகள் செய்யப்படும்: அர்த்த கும்பமேளா பற்றி உத்தராகண்ட் முதல்வர் உறுதி

**புதுடெல்லி, ஜன.11:**

உத்தராகண்ட் மாநிலம் ஹரித்வாரில் 2027, ஜனவரி 14 முதல் அர்த்த கும்ப மேளா நடைபெற உள்ளது. இதை பிரம்மாண்டமாக நடத்த மாநில பாஜக அரசு தயாராகி வருகிறது.

இந்நிலையில் அர்த்த கும்பமேளா நாட்களில் உத்தராகண்டின் 100-க்கும் மேற்பட்ட கங்கை படித்துறைகள், முக்கிய இந்து வழிபாட்டுத் தலப்பகுதியில் இந்துக்கள் அல்லாதோருக்கு தடை விதிக்க இந்துத்துவாவினர் வலியுறுத்துகின்றனர். இதுதொடர்பாக 1916-ல் ஆங்கிலேயர் ஆட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஹரித்வார் நகராட்சி மன்ற துணை விதிகளை கங்கை சபையின் தலைவர் நிதின் கவுதம் சுட்டிக்காட்டியுள்ளார்.



இந்த விதிகளின்படி, ஹரித்வார் நகராட்சிப் பகுதியில் இந்துக்கள் அல்லாதோர் நிலம் வாங்க முடியாது. இந்துக்கள் அல்லாத கடை வியாபாரிகள் சூரிய அஸ்தமனத்திற்குப் பிறகு அப்பகுதியை விட்டு வெளியேற வேண்டும். சூரிய அஸ்தமனத்திற்குப் பிறகு இந்துக்கள் அல்லாத அதிகாரிகளை பணி அமர்த்தவும் முடியாது. எனினும், காலப்போக்கில், உள்ளூர் மக்கள் கூட இந்த விதிகளைப் பெரிதாகப் பின்பற்றுவதில்லை. தற்போது, கும்பமேளா வரவுள்ள நிலையில், இந்துத்துவாவினர் ஆங்கிலேயர் காலத்து மரபுகளை மீண்டும் அமல்படுத்தக் கோரியுள்ளனர்.

ஹரித்வார் கங்கை சபையின் மூத்த நிர்வாகி உஜ்வல் பண்டிட் கூறுகையில், "முன்னாள் ஆளுநர் அஜீஸ் குரேஷி, மார்கரெட் ஆல்வா, சமாஜ்வாதி தலைவர் ஆசம் கான், நடிகர் சல்மான்கான், நடிகை கத்ரீனா கைஃப் உள்ளிட்ட இந்து அல்லாத பிரமுகர்கள் ஹரித்வார் துணை விதிகளை மதித்துள்ளனர். ஆளுநர் அஜீஸ் குரேஷி, ஹர்-கி-பவுரிக்கு செல்லாமல் ஆரத்தியை, மால்வியா தீவில் இருந்து பார்த்தார்" என்றார். இந்நிலையில் உத்தராகண்ட் முதல்வர் புஷ்கர் சிங் தாமி வெளியிட்டுள்ள அறிக்கையில், "ஹரித்வாரின் புனிதம் மற்றும் தெய்வீகத் தன்மையைப் பேணுவதற்காக அனைத்து அம்சங்களும் ஆய்வு செய்யப்படுகின்றன. எந்தவொரு பழைய சட்டத்தையும் அல்லது துணை விதிகளையும் மீற அரசு விரும்பவில்லை. மதநம்பிக்கைகள், அரசியலமைப்பு சட்டம் ஆகிய இரண்டையும் கருத்தில் கொண்டு முடிவு எடுக்கப்படும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்

# மார்கழி-27

11-01-2026

## திருப்பாவை - பாடல் -27

கூடாரை வெல்லும்சீர்க் கோவிந்தா! உன்தன்னைப்
பாடிப்பறை கொண்டு யாம்பெறு சம்மானம்
நாடு புகழும் பரிசினால் நன்றாக
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே என்றனைய பல்கலனும் யாமணிவோம்
ஆடை உடுப்போம் அதன்பின்னே பாற்சோறு
மூடநெய் பெய்து முழங்கை வழிவார
கூடி யிருந்து குளிர்ந்தேலோர் எம்பாவாய்..

**பொருள்:** எதிரிகளை வெற்றிகொள்ளும் சிறப்புமிக்க கோவிந்தனே! உன்னை நாங்கள் பாடி அருள் பெற வந்தோம். அருட்செல்வத்துடன் இவ்வுலக வாழ்விற்கான பொருட்செல்வமும் தருவாயாக! அது இருந்தால் தானே நாடு புகழ்கிறது. கையில் அணியும் சூடகம், தோளில் அணியும் பாஹுவலயம், காதில் அணியும் தோடு, கர்ணப்பூ, காலில் அணியும் பாடகம் ஆகிய அணிகலன்களை எங்களுக்குக் கொடு. புத்தாடைகளை வழங்கு. பின்னர் விரதத்தை நிறைவு செய்யும் வகையில், கூட்டமாக உன்னுடன் அமர்ந்து கையில் நெய் வழிய பால்சோறு உண்போம்..

**விளக்கம்:** கூடாரை வெல்லும் என்ற சொற்றொடரில் இருந்து "கூடாரவல்லி என்ற வார்த்தை பிறந்தது. இப்போது பெருமாள் கோயில்களிலும், வைணவர்களின் வீடுகளிலும் கூடாரவல்லி விழா கொண்டாடப்படும். இன்று அக்கார அடிசில் எனப்படும் உணவு பிரசித்தம். சாப்பாட்டின் மீது நெய் மிதக்கும். சர்க்கரைப் பொங்கல் போன்ற இந்த உணவின் சுவை அலாதியானது. விரதத்தின் ஆரம்பத்தில் நெய், பால் ஆகியவற்றைத் துறந்த ஆயர்குலப் பெண்கள், இப்போது கண்ணனின் தரிசனம் கிடைத்த மகிழ்ச்சியில் இனிப்பான இந்த உணவை சாப்பிடுகிறார்கள். பால்சோறு என்பது பாற்கடலையும் குறிக்கும். "கண்ணா! உன் தரிசனம் கிடைத்து விட்டது. நாங்கள் நீ பள்ளிகொள்ளும் பாற்கடலில் இருப்பது போல் உணர்கிறோம். இதுவே நித்யசுகம். இந்த சுகத்தை எங்களுக்கு நிரந்தரமாகக் கொடு" என வேண்டுகிறார்கள்..

## திருப்பள்ளியெழுச்சி - பாடல்-7

அது பழச்சுவையென அமுதென
அறிதற்கு அரிதென எளிதென அமரரும் அறியார்
இது அவன் திருவுரு இவன் அவன் எனவே
எங்களை ஆண்டுகொண்டு இங்கு எழுந்தருளும்
மதுவளர்பொழில் திருவுத்தரகோசமங்கை உள்ளாய்
திருப்பெருந்துறை மன்னா!
எது எமைப்பணி கொளும் ஆறு அது கேட்போம்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே!

**பொருள்:** தேன்சிந்தும் மலர்களையுடைய சோலைகளைக் கொண்ட உத்தரகோசமங்கை தலத்தில் எழுந்தருளிய சிவனே! திருப்பெருந்துறையில் வசிக்கும் தலைவனே! உன் பெயர் சொன்னால் அது பழம் போல் இனிக்கிறது. பால் போல் சுவையாக இருக்கிறது. உன்னைப் பற்றி தெரிந்து கொள்வது என்பது சிரமமானது. உன்னை எளிதாகப் பிடித்து விடலாம் எனச் சொல்கிறார்களே தவிர, தேவர்களால் கூட அதைச் செய்ய முடியாது. உன்னுடைய வடிவம் என்ன? இவன் தான் அவனோ? என்று அனுமானிக்கத் திணறும் தேவர்களுக்கே காட்சி தராத நீ, இதோ, என் நிஜ வடிவம் இதுவே எனச் சொல்லி, இதோ! எங்கள் முன்னால் இருக்கிறாய். எங்களை நீ என்ன செய்ய நினைக்கிறாயோ, அதைச் செய் என்றே உன்னிடம் கேட்போம். எம்பெருமானே! நீ எழுந்தருள்வாயாக.

**விளக்கம்:** மிக அருமையான கருத்துடைய பாடல் இது. எது எமைப்பணி கொள்ளும் ஆறு அது கேட்போம் என்ற வரி மிகுந்த சிறப்பைக் கொண்டது. கடவுளிடம் அதைக் கொடு,. இதைக் கொடு என்று கேட்பதை விட, எது சரியென்று படுகிறதோ, அதைச் செய் என்று கேட்பது மேலான கோரிக்கையல்லவா? அவனுக்கு தெரியுமே! நமக்கு என்ன தர வேண்டுமென்று! அதனால் நம்மை அவனிடம் ஒப்படைப்போம். அவன் தருவதை ஏற்றுக்கொள்வோம் என்பதே இப்பாடல் உணர்த்தும் கருத்து

# வணிகச் செய்திகள்

## கோயம்பேட்டில் குவிந்த கரும்புகள்: ஒரு கட்டு ரூ.300 முதல் ரூ.600 வரை விற்பனை

**சென்னை, ஜன.11:**

ஜனவரி 15-ம் தேதி பொங்கல் கொண்டாடப்பட வுள்ள நிலையில், இன்னும் சில தினங்களே உள்ள தால், தேவையான பாரம்பரியப் பொருட்களை முன்கூட் டியே வாங்க பொதுமக்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

குறிப்பாக கரும்பு, மஞ்சள் கொத்து, இஞ்சி கொத் து, வெல்லம் போன்றவை பண்டிகையின் முக்கிய அடையாளங்களாக இருப்பதால், அவற்றின் தேவை அதிகரித்துள்ளது. இதையொட்டி கோயம்பேடு சந்தை யில் விற்பனை சூடுபிடித்துள்ளது. அந்த வகையில், கரும்பு, வாழை, மஞ்சள் கொத்து, இஞ்சி, வெல்லம் போன்ற பிற பொங்கல் பொருட்களும் ஒரே இடத்தில் கிடைக்கும் வகையில் கோயம்பேடு அங்காடி நிர்வாகம் சார்பில் சுமார் 7 ஏக்கர் பரப்பளவில் பொங்கல் சிறப்பு சந்தை அமைக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து மேலும் பல லாரிகளில் கரும்புகள் வந்த வண்ணம் உள்ளன. 20 கரும்புகள் கொண்ட ஒரு கட்டு, கரும்பின் தரத்தைப் பொறுத்து ரூ.300 முதல் ரூ.600 வரை விற்பனை செய் யப்படுகிறது. ஒருசிலர் ஒரு கட்டு ரூ.800 வரையிலும் விற்பனை செய்தனர்.

## உசிலம்பட்டியில் மல்லிகைப் பூ கிலோ ரூ.12,000-க்கு விற்பனை!

**மதுரை, ஜன.11:**

தமிழகம் முழுவதும் உள்ள மலர் சந்தைகளில் மதுரை மல்லிகைப் பூவுக்கு தனி வரவேற்பு உள்ளது. மதுரை மல்லியின் மணமும், வெள்ளை நிறமும், குண்டு குண்டாக காணப்படும் தரமும் பார்ப்போர் மனதை கொள்கை கொள்ளும். ஆனால், கரோனா காலத்துக்குப் பிறகு மதுரை மல்லிகைப் பூ சாகுபடி பரப்பு குறைந்ததால், நிரந்தரமாகவே மல்லிகைப் பூ பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. அதனால், தற்போது சாதாரண நாட்களிலேயே மல்லிகைப் பூ விலை அதிகமாவும், முகூர்த்த நாட்களில் உச்சமும் தொடுகிறது.

தற்போது பனிக்காலம் என்பதால், மதுரை மல்லிகைப் பூ உற்பத்தி மேலும் குறைந்துள்ளது. இதனால், கடந்த சில நாட்களாகவே மதுரை மாட்டுத்தாவணி பூ மார்க்கெட்டுக்கு மல்லிகைப் பூ வரத்து குறைந்தது. இந்நிலையில், இன்று பூக்கள் வரத்து முற்றிலும் இல்லை. இதனால், உசிலம்பட்டி மலர் சந்தையில் மதுரை மல்லிகைப் பூ கிலோ ரூ.12 ஆயிரத்துக்கு விற்பனையானது. இது மதுரை மல்லிகைப் பூ விற்பனையில் புதிய உச்சமும், வரலாறும் ஆனது.

# வைகுண்ட ஏகாதசியையொட்டி கடந்த 10 நாட்களில் 7.83 லட்சம் பக்தர்கள் சாமி தரிசனம்: இனி அதிர்ஷ்டம் இருந்தால் தான் ஏழுமலையான் தரிசனம்!

**திருப்பதி, ஜன.11:**

திருப்பதி ஏழுமலையான் கோயிலில், ரூ.300 சிறப்பு தரிசனம், ஆர்ஜித சேவைகள், ஸ்ரீவாணி அறக்கட்டளை (ரூ.10,500) டிக்கெட்டுகள் என அனைத்தும் ஆன்லைன் முன்பதிவு முறை அமல்படுத்தப்படுவதால், இனி அதிர்ஷ்டம் இருந்தால் மட்டுமே திருப்பதி ஏழுமலையானை ஒரு பக்தன் தரிசிக்க இயலும் எனும் நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு பக்தர்களிடையேயும் கடும் அதிருப்தி நிலவி வருகிறது.

இன்று முதல் ஸ்ரீவாணி அறக்கட்டளை டிக்கெட் வழங்கும் முறையிலும் மாற்றம் கொண்டு வரப்பட்டுள்ளது. அதாவது, ஒரு பக்தர், ரூ.10,000 தேவஸ்தானத்திற்கு நன்கொடை வழங்கி, ரூ.500 டிக்கெட் கட்டணமாக செலுத்தி (மொத்தம் ரூ.10,500) சுவாமியை தரிசித்து வந்தனர்.

இதற்காக திருமலையில் தினமும் 800 டிக்கெட்டுகளும், திருப்பதி விமான நிலையத்தில், விமான பயணிகளுக்கென 200 டிக்கெட்டுகளும் என மொத்தம் நாள் ஒன்றுக்கு 1,000 டிக்கெட்டுகளை வழங்கி வந்தது. இதற்கு பக்தர்களிடையே கடும் போட்டி நிலவியது.



ஆனால், இன்று (9-ம் தேதி) முதல் இதுவும் ரத்து செய்யப்பட்டு, காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை ஸ்ரீவாணி அறக்கட்டளை டிக்கெட் தேவைப்படும் பக்தர்கள் தங்களது செல்போன் மூலம் டிக்கெட்டுகளை ஆன்லைன் மூலம் முன்பதிவு செய்து கொள்ள வேண்டும்.

பின்னர், அவர்களுக்கு மதியம் 2 மணிக்கு பின்னர், டிக்கெட்டுகள் செல்போன்களுக்கே அனுப்பி வைக்கப்படும். அதனை 'பிரிண்ட்' எடுத்து கொண்டு, அதே நாள் மாலை 4 மணிக்கு சுவாமியை தரிசிக்கலாம். இது இன்று முதல் அமலுக்கு வருகிறது. இதுவும் அதிர்ஷ்டம் இருந்தால்தான் டிக்கெட் கிடைக்கும்.

800 பேருக்கும் மேல் டிக்கெட்டை முன்பதிவு செய்திருந்தால், மீதமுள்ளவர்களுக்கு டிக்கெட் கிடைக்காது. இவர்கள் மறு நாள் மீண்டும் இதேபோல் தங்களது அதிர்ஷ்டத்தை சோதித்து கொள்ள வேண்டும்.

### 7.83 லட்சம் பக்தர்கள் சாமி தரிசனம்

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் வைகுண்ட ஏகாதசியையொட்டி கடந்த 10 நாட்களில் 7.83 லட்சம் பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர். ரூ.41.14 கோடி உண்டியல் காணிக்கை கிடைத்துள்ளது. இதுதொடர்பாக அறங்காவலர் குழு தலைவர் கூறியதாவது:-

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் வைகுண்ட ஏகாதசியையொட்டி கடந்த மாதம் 30-ந்தேதி வைகுண்ட வாயில் திறக்கப்பட்டு நேற்று வரை 10 நாட்களுக்கு பக்தர்கள் அனுமதிக்கப்பட்டனர். இந்த ஆண்டு எந்தவித அசம்பாவித சம்பவங்களும் நடைபெறாமல் 2 ஆயிரம் போலீசார், 1,150 தேவஸ்தான விஜிலென்ஸ் பாதுகாப்பு பணியாளர்கள், மாவட்ட நிர்வாகத்தினருடன் இணைந்து திருப்பதி தேவஸ்தான அதிகாரிகள் முழு அர்ப்பணிப்புடன் பக்தர்களுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொண்டனர்.

10 நாட்களில் 7.83 லட்சம் பக்தர்கள் சாமி தரிசனம் செய்து உண்டியலில் ரூ.41.14 கோடி காணிக்கை செலுத்தியுள்ளனர். 44 லட்சம் லட்டுகளை பக்தர்கள் பெற்று சென்றுள்ளனர். 2.60 லட்சம் பக்தர்கள் மொட்டை அடித்து தங்கள் தலைமுடிகளை காணிக்கையாக செலுத்தினர். கடந்த ஆண்டு 6.83 லட்சம் பக்தர்கள் சாமி தரிசனம் செய்த நிலையில் இந்த ஆண்டு ஒரு லட்சம் பக்தர்கள் கூடுதலாக வைகுண்ட வாயில் வழியாக சாமி தரிசனம் செய்துள்ளனர்.

கடந்த ஆண்டை காட்டிலும் 10 லட்சம் லட்டுகள் கூடுதலாக தயார் செய்து பக்தர்களுக்கு தட்டுப்பாடு இல்லாமல் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

# ஆந்திரத்தைச் சேர்ந்த மாணவர் அமெரிக்காவில் மாயம்! தேடும் பணி தீவிரம்!!

**விஜயவாடா, ஜன.11:**

ஆந்திர மாநிலம் குண்டூர் பகுதியைச் சேர்ந்த ஹரி கிருஷ்ணா ரெட்டி (24) என்பவர் அமெரிக்காவின் ஹூஸ்டன் பல்கலையில் எம்எஸ் படித்து வந்த நிலையில், அவரைக் காணவில்லை என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

அலாஸ்காவுக்கு கிறிஸ்துமஸ் விடுமுறையைக் கொண்டாட தனியாக சுற்றுலா சென்ற ஹரி, டிச.31ஆம் தேதியன்று காணாமல் போனதாகவும், அவரைப் பற்றி தகவல் எதுவும் கிடைக்கவில்லை என்றும் கூறப்படுகிறது.

டெக்ஸாஸிலிருந்து டிச.22ஆம் தேதி தனியாக சுற்றுலா புறப்பட்ட ஹரி, டெனாலி என்ற இடத்தில் அறையை வாடகைக்கு எடுத்து தங்கியிருந்துள்ளார். அங்கிருந்து, டிசம்பர் 31ஆம் தேதி அவரது தொடர்பு எண்ணுக்கான சிக்னல் கடைசியாகக் கிடைத்துள்ளது.

அதன்பிறகு அவர் எங்குச் சென்றார் என்ற தகவல் எதுவும் கிடைக்கவில்லை. அவரது நண்பர்கள், உள்ளூர் காவல்துறை உதவியுடன் காணாமல் போன ஹரியை தேடும் பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். மக்கள் அதிகம் கூடும் இடங்களில் அவரது புகைப்படத்துடன் நோட்டீஸ்கள் ஒட்டப்பட்டு, சமூக வலைத்தளங்களிலும் அவரைப் பற்றிய தகவல்கள் வெளியிடப்பட்டு வருகிறது. அலாஸ்காவில், டிச.31ஆம் தேதி வெப்பநிலை மைனஸ் 40 டிகிரி செல்சியஸ் அளவுக்குக் குறைந்துள்ளது. இதுபோன்ற காலநிலையில் பயணிகள் பெரும்பாலும் அலாஸ்கா செல்ல மாட்டார்கள். ஆனால், ஹரி ஏன், அலாஸ்காவை தேர்வு செய்தார், தனியாக சுற்றுலா செல்ல முடிவு செய்தது ஏன் என்பது குறித்தும் காவல்துறை விசாரித்து வருகிறது.

# ஜவுளித் துறை தரவுக் கட்டமைப்பு மேம்பாடு 15 மாநிலங்களுடன் மத்திய அரசு ஒப்பந்தம்

**புதுடெல்லி, ஜன.11:**

ஜவுளித் துறை சார்ந்த ஆராய்ச்சி, மதிப்பீடு, கண்காணிப்பு, திட்டமிடல் மற்றும் புத்தாக்க நிறுவனங்கள் (டெக்ஸ்-ராம்ப்ஸ்) திட்டத்தின் கீழ், அந்தத் துறையில் தரவுக் கட்டமைப்பை வலுப்படுத்த 15 மாநிலங்களுடன் மத்திய ஜவுளித்துறை அமைச்சகம் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

இது குறித்து ஜவுளித்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஜவுளித் துறை தரவுக் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான செயலமைப்பை உருவாக்க 15 மாநிலங்களுடன் மத்திய அரசு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. டெக்ஸ்-ராம்ப்ஸ் திட்டத்தின் கீழ் இந்த ஒப்பந்தம் கையொப்பமானது. ஜவுளித் துறை சார்ந்த புள்ளிவிவரங்களின் தரம், நேரத் துல்லியம், நம்பகத்தன்மையை மேம்படுத்த இந்த ஒப்பந்தம் வழிவகை செய்கிறது. குவாஹாட்டியில் நடைபெற்ற தேசிய ஜவுளித் துறை அமைச்சர்கள் மாநாட்டில் இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமானது.

டெக்ஸ்-ராம்ப்ஸ் திட்டத்தின் கீழ், கைத்தறி, கைவினை, ஆடை உள்ளிட்ட முக்கிய துறைகளின் வளர்ச்சிக்கான ஒருங்கிணைந்த திட்டமிடல் மேற்கொள்ளப்படுகிறது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 'அமித்ஷாவுக்கு எதிரான ஆதாரங்களை கொண்ட பென் டிரைவ் என்னிடம் உள்ளது' - மம்தா பானர்ஜி

**கொல்கத்தா, ஜன.11:**

மேற்கு வங்க மாநிலத்தில் உள்ள திரிணாமுல் காங்கிரஸ் ஐ.டி. பிரிவுத் தலைவருக்கு சொந்தமான இடங்களில் கடந்த வியாழக்கிழமை அமலாக்கத்துறையினர் நடத்திய சோதனைகளை கண்டித்து திரிணாமுல் காங்கிரஸ் கட்சியினர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

மேற்கு வங்க முதல்-மந்திரி மம்தா பானர்ஜி, அமலாக்கத்துறை சோதனையை கண்டித்து கொல்கத்தாவில் மாபெரும் பேரணி நடத்தினார். இதன் பின்னர் பேசிய அவர், "நிலக்கரி ஊழல் பணம் டெல்லியில் உள்ள தலைவர்களிடம் சென்று சேர்ந்துள்ளது. என்னிடம் ஆதாரங்கள் இருக்கின்றன. தேவைப்பட்டால் அதை நான் வெளியிடுவேன்.

நிலக்கரி ஊழல் பணம் பா.ஜ.க.வை சேர்ந்த சுவேந்து அதிகாரி மூலம் மத்திய மந்திரி அமித்ஷாவுக்கு போயிருக்கிறது. அமித்ஷாவுக்கு எதிரான ஆதாரங்களை கொண்ட பென் டிரைவ் என்னிடம் உள்ளது. நான் வழக்கமாக எதிர்வினை ஆற்றுவதில்லை. ஆனால் யாராவது என்னைத்தூண்டிவிட்டால், நான் அவர்களை விடமாட்டேன்."

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# சீனாவுக்கு இந்தியாவின் ஏற்றுமதி 33 சதவீதம் அதிகரிப்பு

**புதுடெல்லி, ஜன.11:**

ரஷியாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்கும் நாடுகளை தண்டிக்க அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் நடவடிக்கை எடுத்து வருகிறார். அதன்படி ரஷியாவிடம் இருந்து இந்தியா மலிவு விலையில் கச்சா எண்ணெய் வாங்குவதை தடுப்பதற்காக இந்திய பொருட்கள் மீது கூடுதலாக 25 சதவீத வரி விதித்தார்.

இதன் தொடர்ச்சியாக, ரஷியாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை இந்தியா, சீனா, பிரேசில் ஆகிய நாடுகள் கைவிடுவதற்காக, அந்நாடுகள் மீது 500 சதவீத வரி விதிக்க டிரம்ப் திட்டமிட்டுள்ளார். இது தொடர்பாக புதிய மசோதா ஒன்றை அமெரிக்க செனட் உறுப்பினர் லிண்ட்சே கிரஹாம் மற்றொரு உறுப்பினர் புளுமெந்தாருடன் இணைந்து உருவாக்கி இருக்கிறார்.

ரஷியா பொருளாதார தடை மசோதா எனப்படும் இந்த மசோதாவுக்கு டிரம்ப் தற்போது ஒப்புதல் அளித்து உள்ளார். இது விரைவில் நிறைவேற்ற முடிவு செய்யப்பட்டு உள்ளது. இந்திய பொருட்களுக்கு அமெரிக்கா அதிக வரி விதிப்பதால், ஏற்றுமதிக்கு வேறு நாடுகளை இந்தியா நாடத் தொடங்கி உள்ளது. அதன்படி, இந்தியா அதிகமாக ஏற்றுமதி செய்யும் நாடாக சீனா உருவெடுத்துள்ளது.

நடப்பு நிதியாண்டில், ஏப்ரல் முதல் நவம்பர் மாதம் வரையிலான காலத்தில் சீனாவுக்கு இந்தியா ஏற்றுமதி செய்த பொருட்களின் மதிப்பு 1,222 கோடி டாலராக உயர்ந்துள்ளது. இது, கடந்த நிதியாண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் 33 சதவீதம் அதிகம். எண்ணெய் உணவுப்பொருட்கள், கடல்சார் தயாரிப்புகள், தொலைத்தொடர்பு சாதனங்கள், மசாலா பொருட்கள் ஆகியவற்றால் ஏற்றுமதி அதிகரித்துள்ளது.

# கேரள பள்ளிகளில் மலையாளம் கட்டாயம் - மசோதாவுக்கு கர்நாடக மாநிலம் எதிர்ப்பு

**பெங்களூரு, ஜன.11:**

கேரள பள்ளிகளில் 10-ம் வகுப்பு வரை மாணவர்கள் கட்டாயமாக மலையாளம் கற்க வகை செய்யும் சட்ட மசோதா கடந்த ஆண்டு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மசோதாவை விரைவில் சட்டமாக்க மாநில அரசு தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இதற்கு கர்நாடக அரசு கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக கர்நாடக எல்லையோர மக்கள் வளர்ச்சி வாரியத்தின் சார்பில் அதன் செயலாளர் பிரகாஷ் மத்திஹள்ளி உள்ளிட்ட நிர்வாகிகள் கேரள மாநில ஆளுநர் ராஜேந்திர அர்லேகரிடம் மனு அளித்தனர்.

அதில் கூறியிருப்பதாவது: கேரளாவின் வயநாடு, காசர்கோடு ஆகிய எல்லையோர மாவட்டங்களில் கன்னடர்கள் பரவலாக வாழ்கின்றனர். குறிப்பாக காசர்கோடு மாவட்டத்தில் 70 சதவீதத்துக்கும் அதிகமான எண்ணிக்கையில் கன்னடர்கள் இருக்கின்றனர். இவர்கள் தங்களின் தாய்மொழியான கன்னடத்தை கற்று வருகின்றனர்.

கேரள அரசின் மலையாள கட்டாய மசோதா அமல்படுத்தப்பட்டால், கன்னடர்கள் கன்னடம் கற்க முடியாத நிலை ஏற்படும். அரசியலமைப்பின் 350-வது பிரிவு மொழி சிறுபான்மையினரின் உரிமைகளை பாதுகாப்பது மாநிலத்தின் கடமை என்று குறிப்பிடுகிறது. கேரள அரசு மலையாளத்தை கட்டாயமாக்குவது மொழி சிறுபான்மையினரின் உரிமைகளுக்கு எதிரானது. இந்திய அரசியலமைப்பு சட்டத்துக்கு எதிரான அந்த மசோதாவை நிராகரிக்க வேண்டும். இவ்வாறு மனுவில் குறிப்பிடப்பட்டு உள்ளது. கர்நாடக அரசின் இந்த நடவடிக்கைக்கு கேரள அரசு கடுமையாக எதிர்ப்பு தெரிவித்திருக்கிறது.

# போலி வங்கி கணக்குகள்... நூதன முறையில் ரூ.11 கோடி மோசடி - ஒடிசாவில் கும்பல் கைது

**புதுடெல்லி, ஜன.11:**

ஒடிசாவின் கந்தமால் மாட்டத்தில் தனிநபர்களின் பெயர்களில் போலியாக வங்கி கணக்குகள் தொடங்கி, அவற்றின் உதவியுடன் நூதன முறையில் ரூ.11 கோடி வரை மோசடியில் ஈடுபட்ட கும்பலை போலீசார் கைது செய்துள்ளனர்.

இதுபற்றி உதவி போலீஸ் சூப்பிரெண்டு ராமேந்திர பிரசாத் கூறும்போது, 3 பெண்கள் உள்ளிட்ட 5 பேர் கொண்ட கும்பல் கைது செய்யப்பட்டு உள்ளனர்.




அவர்கள், வெவ்வேறு பெயர்களில் போலியாக வங்கி கணக்குகளை தொடங்கி, சைபர் குற்றங்களில் ஈடுபடுவோருக்கு, அவர்கள் பயன்படுத்தி கொள்ள உதவியாக அவற்றை கொடுத்து விடுவார்கள் என்றார்.

இதற்கு முன்பு, 22 சைபர் குற்ற வழக்குகளில் ரூ.6 கோடி வரை மோசடி நடந்து உள்ளது. இதில் ஒடிசாவின் கந்தமால் மாவட்டத்தில் உள்ள நபர்களுக்கு தொடர்பு இருக்கலாம் என தகவல்கள் வெளிவந்தன என கூறினார். இதுதொடர்பாக நடந்த விசாரணையில் மேற்கண்ட திடுக்கிடும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

இந்த கும்பலில் குற்றம் சாட்டப்பட்ட நபர்களிடமிருந்து பல்வேறு வங்கிகளில் தொடங்கப்பட்ட 16 போலி வங்கி வைப்பு கணக்குகளை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். அவர்களிடம் இருந்து, 8 ஏ.டி.எம். கார்டுகள், ஒரு லேப்டாப், 11 மொபைல் போன்கள் மற்றும் பாஸ்போர்ட் ஒன்று ஆகியவற்றையும் போலீசார் பறிமுதல் செய்துள்ளனர்.

இந்த கும்பலில் ஒருவர் ஒடிசாவின் புவனேஸ்வர் நகரில் செயல்படும் ஒரு தனியார் நிதி நிறுவனத்தின் ஊழியராக உள்ளார். துசார்காந்தி தாஸ் என்ற அந்நபருடன், குற்றம் சாட்டப்பட்டவர்களான அபினாஷ் மகபத்ரா, கிரண் குமார் பெஹேரா, கோபால் சிங் மற்றும் பாதல் குமார் ஸ்வைன் ஆகிய 4 பேருக்கு எதிராகவும் வழக்கு பதிவு செய்யப்பட்டு உள்ளது.

இதுவரை ரூ.11 கோடி வரை மோசடி நடந்துள்ளது தெரிய வந்துள்ளது. இந்த சைபர் மோசடியில் வேறு சில நபர்களுக்கும் தொடர்பு இருக்க கூடும் என போலீசார் சந்தேகம் தெரிவித்து உள்ளனர். தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது.

## விளையாட்டு செய்திகள்

# பிரிஸ்பேன் ஓபன் டென்னிஸ் அரையிறுதியில் சபலென்கா ; ரைபாகினா அதிர்ச்சி தோல்வி

**சிட்னி, ஜன.11:**

ஆஸ்திரேலியா ஓபனுக்கு முன்னோட்டமாக கருதப்படும் பிரிஸ்பேன் ஓபன் டென்னிஸ் போட்டி இறுதிக் கட்டத்தை எட்டியுள்ள நிலையில், வெள்ளியன்று மகளிர் ஒற்றையர் பிரிவின் காலிறுதி ஆட்டங்கள் நடைபெற்றன. டென்னிஸ் உலகின் முதல்நிலை வீராங்கனையான பெலாரசின் சபலென்கா தனது காலிறுதி ஆட்டத்தில் அமெரிக்காவை சேர்ந்த மேடிசன் கீஸை எதிர்கொண்டார்.

தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய சபலென்கா 6-3, 6-3 என்ற நேர் செட் கணக்கில் எளிதாக வெற்றி பெற்று அரையிறுதி சுற்றுக்கு தகுதி பெற்றார்.

மற்றொரு காலிறுதி ஆட்டத்தில் தர வரிசையில் 4ஆவது இடத்தில் உள்ள அமெரிக்காவின் பெகுலா, இத்தாலியின் சம்சோனோவை எதிர்கொண்டார். 6-3, 7(7) - 6(3) என்ற நேர் செட் கணக்கில் பெகுலா அபார வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார். தரவரிசையில் 3ஆம் நிலை வீராங்கனையான கஜகஸ்தானின் ரைபாகினா தரவரிசையில் 11ஆவது இடத்தில் உள்ள செக் குடியரசின் முச்சோவாவை எதிர்கொண்டார். 2-6, 6-2, 4-6 என்ற செட் கணக்கில் ரைபாகினாவை வீழ்த்தி முச்சோவா அபார வெற்றி பெற்று அரையிறுதி சுற்றுக்கு முன்னேறினார்.

# "என் வழி தனி வழி" நியூஸிலாந்து கிரிக்கெட் அணியில் தமிழர்

**புதுடெல்லி, ஜன.11:**



3 ஒருநாள் மற்றும் 5 டி-20 போட்டிகளில் விளையாட நியூஸிலாந்து கிரிக்கெட் அணி இந்தியாவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது.

இந்த சுற்றுப் பயணத்தின் தொடக்க நிகழ்வான முதல் ஒருநாள் போட்டி ஜன., 11 அன்று குஜராத் மாநிலம் வதோரா வில் நடைபெற உள்ளது. இந்தப் போட்டிக்கான நியூஸிலாந்து அணியில் இடம்பெற்றுள்ள சுழற்பந்து வீச்சாளர் ஆதித்யா அசோக் தமிழ்நாட்டை பூர்வீகமாகக் கொண்டவர். வேலூரில் பிறந்த அவருக்கு 4 வயதாக இருக்கும் போது அவரது குடும்பம் நியூஸிலாந்து நாட்டிற்கு இடம்பெயர்ந்தது.

அவரது உறவினர்கள் வேலூரில் தான் வசித்து வருகிறார்கள். கடந்த ஆண்டு சென்னைக்கு வந்து சிஎஸ்கே (ஜபிஎல் சென்னை அணிக்கு சொந்தமானது) அகாடமியில் சில வாரங்கள் பயிற்சியில் ஈடுபட்ட அவர் ஒருநாள் தொடரில் சாதிக்க ஆர்வமுடன் உள்ளார். இந்தியா வந்த பின்பு செய்தியாளர்களிடம் பேசிய ஆதித்யா அசோக், "அதிர்ஷ்டவசமாக சென்னைக்கு வந்து பயிற்சி எடுக்க வாய்ப்பு கிடைத்தது. அதற்காக நியூஸிலாந்து கிரிக்கெட் வாரியத்துக்கு நன்றி கடன்பட்டுள்ளேன்.

இந்த பயிற்சியின் மூலம் நிறைய விஷயங்களை கற்றுக்கொண்டேன். குறிப்பாக இங்குள்ள கரிசல் மண், செம்மண் போன்ற ஆடுகளங்களில் எப்படி பந்து வீசுவது என்பதை அறிந்து கொண்டேன். அந்த அனுபவம் ஒருநாள் தொடரில் மிகவும் உதவிகர மாக இருக்கும் என்று நம்புகிறேன்" என அவர் கூறினார்.

ரஜினி ரசிகர் 23 வயதான ஆதித்யா அசோக் இதுவரை 2 ஒருநாள் மற்றும் ஒரு டி-20 போட்டியில் விளையாடியுள்ளார். அவர் தமிழ் சினிமாவில் பிரபலமான 'என் வழி தனி வழி' (படையப்பா திரைப்படம் - ரஜினி) என்ற வசனத்தை கையில் பச்சை குத்தி யிருப்பதும் கவனிக்கத்தக்கது.

# குத்துச்சண்டை இறுதிச் சுற்றில் ஜாதுமணி, பவன்

**புதுடெல்லி, ஜன.11:**

தேசிய சீனியர் குத்துச்சண்டை போட்டியின் 50-55 கிலோ ஆடவர் பிரிவில் ஜாதுமணி சிங், பவன் பர்த்வால் முன்னேறியுள்ளனர். டெல்லி கிரேட்டர் நொய்டாவிலுள்ள கவுதம புத்தா பல்கலைக்கழக வளாகத்தில் இப்போட்டி நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற அரை இறுதியில் ஜாதுமணி 5-0 என்ற கணக்கில் அமித் பங்காலையும், பவன் பர்த்வால், மணிப்பூரின் விக்டர் சிங்கையும் வீழ்த்தினர்.

மகளிர் பிரிவு 45-48 கிலோ பிரிவு இறுதிச் சுற்றுக்கு உலக சாம்பியன் மீனாட்சி, நிகத் ஜரீன் ஆகியோர் முன்னேறியுள்ளனர்.

# தொடர்ந்து அமளியில் ஈடுபட்ட ஆம் ஆத்மி எம்எல்ஏ.ககள் 4 பேர் சஸ்பெண்ட்

**புதுடெல்லி, ஜன.11:**

டெல்லி சட்டப்பேரவை கூட்டத்தொடர் நடைபெற்று வருகிறது. இந்நிலையில், ஆம் ஆத்மி மூத்த தலைவர் ஆதிஷி, சீக்கியர்கள் வணங்கும் குரு தேஜ் பகதூர் குறித்து அவதூறான கருத்துகளை கூறியதாக ஆளும் பாஜக.வினர் குற்றம் சாட்டினர்.

அவரை எம்எல்ஏ பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்று பாஜக.வினர் குரல் எழுப்பினர். இதையடுத்து ஆதிஷியின் பேச்சுகள் அடங்கிய வீடியோவை தடயவியல் ஆய்வுக்கு அனுப்ப சபாநாயகர் விஜயேந்திர குப்தா உத்தரவிட்டார். இந்நிலையில், நேற்று காலை பேரவை கூடியது. அப்போது ஆத் ஆத்மி எம்எல்ஏ.க்கள் அவை நடுவில் வந்து, "ஆதிஷியின் பேச்சுகள் அடங்கிய வீடியோவை பாஜக.வினர் தொடர்ந்து சமூக வலைதளங்களில் வெளியிடுகின்றனர். இந்த விவகாரத்தை தடயவியல் ஆய்வுக்கு சபாநாயகர் அனுப்பி உள்ளார். அதனால், வீடியோவை வெளியிடக் கூடாது என்று பாஜக.வினருக்கு உத்தரவிட வேண்டும்" என்று வலியுறுத்தினர். அதற்கு பாஜக எம்எல்ஏ.க்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இதையடுத்து ஆம் ஆத்மிஎம்எல்ஏ.க்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டனர். இதையடுத்து, ஆம் ஆத்மி எம்எல்ஏ.க்கள் சோம் தத், ஜர்நெய்ல் சிங், சஞ்சீவ் ஜா, குல்தீப் குமார் ஆகிய 4 பேரையும் கூட்டத்தொடர் முழுவதும் சஸ்பெண்ட் செய்வதாக சபாநாயகர் அறிவித்தார். இதனால் பரபரப்பு ஏற்பட்டது.

# நாம் உலகின் சிதைவுக்கு எதிராகப் போராட வேண்டும் - பிரான்ஸ் அதிபர் மெக்ரான்

**பாரிஸ், ஜன.11:**

இந்தியாவின் மத்திய வெளியுறவுத்துறை மந்திரி எஸ்.ஜெய்சங்கர், பிரான்ஸ் நாட்டுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார். அவர் பிரான்ஸ் வெளியுறவுத் துறை மந்திரி ஜீன் - நோயல் பரோட்டை சந்தித்து பேசினார்.

இந்த நிலையில் பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மெக்ரானை எஸ்.ஜெய் சங்கர் சந்தித்து பேசினார். அப்போது இருவரும் இந்தியா-பிரான்ஸ் இடையேயான நல்லுறவு குறித்து விவாதித்தனர். இதுதொடர்பாக எஸ். ஜெய்சங்கர் தனது எக்ஸ் வலைதள பக்கத்தில் கூறும் போது, பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மெக்ரானை சந்தித்து, பிரதமர் மோடியின் நல்வாழ்த்துக்களை அவரிடம் தெரிவித்தேன். சமகால உலக நிகழ்வுகள் குறித்த அவரது பார்வைகளையும், நமது கூட்டாண்மை மீதான நேர்மறையான உணர்களையும் நான் ஆழமாக பாராட்டுகிறேன் என்று தெரிவித்தார்.

பாரிசில் நடந்த பிரான்சின் தூதர்கள் மாநாட்டில் மெக்ரான் பேசியதாவது:- நாம் உலகின் சிதைவுக்கு எதிராகப் போராட வேண்டும். ஜி-7 அமைப்பு என்பது சீனாவுக்கு எதிரான ஒரு குழுவாகவோ அல்லது பிரிக்ஸ் அமைப்புக்கு எதிரான குழுவாகவோ இருக்கக்கூடாது. பிரிக்ஸ் ஒரு போதும் ஜி-7-க்கு எதிரான குழுவாக இருக்க முடியாது. இந்தியா பிரிக்ஸ் அமைப்பின் தலைவராக இருப்பதால், அது மற்ற நாடுகளுக்கு ஒரு உறவு பாலங்களை உருவாக்க முடியும். ஜி7-பிரிக்ஸ் இணைந்து இணைந்து பணியாற்றுவது அவசியம். முக்கிய துறைகளில் இந்தியா, ஆஸ்திரேலியா, இந்தோனேசியா கூட்டாளிகளாக உள்ளனர். இந்தியாவுடனான உறவை மேலும் வலுப்படுத்துவோம். அந்நாட்டுடன் இணைந்து பணியாற்ற விரும்புகிறோம். அடுத்த மாதம் இந்தியாவிற்கு பயணம் மேற்கொள்ள உள்ளேன். அங்கு டெல்லியில் நடக்கும் செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாட்டில் கலந்துகொள்ள இருக்கிறேன் என்றார்.

# அரசுக்கு எதிராக போராட்டம் தீவிரம்: ஈரானில் அரசு கட்டிடத்திற்கு தீ வைப்பு



**தெக்ரான், ஜன.11:**

ஈரானில் பொருளாதார நெருக்கடி, விலைவாசி உயர்வு ஆகியவற்றால் அரசு மற்றும் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனிக்கு எதிராக கடந்த 10 நாட்களாக போராட்டங்கள் நடந்து வருகிறது. இதில் போராட்டக்காரர்கள்-பாதுகாப்பு படையினர் இடையே மோதல் ஏற்பட்டு வன்முறை வெடித்தது. இதில் 45 பேர் பலியாகி உள்ளனர். 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர். போராட்டத்தை கட்டுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் அது பலனளிக்கவில்லை. ஈரான் முழுவதும் போராட்டங்கள் தீவிர மடைந்து உள்ளது. இந்த நிலையில் ஈரானின் நாடு கடத்தப்பட்ட பட்டத்து இளவரசர் ரெசா பஹ்லவி ஒரு மாபெரும் போராட்டத்திற்காக ஈரான் மக்களுக்கு அழைப்பு விடுத்தார். இரவு 8 மணிக்கு ஒன்றுகூடி அனைவரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட் வேண்டும் என்று கேட்டு கொண்டார்.

இதற்கிடையே நேற்று இரவு தலைநகர் தெக்ரானில் மக்கள் திரண்டு போராட் டத்தில் ஈடுபட்டனர். அதே போல் நாட்டின் மற்ற பகுதி களிலும் போராட்டங்கள் நடந்தன. அப்போது அரசுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பப்பட்டன. போராட்டக்காரர்களுக்கு ஆதரவாக பல சந்தைகளும் கடைகளும் மூடப்பட்டன. தெக்ரானில் போராட்டம் தீவிரமாக இருந்தது. அங்கு ஆயிரக்கணக்கானோர் பேரணியாக சென்றனர். நேற்று வரை பேரணிகள் நடந்த நிலையில் போராட்டத்தில் வன்முறையும் வெடித்தது. சாலைகளில் பொருட்களை போட்டு எரித்தனர். சில இடங்களில் பாதுகாப்பு படையினருடன் மோதல்கள் ஏற்பட்டன. இஸ்பஹானில் உள்ள ஈரான் அரசின் ஒளிபரப்பு நிறுவனத்தின்கட்டிடத்திற்கு தீ வைக்கப்பட்டது. இதில் அக்கட்டிடம் கொளுந்துவிட்டு எரிந்தது. அதேபோல் ஈரானின் தெற்கில் உள்ள முக்கிய துறைமுக நகரமான பந்தர் அப்பாசில் தெருக்களில் ஆயிரகணக்கானோர் திரண்டு போராட்டம் நடத்தி வருகிறார்கள். இதையடுத்து ஈரான் முழுவதும் இணையம் மற்றும் செல்போன் சேவைகள் முடக்கப்பட்டன.

# '1 கோடி உயிர்களை காப்பாற்றியதற்காக பாகிஸ்தான் பிரதமர் எனக்கு நன்றி கூறினார்' - டிரம்ப் மீண்டும் பேச்சு



**வாஷிங்டன், ஜன.11:**

இந்தியா- பாகிஸ்தான் இடையேயான போரை வர்த்தகத்தை காரணம் காட்டி நிறுத்தியதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் பலமுறை கூறினார். ஆனால் அவரது பேச்சை இந்திய அரசு திட்டவட்டமாக மறுத்துள்ளது. இருப்பினும் டிரம்ப் தனது கருத்தை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்.

இந்த நிலையில், 1 கோடி உயிர்களை காப்பாற்றியதற்காக பாகிஸ்தான் பிரதமர் தனக்கு நன்றி கூறினார் என்று டிரம்ப் மீண்டும் பேசியுள்ளார். இது தொடர்பாக வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தபோது அவர் கூறியதாவது;-

"பாகிஸ்தான் பிரதமர் அமெரிக்காவுக்கு வந்தபோது, வெளிப்படையான அறிக்கையை வெளியிட்டார். இந்தியா மற்றும் பாகிஸ்தானைச் சேர்ந்த சுமார் 1 கோடி பேரின் உயிர்களை காப்பாற்றியதற்காக அமெரிக்க அதிபருக்கு நன்றி தெரிவிப்பதாக அவர் கூறினார்.

போர்களை தடுத்து நிறுத்தியது குறித்து நான் விளம்பரம் செய்து கொள்ள விரும்பவில்லை. அதே சமயம், போரை வேறு யாரும் தடுத்து நிறுத்தவில்லை. வரலாற்றில் நோபல் பரிசை பெறுவதற்கு என்னை விட தகுதி வாய்ந்த வேறு ஒரு நபர் இருக்க முடியாது என நினைக்கிறேன்.

மக்களுக்கு என்னை பிடித்தாலும் சரி, பிடிக்காவிட்டாலும் சரி. நான் 8 பெரிய போர்களை நிறுத்தியுள்ளேன்.

அவற்றில் சில போர்கள் 30 ஆண்டுகளுக்கு மேலாக நீடித்து வந்தன. இந்தியா-பாகிஸ்தான் போல் சில போர்கள் சமீபத்தில் தொடங்கின.

அந்த போரில் 8 விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்ட நிலையில், நான் அவசர உத்தரவுகள் மூலம் போரை நிறுத்தினேன். கோடிக்கணக்கான உயிர்களை நான் காப்பாற்றினேன்."

இவ்வாறு அவர் கூறினார்.

# வங்காளதேச முன்னாள் பிரதமர்: அமெரிக்க நகர தெருவுக்கு கலிதா ஜியா பெயர்




**மிக்சிகன், ஜன.11:**

வங்காள தேசத்தின் முன்னாள் பிரதமரும், வங்க தேச தேசியவாத கட்சியின் தலைவருமான கலிதா ஜியா உடல் நலக்குறைவு காரணமாக கடந்த டிசம்பர் மாதம் 30-ந்தேதி காலமானார். இவர் வங்காளதேசத்தில் 3 முறை பிரதமராக பதவி வகித்தவர்.

இந்தநிலையில் அமெரிக்காவின் மிக்சிகன் மாகாணம் ஹாம்ட்ராம்க் நகரத்தில் அமைந்துள்ள ஒரு தெருவுக்கு கலிதா ஜியாவை கவுரவிக்கும் வகையில் 'கலிதா ஜியா தெரு' என பெயர் மாற்றம் செய்யப்பட்டு உள்ளது. ஹாம்ட்ராம்க் நகரில் உள்ள ஜோசப் காம்பாவ் மற்றும் கோனால்ட் தெருக்களுக்கு இடையிலான சாலையின் ஒரு பகுதிக்கு கலிதா ஜியாவின் பெயரைச்சூட்டும் திட்டம் நகர சபையால் அங்கீகரிக்கப்பட்டது. அந்த நகர சபை கவுன்சிலில் தற்போது வங்காளதேச வம்சா வளியைச் சேர்ந்த 4 பேர் உள்ளனர். அவர்களின் தீவிர முயற்சியால் அந்த தெருவுக்கு கலிதா ஜியா பெயர் சூட்டப்பட்டுள்ளது.

ஹாம்ட்ராம்க் நகரம் அமெரிக்காவில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் முதல் நகரமாக உள்ளது. கடந்த 2013-ஆண்டு முஸ்லிம் பெரும் பான்மை நகரமாக மாறிய இந்நகரம் 2022-ஆண்டு அனைத்து முஸ்லிம்களையும் கொண்ட நகர சபையைக் கொண்ட முதல் அமெரிக்க நகரம் ஆனது. இந்த நகரத்தின் மக்கள் தொகையில் 40 சதவீதத்துக்கும் அதிகமானோர் வெளி நாட்டில் பிறந்தவர்கள். மேயர் மற்றும் முழு நகர சபை உட்பட அதன் குடியிருப்பாளர்களில் கிட்டத்தட்ட 70 சதவீதம் பேர் முஸ்லிம்கள் ஆவர்.

இதேபோல் ஏற்கனவே, சிகாகோவில் ஒரு சாலைக்கு மறைந்த வங்க தேச ஜனாதிபதியும் கலிதா வின் கணவருமான ஜியாவுர் ரஹ்மானின் பெயர் சூட்டப் பட்டது குறிப்பிடத்தக்கது.

# கரீபியன் கடல் பகுதிகளில் மற்றொரு எண்ணெய் கப்பலை சிறைபிடித்த அமெரிக்கா



**வாஷிங்டன், ஜன.11:**

வெனிசுலாவில் இருந்து அமெரிக்காவுக்குள் அபாயகர போதை பொருட்கள் கடத்தப்படுகின்றன என கூறி அந்நாட்டின் அதிபர் நிக்கோலஸ் மதுரோவை டிரம்ப் அரசு கைது செய்தது. நிக்கோலஸ் மதுரோவும், அவருடைய மனைவி சிலியா புளோரசும் அமெரிக்க ராணுவ வீரர்களால் கைது செய்யப்பட்டு வெனிசுலாவில் இருந்து சில நாட்களுக்கு முன் நாடு கடத்தப்பட்டனர்.

கடல் வழியாக போதை பொருட்கள் கடத்தி வரும் கும்பல் மீது தாக்குதலை நடத்தவும், கடுமையான நடவடிக்கை எடுக்கவும் டிரம்ப் அரசு உத்தரவு பிறப்பித்து இருந்தது. இந்த தாக்குதலில் இதுவரை 80-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், போதை பொருட்கள் கடத்தலுக்கு உதவியாகசெயல்படும்எண்ணெய் கப்பல்களையும் அமெரிக்கா தொடர்ந்து கண்காணித்து அவற்றை பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வந்தது. இதன்படி, கடந்த சில நாட்களுக்கு முன்பு, ரஷியாவின் மரைனிரா என பெயரிடப்பட்ட எண்ணெய் கப்பலை வடக்கு அட்லாண்டிக் பெருங்கடல் பகுதியில் வைத்து, அமெரிக்க படையினர் சமீபத்தில் சிறைபிடித்து கொண்டு சென்றனர்.

முதலில் பெல்லா 1 என்ற பெயருடன் சென்ற அந்த கப்பல், அமெரிக்காவின் கண்காணிப்பில் இருந்து தப்புவதற்காக ரஷிய கொடியுடனுடம், பெயரை மரைனிரா என மாற்றியும் சென்றது. எனினும், தொடர்ந்து அதனை கண்காணித்தபடியே சில நாட்களாக பின்தொடர்ந்து சென்று பின்னர் அதனை அமெரிக்கா சிறைபிடித்தது. இதேபோன்று சோபியா என்ற கப்பலும் சிறைபிடிக்கப்பட்டு உள்ளது.

இந்நிலையில், ஒலினா என பெயரிடப்பட்ட மற்றொரு எண்ணெய் கப்பலை அமெரிக்க கடற்படை சிறைபிடித்து உள்ளது. அமெரிக்காவின் உள்நாட்டு பாதுகாப்பு துறை, கடற்படை உள்ளிட்ட படைகள் இணைந்து இந்நடவடிக்கையை எடுத்து உள்ளன.

இதுபற்றி அமெரிக்காவின் தெற்கு பிராந்தியத்திற்கான பாதுகாப்பு படை நேற்றிரவு வெளியிட்ட செய்தியில், எங்களுடைய படைகள் கூட்டாக இணைந்து, மேற்கத்திய பகுதியில் நடந்த சட்டவிரோதநடவடிக்கைகளை தொடர்ந்து முடக்கி வருகிறோம். குற்றவாளிகளுக்கு எந்தவித அடைக்கலமும் கிடையாது என தெரிவித்து உள்ளது.

# அமைதியே சிறந்த மருந்து... உலகளாவிய ராணுவ செலவு ரூ.243 லட்சம் கோடி; டெட்ரோஸ் அதானம் வருத்தம்



**ஜெனீவா, ஜன.11:**

உலக சுகாதார அமைப்பின் இயக்குநர் ஜெனரல் டெட்ரோஸ் அதானம் கெப்ரியேசஸ் வெளியிட்ட செய்தியில், 2024-ம் ஆண்டு உலக அளவில் ராணுவத்திற்காக செலவிடப்பட்ட தொகை சாதனை அளவாக 2.7 டிரில்லியன் அமெரிக்க டாலராக (ரூ.243 லட்சம் கோடி) உள்ளது.

எனினும், உலகளாவிய சுகாதார திட்டங்களுக்கு செலவிடுதல் பெரிய அளவில் சரிவடைந்து உள்ளது. இந்த உலகத்திற்கு உயிர்களை பாதுகாப்பதில் பெரிய அளவில் கவனம் செலுத்துவதே தற்போது தேவையாக உள்ளது. போர்களை தீவிரப்படுத்துவதில் அல்ல. அமைதியே சிறந்த மருந்து என தெரிவித்து உள்ளார்.

அவர் தொடர்ந்து, 150 நாடுகளில் பரந்து விரிந்து செயலாற்றி வரும் எங்களுக்கு, 2 ஆண்டுகளுக்கு 420 கோடி அமெரிக்க டாலர் அல்லது ஆண்டுக்கு 210 கோடி அமெரிக்க டாலர் என்ற அளவில் உறுப்பு நாடுகள் நிதியுதவி அளிக்கின்றன. இது மிக பெரிய தொகை அல்ல என நான் நினைக்கறேன். ஏனெனில் ஒவ்வொரு 8 மணிநேரத்திற்கு உலகளவில் ராணுவ செலவினத்திற்கு இந்தளவு தொகையானது செலவிடப்படுகிறது. இந்த தொகை, அதிநவீன விமானங்களில் ஒன்றான ஸ்டீல் பாம்பர் வகை விமானத்தின் விலைக்கு இணையானது. ஒவ்வோர் ஆண்டும் புகையிலை நிறுவனம் தன்னுடைய விளம்பரத்திற்காக செலவிடும் தொகையில் 4-ல் ஒரு பங்கு இந்த தொகை ஆகும் என்று வருத்தம் தெரிவித்து உள்ளார். உண்மையில், உலகில் மதிப்புமிக்க பொருட்களுக்கான விலையை யாரோ சிலர் மாற்றி நிர்ணயித்து விட்டனர் என்றே தோன்றுகிறது என்றும் அவர் வேதனை தெரிவித்து உள்ளார்.

# உக்ரைன் மீது ரஷ்யா கடும் தாக்குதல்: 4 பேர் உயிரிழப்பு

**கீவ், ஜன.11:**

ரஷ்யாவும் உக்ரைனும் 2022 பிப்ரவரி முதல் போரிட்டு வருகின்றன. இதில் ஏராளமானோர் உயிரிழந்தனர். இந் நிலையில் உக்ரைன் மீது ரஷ்யா நேற்று முன்தினம் இரவு கடும் தாக்குதல் நடத்தியது.

இதுகுறித்து உக்ரைன் அதிகாரிகள் நேற்று கூறுகையில், "36 ஏவுகணைகள், 242 டிரோன்களை பயன்படுத்தி இந்த தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் கீவ் நகரில் 4 பேர் இறந்தனர். 22 பேர் காயம் அடைந்தனர்" என்றனர். இந்த தாக்குதலுக்கு உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி கண்டனம் தெரிவித்துள்ளார்.

# ட்ரம்பிடம் போனில் பேச மோடி மறுத்ததால் இந்தியா-அமெரிக்கா வர்த்தக ஒப்பந்தம் முடக்கம்

**வாஷிங்டன், ஜன.11:**

ரஷ்யாவிடம் இருந்து இந்தியா கச்சா எண்ணெய் வாங்குவதால் இந்திய பொருட்களுக்கு அமெரிக்க அரசு 50 சதவீத வரியை விதித்து வருகிறது.

வரி விதிப்பு தொடர்பாக இருநாடுகளின் மூத்த அதிகாரிகள் பல்வேறு சுற்று பேச்சுவார்த்தைகளை நடத்தினர். இதுகுறித்து அமெரிக்க வர்த்தக அமைச்சர் ஹோவர்ட் லுட்னிக் கூறியதாவது:

இந்தியா, அமெரிக்கா இடையிலான வர்த்தக ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டு விட்டது. வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக அதிபர் ட்ரம்பை, பிரதமர் மோடி தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசுமாறு அறிவுறுத்தினேன். ஆனால் எனது கோரிக்கையை இந்திய குழுவினர் ஏற்கவில்லை. அதிபர் ட்ரம்பிடம், இந்திய பிரதமர் நரேந்திர மோடி போனில் பேச மறுத்ததால் இரு நாடுகள் இடையிலான வர்த்தக ஒப்பந்தம் முடங்கியிருக்கிறது.

எனினும் இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், வியட்நாம், மலேசியா உள்ளிட்ட நாடுகளின் தலைவர்கள் அதிபர் ட்ரம்பை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினர். அந்த நாடுகளுடன் வர்த்தக ஒப்பந்தம் அதிகாரப்பூர்வமாக கையெழுத்தாகிவிட்டது.

மூன்று வாரங்களுக்கு பிறகு இந்திய அதிகாரிகள் என்னை தொடர்பு கொண்டனர். அப்போது "3 வாரங்களுக்கு முன்பே ரயில் புறப்பட்டு சென்றுவிட்டது. இனிமேல் என்னால் ஒன்றும் செய்ய முடியாது" என்று தெளிவாக கூறிவிட்டேன். இதே பிரச்சினையின் போது பிரிட்டன் பிரதமர் கெய்ர் ஸ்டார்மர், அதிபர் ட்ரம்பை தொடர்பு கொண்டு ஒப்பந்தத்தை இறுதி செய்துவிட்டார். இவ்வாறு லுட்னிக் தெரிவித்தார்.

# விசுவாசத்துடன் உள்ள கூட்டணி நாடுகளை அமெரிக்கா மிரட்டுவது அதிர்ச்சி தருகிறது: டென்மார்க் எம்.பி.




**கோபன்ஹேகன், ஜன.11:**

வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோ ஒரு போதை பொருள் பயங்கரவாதி என்றும் அந்நாட்டில் இருந்து அமெரிக்காவுக்குள் அபாயகர போதை பொருட்கள் கடத்தப்படுகின்றன என்றும் அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் கடுமையான குற்றச்சாட்டுகளை கூறி வந்த நிலையில், நிக்கோலஸ் மதுரோவும், அவருடைய மனைவி சிலியா புளோரசும் அமெரிக்க ராணுவ வீரர்களால் கைது செய்யப்பட்டு வெனிசுலாவில் இருந்து சில நாட்களுக்கு முன் நாடு கடத்தப்பட்டனர்.

இதனை தொடர்ந்து, அவர்கள் இருவரின் மீது நியூயார்க் நகரில் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டு உள்ளது. அவர்கள் விரைவில் அமெரிக்க கோர்ட்டுகளில், அமெரிக்க மண்ணில், அமெரிக்க நீதியை பெறுவார்கள் என அமெரிக்க அட்டர்னி ஜெனரல் பமீலா போண்டி கூறினார்.

வெனிசுலாவில் உள்ள எண்ணெய் மற்றும் பிற வளங்களை குறி வைத்து அமெரிக்கா இந்த நடவடிக்கையில் ஈடுபடுகிறது என்ற குற்றச்சாட்டு கூறப்படுகிறது. வெனிசுலாவில் அத்துமீறி அமெரிக்கா நடந்து கொண்டதற்கு சர்வதேச அளவில் கண்டனம் எழுந்துள்ளது.

ரஷியா, சீனா மற்றும் ஈரான் போன்ற நாடுகள் அமெரிக்காவுக்கு கடும் கண்டனம் தெரிவித்து உள்ளன. இந்திய அரசு இதற்கு கவலை தெரிவித்துள்ளது. ஜப்பான் நாடுகளும், ஐ.நா. அமைப்பும் கூட வெனிசூலாவுக்கு ஆதரவாக பேசியுள்ளன.

கிரீன்லாந்து மற்றும் டென்மார்க் எடுத்து கொள்ளப்படும் என டிரம்ப் பேசி வருவதும் சர்ச்சையாகி உள்ளது.

இந்த நிலையில் டென்மார்க்கில் கன்சர்வேடிவ் கட்சியை சேர்ந்த எம்.பி. ராஸ்மஸ் ஜர்லோவ் நிருபர்களிடம் கூறும்போது, அமெரிக்கா எங்கள் மீது ராணுவ வீரர்களை கொண்டு மிரட்டுவது என்பது ஏற்று கொள்ள முடியாதது. ஆழ்ந்த வேதனை ஏற்படுத்துகிறது.

உங்களுக்கு தொடர்ந்து விசுவாசத்துடன் இருந்தது தவிர உங்களுக்கு எதிராக வேறெதுவும் செய்யாத நாடுகளை, கூட்டணி நாடுகளை நீங்கள் மிரட்டுவீர்கள் என்பது அதிர்ச்சி தருகிறது. நினைத்து பார்க்க முடியாதது என அமெரிக்காவின் அச்சுறுத்தலை குறிப்பிட்டு கூறினார்.

இது பிற நாடுகளுக்கும் கூட வருத்தம் ஏற்படுத்தும். ஏனெனில், டென்மார்க் மீது இதுபோன்றுபடைகள்கொண்டு மிரட்டல் விடப்படும் என்றால், எந்த நாடும் பாதுகாப்பாக இருக்காது என கூறினார்.

இதேபோன்று கிரீன்லாந்து பற்றி குறிப்பிட்ட அவர் அந்நாட்டுக்கு எந்தவித அச்சுறுத்தல்களும் இல்லை. ஒரே அச்சுறுத்தல் அமெரிக்காதான். சீனா மிரட்டி வருகிறது என்பது எல்லாம் பொய்யான புனைவுகள். சீனாவின் தூதரகமோ, சுரங்க பணிகளோ, ராணுவவீரர்களோ கிரீன்லாந்தில் இல்லை என கூறினார்.